www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

நவ.09-.15,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 230

## பங்கர் சண்டைகள்

## பறக்கும் ஷெல்கள்

## பாயும் அணிகள்

## அஜித் விருப்பங்கள்

## புலிகளுக்கு பிரேமா தூது



சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தோட்டா இல்லாத துப்பாக்கி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சமீபத்தில் ரூபவாகினிக்கு
நீதியமைச்சர் அவர்கள்
பேட்டியளித்துள்ளார்.

நாடு பிரிந்துவிடுமோ
என்று கவலைப்படுகின்ற
பேரினவாதிகளுக்கு
'அப்படி நடக்காது அஞ்சற்க'
என்று உத்தரவாதம் அளிக்கும்
தோரணையான பேட்டி அது!

வடக்கு-கிழக்கில்
கிழக்கை மூன்று துண்டுகளாக
நறுக்குதல் செய்வது!
அதில் ஒரு துண்டை
வடக்குடன் இணைக்கக்கூட
கருத்துக் கணிப்பு நடத்துவது
என்பன அரசின் புதிய யோசனைகள்!

அப்படியிருந்தும்கூட
பேரினவாதிகளின் சந்தேகம்
இன்னமும் தீரவில்லையாம்!

நறுக்கிப் போட்டால்கூட
முறுக்குடன் நிற்பார்களோ?
என்று அஞ்சுகிறார்களாம்!

அதனால்தான்
நீதியமைச்சர் அவர்கள்
உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்!

என்ன உத்தரவாதம்
கொடுத்திருக்கிறார்?

"பிராந்திய சபைகளை
கலைக்கும் அதிகாரம் உண்டு.
மத்திய அரசு
பிராந்திய சபைகள்மீது
எப்போது வேண்டுமானாலும்
கைவைக்கலாம் தலையிடலாம்"
என்றுள்ளார் அமைச்சர்.

கொலைகாரன் கையில்
துப்பாக்கியை கொடுப்பதும்,
திருடன் கையில்
வீட்டுச் சாவியைத் தருவதும்,
தமிழ் பேசும் மக்களிடம்
அதிகாரம் கொடுப்பதும்
ஒன்றுதான் என்று
பேரினவாதிகள் நினைக்கின்றனர்!

அந்தச் சந்தேகம்
நியாயம் என்பதுபோல
அரச தரப்பினரும்
விளக்கம் கூறிவருகின்றனர்!

'தோட்டா இல்லாத
துப்பாக்கிதான் கொடுக்கிறோம்.
அதைக்கூட
எப்போது வேண்டுமானாலும்
பறித்துக் கொள்ளலாம்'
என்பதுபோல் விளக்குகிறார்கள்!

அரசிடம் உள்ள
தீர்வு யோசனைகள்
திருப்திகரமானவை அல்ல!
தமிழ்பேசும் மக்களின்
அடிப்படையான
அரசியல் கோரிக்கைகளை
எவ்வகையிலும்
நிறைவு செய்பவையும் அல்ல!

வடக்கு-கிழக்கு
தமிழ் பேசும் மக்களின்
பாரம்பரிய பிரதேசம் என்பதையும்
அதன் பாதுகாப்பையும்
எவ்வகையிலும் உறுதிசெய்யாத
அதிகாரப் பரவலாக்கல்தான்
முன்வைக்கப்பட்டுள்ளது!

சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம்!
தமிழ்பேசும் மக்கள்
தனது தனித்துவத்தைப்பேண
நிலம்தான் மிக முக்கியம்!

ஆனால் நில அதிகார விடயத்தில்
பிராந்திய சபைக்கு
முழு அதிகாரம் கிடையாது!

ஆக, மொத்தத்தில்
தோட்டா இல்லாத துப்பாக்கிதான்
அரசின் யோசனைகள்!
இந்தத் துப்பாக்கியால்
தமிழ் பேசும் மக்களின்
தேசியத் தனித்துவம்
எவ்வகையிலும்
பாதுகாக்கப்படமாட்டாது!

இதற்கு எதிர்க்கட்சி
ஆதரவளிக்க வேண்டும்
என்று நாம் ஏன்
கோர வேண்டும்?

ஆளும் தரப்பும்
எதிரணியும் ஒன்றுசேர்ந்து
நம் தலையில்
பொல்லால் அடிக்கட்டும்
என்று விரும்புகிறோமோ?

இப்போது செய்யவேண்டியது
அரசின் பிரசாரத்திற்கு
துணை போவது அல்ல!

இந்த நாட்டுக்குள்
இனப்பிரச்சனைக்கு தீர்வு
எட்டாக்கனி என்பதை
உலகின் செவியில் உரைப்பதே!

அவ்வாறு உரைத்து
மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம்
கேட்பதுதான் விவேகம்!

அதை விடுத்து
ஆளும் தரப்புக்கும், எதிரணிக்கும்
இடையே மத்தியஸ்தம் செய்ய
சில தமிழ்க்கட்சிகள்
நினைப்பது விவேகமல்ல!
அவசியமும் அல்ல!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆலயம்



# ஆன்மீகம்

ஆலயத்துக்கு ஒன்று கூடிச் செல்கின்ற நாம்; கடவுள் வாசமாயிருக்கிற இடம் தூய்மையாகவும், அழகாகவும் இருக்க வேண்டும் என்று விருப்பமுடையவர்களாக, அதற்காக; செயற்படுகின்ற மக்களாக இருக்கின்றோம்.

ஆலயம் சென்றால் பக்திமானாய் இருக்கிற அநேகர் அன்றாட வாழ்விலே மற்றவர்களுக்கு விரோதமாக சூழ்ச்சி செய்வதும், உள்ளத்தை புண்படுத்தி, நிம்மதியை கெடுத்து, அவமானம் நிந்தைகளை சுமத்தி சந்தோசம் காணுகின்றனர். மாறாக "நம்மை சுத்திகரிக்க வேண்டும்; நாம் கடவுள் வாசம் பண்ணுகின்ற ஆலயமாக இருக்கிறோம்" என்பதை உணராமல் வாழ்கின்றனர்.

"ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1 கொரி 3:17)

இறைவிசுவாசியான நாம் ஒவ்வொருவரும், கடவுள் வாழும் ஆலயமாக இருக்கிறோம், என்பதை உணர்ந்து மற்றவர்களுக்கு அவப்பேரையும், அவமானத்தையும், ஏற்படுத்தி நம்முடைய ஆலயத்தை கெடுத்துக் கொள்ளாதபடி, ஆண்டவர் இயேசு வாழும் ஆலயமாக மாற முயற்சிப்போமாக.

சகோ. எஸ். யேசுநாதன்- தளவாய், செங்கலடி.

## நாவைப் பேணுவீர்!

★ கேள்விப்பட்டதையெல்லாம் ஒருவன் பேசுவது அவன் பொய்யன் என்பதற்குப் போதிய ஆதாரமாகும்.

அறிவிப்பவர்:- அபூ ஹுரைரா (ரலி)
நூல்:- முஸ்லிம்.

★ கோள் சொல்பவன் சொர்க்கத்தில் நுழையமாட்டான்.

அறிவிப்பவர்:- ஹுதைபா (ரலி)
நூல்:- புகாரீ முஸ்லிம்.

★ இறந்தவர்களை ஏசாதீர்கள்! ஏனெனில் அவர்கள் முற்படுத்தியதை அடைந்துவிட்டனர்.

அறிவிப்பவர்:- ஆயிஷா (ரலி)
நூல்:- புகாரீ

★ முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவரைக் கொல்வது இறை மறுப்பாகும்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூது (ரலி)
நூல்:- புகாரீ முஸ்லிம்

★ உன் சகோதரனின் துன்பத்தில் மகிழ்ச்சியடையாதே! அவ்வாறு அடைந்தால் அல்லாஹ் அவனுக்கு அருள் புரிந்து, உன்னை சோதிப்பான்.

அறிவிப்பவர்: வாஸிலா பின் அஸ்கஃ (ரலி)
நூல்:- திர்மிதி.

என்.எல்.முஸம்மில்- குவைத்.

## கவிதைப் போட்டி இல. 227



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

பரிசுக்குரிய கவிதை

### எங்கு செல்வது....?

சுற்றிவர நீர் சூழ்ந்த
குட்டித் தீவினில்;
சுற்றிவரப் போர் சூழ்ந்தால்...
நாமெங்கே செல்வது?

பஷீரா முஹைடீன்-
பாலையூற்று, திருமலை.

### சுற்றி

நாடு சுற்றி
நீர்!
குடா நாடு சுற்றி
நீர்!
எம் வாழ்க்கை சுற்றியும்
நீர் தான்-
கண்ணீர்!

லோ. சுதர்மன்- கண்டி.

### பயணம்

போருக்கு கொம்புசீவும்
நெஞ்சங்கள் பல உண்டு!
அல்லல்படும் நெஞ்சுக்கு
ஆறுதல் கூற யாருண்டு?
முடிவு தெரியா பயணம்,
தண்ணீரிலே!
காலமெல்லாம்
எங்கள் வாழ்க்கை
கண்ணீரிலே!

த. நகுலேஸ்வரன்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### ஒரே தேசம்– ஒரே மக்கள்!

சுகபோக வசதிகள் தெரிவு
தென் இலங்கையிலே!
கற்கால வாழ்வுக்கு
ஒத்திகை
வட இலங்கையிலே!

ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம்.

### (வி)வேகம்!

மூண்ட போரிங்கு
முடியாத காரணத்தால்
தூண்டில் மீனெனவே
துடிக்கும் எம்மினத்தை
மீண்டும் வாழ்விக்க
வேண்டுவதின்று
வேகமா? விவேகமா?

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை,
மஸ்கெலியா.

### அமைதி தேடி

கட்டுமரம் மீதிலேறி,
காட்டு வாழ்வுதனை நீங்கி,
வேட்டுக்களால்
வெந்துதினம்
கண்ணீரில் வாழ்ந்த
நாங்கள்.
தண்ணீரில் போகின்றோம்,

இதய நிலா- ஆரையம்பதி-03.

### இது..!

புலம் பெயரும் தமிழரின்
புனையா ஓவியம்!

எஸ். மௌனேஷ்-மட்டக்களப்பு.

### கற்காலம்

விலங்கோடு விலங்காக
மானிடரும் ஒரு விலங்காய்
வனம் வழியே அலைந்த
கற்காலம் போல
தற்காலம் செல்கிறதா?
பொற்காலம்
வருவதெப்போ?

க. நளினி- திருக்கோணமலை.

### அவ(க)தி

அகதியாய் வந்திருந்தோம்
வன்னியில்-இப்போ
அவதிப்படுகின்றோம்
தண்ணியில்!

கே. ரமேஷ்-நொச்சிமுனை,
மட்டக்களப்பு.

### எதிர்நீச்சல்

நீரோடு செல்கின்ற ஓடம்
போரோடு போராடும்
மனிதம்!
தூரத்து நிழலாக
வெளிச்சம்
துடுப்பாக மனிதத்தின்
துணிச்சல்!

தெ. லோஜனா- கொழும்பு-15.

## கவிதைப் போட்டி இல.230



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 15.11.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.230
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

'பெண் கொமாண்டோ- பூலான்!' 'குண்டு'த் தாக்குதலும்: 'சொல்லு'த் தாக்குதலும் ஒன்றுதான் போலும்? ப்ரியத் தொடரில்; பூலான்தேவி 'தூள் கிளப்புவதைச் சொன்னோம்! அமரர் பெனடிக்ற் பாலனின் 'கதை' தந்தீர்கள்; முதற்கண் நன்றிகள்.

பட்டுக்கோட்டை பிரபாகரின்: பிரமாதமான 'புதிய தொடரின்' ஆரம்பமே அசத்தல்! அடுத்த அத்தியாயங்களை ஆசையோடும், ஆவலோடும் எதிர்பார்த்துக் காத்திருக்க வைத்துவிட்டது; முத்தான (முதல்) தொடர்!

'மருதநாயகம் சபையிலே' யும், பலே பலே! மருதநாயகம் முஸ்லிமான சேதியினை முந்தித் தந்த முரசுக்கும் ஜே! ஜே!

வாஹிட் ஏ குத்தூஸ்,
அக்குறணை.



அன்பு முரசே! நீ தரும் அம்சங்கள் அனைத்தும் தூள். வாரம் முழுக்க திருப்பித் திருப்பி வாசிக்கிறேன். கொள்ளை ராணி பூலான் தேவி படுசுப்பர். மல்லா இல்லாத குறையை முஸ்தக்குவீம் பாபா ஈடுசெய்கிறார். முஸ்தக்குவீம் பாபாவையும் கொன்றுவிடாதீர்! இதயமே தாங்காது.

எச்.எம். முஸம்மில், ஆரிஹாமம், தும்மளசூரிய.

'சாத்தான் ஓதிய வேதம்' இராஜதந்திரியின் அலசல் பிரமாதம். தன்னிடமுள்ள தப்புக்களைத் திருத்திக் கொள்ளாமல் மற்றவர்களுக்கு தத்துவம் போதிக்கும் அமெரிக்காவின் பச்சோந்தித்தனத்தை படம் பிடித்துக் காட்டிய முரசுக்கு நன்றி. அமெரிக்காவின் வார்த்தைகளை வேதவாக்காகக் கொண்டு காரியம் ஆற்றும் நாடுகள் இருப்பதால்தான் தன்னை விட்டால் ஆள் இல்லை என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிறது. ஏமாறுவோர் இருக்கும்வரை ஏமாற்றுவோருக்குக் கொண்டாட்டமே!

செல்வி நிபாயா ராசிக், சவன வெளி,
மாதிப்பொளை.

'முரசு' பெருமையுடன் வழங்கிய 'கனவு மெய்ப்பட வேண்டும்' தொடரில் 'சுமதி'யின் கனவு கைகூடியதையிட்டு மிக்க மகிழ்ச்சி.

'பூலா'னைப் பங்கு போட்டுப் பந்தாடிய காமுகர்களைப் பூலான் படிப்படியாக பழி வாங்கத் தொடங்கியிருப்பது கண்டு என் உச்சி குளிர்கிறது.

ஏ.சீ.எம். மஷ்ஹூர், திகதுர, பலாங்கொடை.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

### பாராளுமன்றம் பயன் இல்லை

பாராளுமன்றம் ஊடாக பயன் கிட்டும் என்றால் ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் போன்ற தலைச் சிறந்த பாராளுமன்றவாதிகள் காலத்தில் கிட்டியிருக்கும். இப்போது முன்னாள் போராளி இயக்கங்களும் பாராளுமன்றம்மீது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்த முயல்கின்றன. அப்படிச் செய்தால்தான் பாராளுமன்ற முழக்கத்தோடு மட்டும் நின்று கொள்ளலாம் என நினைக்கின்றனர். பாராளுமன்றத்துக்கு வெளியே வெகுஜனப் போராட்டங்களை, மக்கள் கிளர்ச்சிகளை நடத்தும் துணிச்சலோ, தலைமைப் பண்போ தமிழ்க்கட்சிகளிடம் இல்லாமல் போய் விட்டது.

இ. தர்மராஜா, மட்டக்களப்பு.

நம் நாட்டு இனப்பிரச்சனை யுத்த முனைக்கு அமெரிக்காவும் ஒரு காரணம் என்பதனையும், ஆபத்தான சக்தி என்றதனையும் நல்ல உள்நோக்குடனான முரசம் பகுதி வெளிப்படுத்தி இருந்தது.

அதிரடி அய்யாத்துரையின் சிறு துளிகள் கவிதைகள்... அப்பப்பா சுப்பர் சேர்.

மற்றும் இராஜதந்திரி அலசுவது மூலம் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. கதிர்காமம் தாக்குதல் நோக்கம் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். டயானாவின் தொடரில் அந்த மலரின் கண்ணீர் கதை எம் இதயத்தையும் இளகச் செய்கின்றது.

மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## வாசக(ர்)சாலை

### சுழியோட்டம்

தீர்வு ஆலோசனைகளுக்குப் பின்னால் நடந்துவரும் சுழியோட்டங்களை தெளிவாக ஆராய்ந்து சொல்லும் இராஜதந்திரியாருக்குப் பாராட்டுக்கள். முதுபெரும் தமிழ்க்கட்சி மாபெரும் ஏமாற்று நாடகத்துக்கு துணை போய்க்கொண்டிருக்கிறது!

எம். திருமாவளவன், கொழும்பு-06.

### திரைமறைவு நிலைப்பாடு

தமிழ்க்கட்சிகள் அனைத்துமே தாங்கள் எங்கிருந்து, எங்கு நோக்கிப் புறப்பட்டோம் என்பதை மறந்துவிட்டன. ஆயினும், ஏனைய தமிழ்க்கட்சிகள் செய்வதைவிட, தங்களை மூத்த அரசியல்வாதிகள், படித்த வித்தகர்கள் என்று அறிமுகம் செய்து கொண்டு, வெளிநாட்டு தூதர்களுக்கு கூட்டணி எடுத்துக்கூறும் தகவல்களுக்கு பெறுமதி கொஞ்சம் கூடுதல்தான். ஆகவே திரைமறைவில் அமெரிக்கத் தடைக்கு ஆதரவாக இருந்தது கூட்டணியினரின் நிலைப்பாடுகள்தான் என்றே கருதுகிறேன்.

வி. புவனேஸ்வரன், மட்டக்களப்பு.

### என்ன மரியாதை?

புலிகளோடு தமிழ்க்கட்சிகளுக்கு ஒத்துப்போகாத தன்மைகள் இருக்கலாம். ஆனால் இன்று குறிப்பிட்ட தமிழ்க்கட்சிகளுக்கு அரசு கொடுக்கும் மரியாதை என்ன? அப்படி இருந்தும் அரசை விழுந்து விழுந்து ஆதரிப்பவர்கள் புலிகளை மட்டும் கண்டிப்பது ஏன்? புலிகளுடைய தவறுகளை சுட்டிக் காட்டுபவர்கள், ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்த தங்களை அரசும் அலட்சியம் செய்வதையிட்டு கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள்.

எஸ். சுரேந்திரன், திருமலை.

### மறைப்பது ஏன்?

அம்பாறையைப் பிரிக்க தலையை ஆட்டிவிட்டு, மலை விழுங்கி மகாதேவர்கள்போல இருக்கின்றனர் கூட்டணியினர். இவர்கள் நேர்மையாளர்கள் என்றால், தங்கள் விட்டுக்கொடுப்பின் நியாயத்தை தமிழ் மக்களிடம் விளக்கி இருக்க வேண்டும். உண்மையைச் சொல்லாமல் மறைக்கும் இவர்கள் காந்தீயவாதிகள் என்று தம்மை அழைப்பது விந்தையே! நிலத்தை தூக்கிக் கொடுக்க இவர்கள் யார்? தாங்கள் செய்வது துரோகம் என்று மனச்சாட்சி உறுத்துவதால்தான் அம்பாறைப் பிரிப்பை மக்கள் கவனத்தில் இருந்து மறைக்கப் பார்க்கிறார்களா? மக்கள் முதுகில் சவாரிவிட்ட காலம் மலையேறிப் போய்விட்டது.

கு. நாகநாதன், அம்பாறை.

### எங்கே போனார்கள்?

பாராளுமன்றம் செல்வது உலகத்தின் முன்பாக நம் குரலை ஒலிக்கச் செய்யவே என்றனர் கூட்டணியினர். அதையே சென்ற தேர்தலில் ஏனைய தமிழ்க் கட்சிகளும் கூறின. இதுவரை உலகின் முன் இவர்கள் தமிழ் மக்கள் சார்பாக எடுத்துக்காட்டி பெற்றுத்தந்த ஆதரவு எத்தனை கிலோ? உலகம் முழுக்க சுற்றி இனப்பிரச்சனைக்கு சூப்பர் தீர்வு வைத்தாகிவிட்டது என்று ஆட்சியாளர்கள் கூறிவருகிறார்கள். உலகை கலக்கப் போவதாகப் பாராளுமன்றம் சென்றவர்கள் எங்கே போயினரோ!

கே. செல்வநாதன், வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com

## வன்னியில் பங்கர் சண்டைகள்
# கள நிலவரம்! புலிகள் விபரிப்பு

வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையினருக்கு எதிரான சண்டைகள் தொடர்பாக 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் விபரிக்கப்பட்டுள்ளது.

தாம் வைத்த பொறிக்குள் தாமே சிக்கிக் கொள்ளும் நிலையில் உள்ளன 'ஜயசிக்குறுய்' படைகள் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஐந்து மாத வயதை எட்டிவிட்டது 'ஜயசிக்குறுய்'. இதுவரை விடுதலைப் போராட்டம் சந்தித்த இராணுவ நடவடிக்கைகளில் மிகப்பெரியது என்ற பெயரையும் பெற்றுள்ளது.

பங்கர் சண்டைகள் என்ற இராணுவப் பரிமாணத்தில் புளியங்குளம் சண்டைகள் இடம்பெற்றன. படையினரின் கண் எதிரிலேயே புலிகளின் அரண்களும் உள்ளன. புலிகள் நிலைகொண்டுள்ள இடங்கள், பயன்படுத்தும் வழிகள் படைகளுக்கும் தெரியும்.

அதனால் படையினரின் எறிகணை வீச்சுக்கு இது வாய்ப்பான சூழல். சண்டையில்லாத நேரங்களில் வந்து விழும் எறிகணைகளில் இருந்து காப்புத் தேடுவது வேறு விடயம். சண்டை நேரங்களில் மழைபோல் வந்துவிழும் எறிகணை தாக்குதல்களுக்கு தற்காத்தபடி, முன்னேற முனையும் படையுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடுவது வேறு விடயம்.

நில மட்டத்திற்கு மேலே தலைகளை உயர்த்த எறிகணைகள் விடாது. ஆயினும் தலையை வெளியே நீட்டி, குறிபார்த்து தாக்கவேண்டும். செக்கனிற்கு ஐந்தோ, பத்தோ அதனிலும் கூடவோ எறிகணைகள் வெடிக்கும்.

### டாங்கி அணி

புலிகளின் பங்கர் அரண்களை உடைத்தெறிய எறிகணைகள் தவறினால், தனது டாங்கிப் படையை படையினர் ஏவிவிடுவர்.

யானைகள் போல உறுமிக்கொண்டு சண்டை வளையத்துக்குள் நுழையும் டாங்கிகள் கவசம் தரித்தவை. உருக்கவசம் தரித்தபடி ஓடி ஓடி குண்டை ஏவும் வாகனங்கள்.

புலிகளின் வியூகத்திற்குள் அவை வரும் வரை, தூரத்தில் இருந்து அவை எறியும் நீளக்குண்டுகளை தாங்கத்தான் வேண்டும்.

குண்டுகளை ஏவிக் கொண்டுவரும் டாங்கியை புழுதி மண்டலத்திற்குள் இருந்து அடையாளம் கண்டு அடிக்க வேண்டிய இடத்தில் அடிக்க வேண்டும்.

பங்கர் சண்டையில் ஒவ்வொரு பதுங்கு குழியும், ஒவ்வொரு காப்பரணும் ஒரு கோட்டைபோலச் செயற்படும். தங்குமிடமும் அதுதான். பாதுகாப்பையும் அதுதான் வழங்கும். உணவும், ஓய்வும் அதனுள்ளே தான். உறக்கமும் அதற்குள்ளே தான்.

மழைபொழிந்து அகழிகள் நனைந்தால் ஒவ்வொரு கோட்டையும் சேறாகும். ஈ, நுளம்புகளின் இருப்பிடமாகும். சேற்றுக்குள் உறங்க வேண்டும். சகதிக்குள் இருந்து உண்ண வேண்டும். எதையும் எதிர்பார்க்க வேண்டும். படையினர் எழுந்து நடமாட அனுமதிக்கக்கூடாது.

படையினர் ஏவிய குண்டுகளால் உருக்குலைந்து போகும் பதுங்கு குழிகளை, காப்பரண்களை இயன்றளவு விரைவாக மீள அமைத்து அடுத்த கட்ட தாக்குதலை எதிர்கொள்ள வேண்டும். இதுதான் பங்கர் சண்டை விதி முறைகள்" என்று புலிகள் விபரித்துள்ளனர்.

# மாவீரர் தினத் தாக்குதல் முஸ்தீபுகள்
## நடவடிக்கையை தொடர படையினர் ஆயத்தம்!

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் மாவீரர்தின இறுதிநாள் நவம்பவர் 27ம் திகதியாகும். பிரபாகரனின் பிறந்தநாள் நவம்பர் 26ம் திகதி வருகிறது.

மாவீரர் தின அனுஷ்டிப்புக்கான ஏற்பாடுகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டும், மழைக்கால சூழலைப் பயன்படுத்தியும் வன்னியில் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று படையினர் எதிர்பார்க்கின்றனர்.

அதனால் புலிகள் தங்களைத் தேடிவர சந்தர்ப்பம் வழங்காமல், புலிகள்மீதான தாக்குதல்களை தொடரப் படையினர் திட்டமிட்டுள்ளனர்.

'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பிக்க கிளிநொச்சியிலும், நெடுங்கேணி மற்றும் புளியங்குள போர் முனைகளிலும் மேலதிகப் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

வவுனியா-யாழ் சாலை வழியாக முன்னேறுவதைவிடுத்து உட்பாதைகள் வழியாக கிளிநொச்சிக்கு செல்வது பற்றியும் படையினர் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

படையினரின் நகர்வுகள் எந்த முனையில் வந்தாலும் பதிலடி நடவடிக்கைக்கு ஏற்ற தயாரிப்புக்களை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

உட்பாதைகள் வழியாக படையினர் முன்னேற முயன்றால் பாரிய இழப்புக்கள் படைத்தரப்பில் ஏற்பட இடமுண்டு என்று கூறப்படுகிறது.

உயர் அதிகாரிகளை மாற்றம் செய்வது மூலம் படையினருக்கு உற்சாகமளிக்கும் முயற்சிகளும் நடந்துள்ளன.

### புதிய உறுப்பினர்கள்

வன்னியில் புலிகள் இயக்கத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் அக்கராயனில் 11 இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் புதிதாக இணைந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

"வன்னியில் படை நடவடிக்கைக்கான பாரிய ஆயத்தங்கள் தொடர்ந்து நடந்துவருகின்றன. எப்பாடுபட்டாவது 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை தொடரும் சூழ்நிலைக்குள் அரசாங்கம் தன்னைத்தானே சிக்க வைத்துள்ளது" என்று புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

படை நடவடிக்கைகளை எதிர்கொள்ள இயக்கத்தில் இணையுமாறு புலிகள் வன்னியில் கோரி வருகின்றனர்.

இதேவேளை மாவீரர் தினத்தை முன்னிட்டு கிழக்கிலும் பரவலான தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது. கிழக்கில் புலிகளின் ஆட்டிலெறியும், மோட்டார்களும் அடிக்கடி இடம் மாற்றப்படுகின்றன.

ஒருமுனையில் வைத்து தாக்குதல் நடத்தினார்கள் என்றால், மறு நிமிடமே வேறு முனைக்கு கொண்டு சென்றுவிடுகின்றனர். அதனால் படையினர் புலிகள் தாக்குதல் நடத்தும் இடத்தை கணிப்பிட்டு நடத்தும் ஷெல்லடிகள் பயனின்றிப் போகின்றன.

ஆட்டிலெறி ஷெல் வீச்சுக்கள் நடக்கக் கூடும் என்று கிழக்கில் உள்ள படையினர் மத்தியில் பீதி நிலவுகிறது.

## ஜயசிக்குறுய் 700 புலிகள் பலி!
## படையினர் தரப்பில் 1600

வடக்கில் இதுவரை நடைபெற்ற பாரியபடை நட வடிக்கைகளும், அவற்றில் தமக்கும் படையினருக்கும் ஏற்பட்ட ஆட்பல இழப்புக்களும் பற்றி புலிகள் பட்டியல் ஒன்று வெளியிட்டுள்ளனர்.

1991ல் ஒரு மாதகாலமாக நடைபெற்றது ஆகாய கடல் வெளிச் சமர். புலிகள் தரப்பில் 602 பேர் பலியாகினர். படையினர் தரப்பில் 400 பேர் பலியாகினர்.

முல்லைத்தீவில் 29.08.91 முதல் 26.09.91 வரை நடைபெற்ற மின்னல் தாக்குதலில் புலிகள் 233 பேர் பலி. படையினர் தரப்பில் 300 பேர் மாண்டனர்.

28.09.1993 முதல் 07 நாட்கள் நடைபெற்ற யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் புலிகள் தரப்பில் 88 பேர் மாண்டனர். படைத்தரப்பில் 150 பேர் பலி.

17.10.95 முதல் 49 நாட்கள் நடைபெற்ற சூரியக்கதிர் நடவடிக்கையில் படையினர் தரப்பில் 750 பேர் பலியாகினர். புலிகள் தரப்பில் 438 பேர் மாண்டனர்.

26.07.96ல் ஆரம்பமாகி 70 நாட்கள் நடைபெற்ற 'சத்ஜய'வில் புலிகளின் இழப்பு 662. படையினர் இழப்பு 700.

ஜயசிக்குறுய் ஒக்டோபர் வரை புலிகள் தரப்பில் 700 பேர். படையினர் தரப்பில் 1600 பேர் பலி. இவ்வாறு புலிகள் வெளியிட்டுள்ள பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிப்புக்கு ஆதரவு
## சம்பந்தன் தீவிரம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்புக் கிளையினர் ஒரு தீர்மானம் எடுத்திருந்தனர். வடக்கு-கிழக்கில் எவ்விதமான நிலப் பிரிப்புக்கும் இடமில்லை. அதற்கு இணங்கக்கூடாது என்று தீர்மானம் எடுத்திருந்தனர்.

அவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுக்க கூட்டணியின் திருமலைக் கிளையினரும் விரும்பினார்களாம். ஆனாலும் திரு.இரா. சம்பந்தன் அதற்கு விடவல்லை என்று கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்தக்கூடாது என்று மட்டுமே திருமலைக் கிளை தீர்மானம் எடுத்துள்ளது. அதாவது வடக்குடன் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் இணைந்திருப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க கருத்துக் கணிப்பு தேவையில்லை, அம்பாறையை விட்டுக்கொடுக்கலாம் என்னும் கூட்டணித் தலைமையின் முடிவை திருமலைக் கிளை ஆதரித்துள்ளது. அதாவது கிழக்கை மூன்றாகப் பிரித்து, அதில் ஒரு பகுதியை வடக்குடன் இணைக்கும் முடிவை திருமலைக் கிளையினர் ஏற்றுள்ளனர்.

அம்பாறையை பிரிக்கும் யோசனைக்கு முன்நின்று முயன்றவர் இரா.சம்பந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது இல்லத்தில் தான் திருமலைக் கிளைக்கூட்டம் நடந்துள்ளது.

## ஏவுகணைகளும், மருந்துகளும்

புலிகளின் ஆயுதக் கப்பல் தாக்கப்பட்டதாகவும், ஆயுதங்கள் இறக்கப்படவில்லை என்றும் படைத்தரப்பினர் செய்தி வெளியிட்டனர் அல்லவா.

ஆனாலும் ஆயுதங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது என்பது படை வட்டாரங்கள் மத்தியிலேயே பேசப்படுகிறதாம்.

புலிகளால் இறக்கப்பட்ட ஆயுதங்கள் முல்லைத்தீவு தளங்களுக்கு கொண்டு செல்லப்படலாம் என்று கருதியே, 02.11.97 அன்று காலையும், மாலையும் முல்லைத்தீவு பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. கபீர், சுப்பர் சொனிக் விமானங்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

புலிகளின் கப்பலில் ஏவுகணைகளும், மருந்துப் பொருட்களும் பெருமளவாக கொண்டுவந்து இறக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## புலிகள் எனக்கூறி நகை கொள்ளை!

மட்டக்களப்பு- நாவற்குடாவில் கடந்த வாரம் ஒரு வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத சில நபர்கள் வீட்டுக்காரார்கள் நித்திரையிலிருந்த சமயம், புலிகள் இயக்கத்தின் அப்பிராந்திய நிதிப் பொறுப்பாளரது பெயரைக் கூறி, "நாம் வந்திருக்கிறோம். கதவைத் திறவுங்கள்!" என்றிருக்கின்றனர். சந்தேகங் கொண்டு பயந்துபோன வீட்டுக்காரார்கள் கதவைத் திறக்கவில்லை.

மறுநாளும் இதேபோல் அந்த வீட்டுக்குச் சென்ற கோஷ்டியினர், "நேற்று இரவு யாரோ வந்து எமது பெயரைக்கூறி தட்டி எழுப்பினார்களாமே! இப்பொழுது நான்தான் நிதிப்பொறுப்பாளர், என்ன நடந்தது என்று அறிய வந்திருக்கிறேன்!" என்றிருக்கின்றனர். உடனே வீட்டுக்காரர் கதவைத் திறந்த பொழுது உள்ளே நுழைந்த கோஷ்டி, ஆயுத முனையில் இலட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், கைக்கு அகப்பட்ட பெறுமதியான சிறு சிறு பொருட்களையும் சுருட்டிக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டது. வீட்டுக்காரார்கள் வெளியேறாமலும், கூச்சலிடாமலும் இருக்க கொள்ளைக் கூட்டம் நீண்ட நேரம் காவல் இருந்ததாம்.

## கிளிநொச்சியில் இருந்து நகர்வு
## புலிகள் எதிர்த் தாக்குதல்

கிளிநொச்சியில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். யாழ் குடாநாட்டில் இருந்தும் பெருமளவான படையினர் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ள படையினர்மீது புலிகள் தாக்கக்கூடும் என்று கருதி படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

1.11.97 சனிக்கிழமை அன்று தமது முன்னரங்க நிலைகளில் இருந்து முன்னேற முயன்ற படையினரை புலிகள் தாக்கினார்கள். படையினரின் நகர்வை அவதானிக்க அங்கு நிறுத்தப்பட்டிருந்த புலிகளின் மகளிர் படையணியினரே தாக்குதல் நடத்தினர்.

அத்தாக்குதலில் நான்கு படையினர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர். இரண்டு ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்று புலிகள் தெரிவித்துள்ளனர். புலிகள் தரப்பில் இரு பெண் புலிகள் பலியாகினர். மகிந்தா (செல்வராஜா லோஜினி, மட்டக்களப்பு), பூமலர் (முருகதாஸ் சிவாஜினி, யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியான புலிகளாவர்.

## கரை ஒதுங்கிய சரக்குக் கப்பல்!
## 'ஈழநாதம்' வெளியிட்ட செய்தி!

முல்லைக் கடலில் வைத்து 2.11.97 அன்று விமானப்படையினரால் தாக்கப்பட்ட கப்பல் தொடர்பாக 3.09.97 அன்று 'ஈழநாதம்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. 'ஈழநாதம்' வன்னியில் இருந்து வெளியாகிறது.

புலிகளின் குரல் வானொலியின் செய்தி அறிக்கையில் கப்பல் தாக்குதல் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை. பத்திரிகைச் செய்திகள் பற்றிய கண்ணோட்டத்தில் 'ஈழநாதம்' செய்தி வாசிக்கப்பட்டது.

முல்லைத்தீவுக் கடலில் கரையொதுங்கிய சரக்குக் கப்பல் சிறீலங்கா விமானப்படையினரால் குண்டு வீசி அழிக்கப்பட்டதாக 'ஈழநாதம்' செய்தி வெளியிட்டிருந்தது.

உண்மையில் கரையொதுங்கியது சரக்குக் கப்பல் என்றால், அதில் பயணம் செய்தவர்கள் புலிகளால் மீட்கப்பட்டிருப்பர்.

தமது பிரதான தளத்தை ஒட்டிய கடற்பகுதியில் கரையொதுங்கிய கப்பலை புலிகள் காணாமல் இருக்க வாய்ப்பில்லை. எனவே கப்பலை நெருங்கி மாலுமிகளை மீட்டெடுப்பர். அவ்வாறு எதுவும் நடந்ததாகப் புலிகள் கூறவில்லை.

சரக்குக் கப்பல் தாக்கப்பட்டிருந்தால் சில நாட்களில் உண்மை வெளியாகிவிடும். குறிப்பிட்ட கப்பல் நிறுவனத்தினர் தங்கள் கப்பலை காணவில்லை என்று புகார் தெரிவிப்பர்.

கடந்த வருடம் 14.02.96 அன்று இரவு முல்லைக் கடலில் புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கப்பட்டது. அப்போது அது குறித்து புலிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தனர். "கடற் தாக்குதலுக்காக வெடிமருந்து நிரப்பி கொண்டு செல்லப்பட்ட தமது கப்பல் வெடித்ததாகவும், கடற்சமரில் ஐந்து கடற்புலிகள் பலியாகினர்" என்றும் புலிகள் செய்தி வெளியிட்டிருந்தனர்.

## நகரில் சோதனை குறைப்பு!

மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கும் பெரியபாலத்தடியில் இதுவரை காலமும் இருந்து வந்த கெடுபிடியான சோதனை நடவடிக்கைகள் தற்போது பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கின்றன. சைக்கிளில் செல்வோர் சோதனையின்றியே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மாத்திரம் சோதனை செய்யப்படுகின்றன. இதனால் நகருக்குள் நுழையும் கடைசி சோதனை நிலையமான பெரிய பாலத்தில் இதுவரை அனுபவித்து வந்த நெருக்கடி நிலை தற்போது நீங்கியுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு வாவிக்கரை வீதி, கோவிந்தன் வீதிச் சந்தியில் அமைந்திருந்த புளொட் இயக்கத்தவரின் முகாம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் தற்போது மீண்டும் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இவ்விடத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் படையினர் அங்கிருந்து விலகியதும் புளொட் இயக்கத்தினர் நிலை கொண்டனர்.

## பூச்சாண்டி காட்டும் ஆசாமிகள்!
## தோட்டப்பகுதிகளில் கைவரிசை

வழக்கமாக தீபாவளி, சித்திரைப் பண்டிகைக் காலங்களில் பூதம், பேய் பற்றிய புரளிகள் தோட்டப்புறங்களில் பரப்பப்பட்டு மக்கள் கொள்ளையடிக்கப்படுகிறார்கள்.

பதுளை- லுணுகலை ஹோலண்ட்ஸ் தோட்டத்தில் கடந்த வாரம் விசித்திரமான சம்பவங்கள் நடந்தன. இப்பகுதியில் சமீப சில நாட்களாக பட்டப் பகலிலும், இரவிலும் பேய், பிசாசுகள் நடமாடி வருவதாகவும் அவை வீட்டுக்கு வீடு வந்து கதவைத் தட்டிலட்டுக் கொடுத்துவிட்டு மயக்குவதாகப் புரளி பரப்பப்பட்டு வந்தது.

இப்புரளியைத் திட்டமிட்டவாறு பரப்பிவிட்டு தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளைப் பதம் பார்க்க கத்திகள் சகிதம் புறப்பட்டது ஒரு திருட்டுக் கும்பல். கடந்த வாரம் தீபாவளி மற்றும் பென்சன் கொடுப்பனவுகளை மக்கள் பெற்றிருந்தனர். இதனை இலக்கு வைத்து திருடர்கள் தோட்டப் புறங்களில் நடவடிக்கையில் இறங்கினர். எனினும் தோட்டத் தொழிலாளர்கள் கூச்சலிட்டதனால் திருடர்கள் தப்பிவிட்டனர்.

இச்சம்பவம் நடந்து மூன்று தினங்களிற்குப் பின்னர் இரவில் தமது கைவரிசையைக் காட்ட முயற்சித்த திருடர் கும்பல் ஒரு கடையைக் கொள்ளையிட்டது. அத்திருடர்களைத் தோட்ட இளைஞர்கள் சிலர் பின்தொடர்ந்து மடக்கிப் பிடிக்க முற்பட்ட பொழுது அங்குள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தோட்ட மேற்பார்வையாளர் ஒருவர், துரத்திச் சென்ற தோட்ட இளைஞர்களிடம் துப்பாக்கியைக் காட்டி எச்சரித்திருக்கிறார். திருடர் கூட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த அந்த தோட்ட மேற்பார்வையாளர் மீது ஆத்திரம் கொண்ட தோட்ட இளைஞர்கள் அவரது வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை நொருக்கி விட்டனர்.

தோட்ட மேற்பார்வையாளரின் நடவடிக்கை தொடர்பாக அதிருப்தி கொண்ட ஹோலண்ட்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 27.10.97 அன்று வேலைக்குச் செல்லாது பகிஷ்கரித்தனர். லுணுகலைப் பொலிஸார் தலையிட்டு அந்த பெரும்பான்மை இன தோட்ட மேற்பார்வையாளரிடம் ஆயுதங்கள் உள்ளனவா என்று சோதனையிட்டனர். எனினும் எதுவும் அகப்படவில்லை. அவரைக் கைது செய்த பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை செய்த பின் விடுதலை செய்துள்ளனர். தோட்ட நிருவாகம் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு திருட்டுக் கும்பலைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். வேலியே பயிரை மேயும் கதை தொடரக் கூடாது என்றும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கண்டியில் உல்லாசப் பயணிகள்

(கண்டி நிருபர்)

கொழும்பு கலதாரி ஹொட்டல் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக கண்டிப் பிரதேச உல்லாசப் பயணிகள் ஹொட்டல்களுக்கு இப்பொழுது நல்ல அதிர்ஷ்டம் கிட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியைச் சூழ உள்ள இடங்களில் சுமார் எட்டு உல்லாசப் பயணிகள் ஹொட்டல்கள் இயங்குகின்றன. இப்பிரதேசத்தில் ஐந்து நட்சத்திர ஹொட்டல்கள் இல்லையாயினும் கடந்த சில வாரங்களாக உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஆய்வின் மூலம் தெரியவருகின்றது.

உல்லாசப் பயணிகள் கண்டி, நுவரெலியா, மாத்தளை போன்ற மலைப்பிரதேசங்களை நாடி இயற்கையின் எழிலைக் கண்டு கொள்ளும் ஆர்வமும் அவர்களின் உல்லாசமும் கடந்த காலங்களை விட அதிகரித்திருக்கின்றன.

## பாதுகாப்பு அதிகாரி கடு கடுப்பு!

மட்டக்களப்பு-கொம்மாதுறையில் சமீப சில நாட்களாக எதுவித சோதனையும் கெடுபிடிகளுமில்லாது பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

எனினும் கடந்த 03.11.97 அன்று அங்கு திடீரென வாகனங்கள் சோதனையிடப்பட்டன. சோதனையிலீடுபட்ட படையினர் பயணிகள்மீது மிகுந்த சிடுசிடுப்புடன் காணப்பட்டனர். நோயாளிகள், குழந்தைகள், கைக் குழந்தைகளுடன் வந்த தாய்மார்கள் என்று பலரையும் வாகனத்திலிருந்து இறங்கி நடந்து செல்லுமாறு கேட்கப்பட்டனர். பயணிகள் நடுக்கமெடுத்தனர். கைக்குழந்தைகளுடன் வந்த தாய்மாரை இறக்கி நடத்துவதைச் சகிக்காத அங்கு நின்ற மனிதாபிமானியொருவர் அங்கு நின்ற படை அலுவலரிடம் இது பற்றித் தெரிவித்த பொழுது "குழந்தைகள் என்றாலும் முகங்களை நன்கு அவதானிக்க வேண்டும். பயங்கரவாதிகள் எந்த ரூபத்திலும் வரலாம், என்றார். இவரும் கையில் ஒரு குழந்தையுடனே நின்றிருந்தார். இவருக்குப் பக்கத்தில் நின்ற மற்றொரு படை அதிகாரி இறக்கைக்குழந்தையுடன் வந்த தாய்மார் இறக்கப்படுவதை வருத்தத்துடன் அவதானித்தார் எனினும் தனது உயரதிகாரிக்குப் பயந்த நிலையில் அவர் காணப்பட்டார்.

சோதனை நடவடிக்கையில் இத்தனை கடுமையாக உள்ள படை அலுவலர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துச் சோதனைச் சாவடிகளிலும் பணமும், அன்பளிப்பும் கொடுத்தால் இலேசாகப் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுவதை அறிவார்களா, என்று பயணிகளும் வாகனக்காரர்களும் தெரிவிக்கிறார்கள்.

## கடற் கரும்புலிகள் பலி!

இவ் வருடம் மே மாதம் 27ம் திகதி முல்லைக் கடலில் ஏற்பட்ட பாரிய வெடிவிபத்து தொடர்பாக தற்போதுதான் புலிகள் செய்தி வெளியிட்டுள்ளனர்.

1.11.97 அன்று சனிக்கிழமை புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் அத் தகவல் இடம்பெற்றது. பாரிய கடற்சமர் ஒன்றுக்காக வெடி மருந்து நிரப்பப்பட்ட நான்கு படகுகளில் சென்றனர் கடற் கரும்புலிகள். எதிர் பாராமல் படகுகளில் ஏற்பட்ட வெடிவிபத்தில் எட்டுக் கடற்கரும்புலிகள் பலியானார்கள்.

மேஜர் அன்பு, மேஜர் ஈழமோகன், மேஜர் விநோதன், மேஜர் வலம்புரி, மேஜர் சந்திரா, கப்டன் தீதிகா, கப்டன் சுதாகர், கப்டன் அருளகரன் ஆகியோரே பலியான கடற் கரும்புலிகளாவர்.

முல்லைக் கடற்பரப்பில்தான் கடற்கரும் புலிகள் எண்மரும் பலியாகினர்.



படிப்பகம்

www.padippakam.com

## இரவு நேர பஸ்சேவை! பிரிகேடியர் பணிப்பு!

மட்டக்களப்பில் முடிந்தளவு சுமுக நிலையை ஏற்படுத்தி மக்களுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் பணிப்புரை விடுத்திருக்கிறார். அந்த வகையில் போக்குவரத்துச் சேவைகளைத் தங்கு தடையின்றிச் சீர்செய்யுமாறும், இரவு பஸ் சேவைகளை நடத்துமாறும் அவர் பஸ் டிப்போக்களின் அதிகாரிகளைக் கேட்டுள்ளார். அதற்கமைய கடந்த 24.10.97 தொடக்கம் மட்டக்களப்பு நகரிலிருந்து செங்கலடியை நோக்கியும், காத்தான்குடி- ஆரையம்பதியை நோக்கியும் மாலை 7.15 மணிக்கு தினமும் இரு பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன. இந்த பஸ் சேவைக்கு அமைவாக இடைவழியிலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகளைத் தாண்டிச் செல்ல பிரிகேடியர் அனுமதித்துள்ளார்.

கடந்த 1990ம் ஆண்டு கிழக்கில் நடந்த படுகொலை மற்றும் வன்செயல் சம்பவங்களுக்குப் பின்னர் சிறிது காலம் பிந்திய மாலை வேளையில் இடம்பெற்று வந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்து இப்பொழுது மீண்டும் நடைபெறுகிறது.

இதுவரை காலமும் மாலை நேரக் கடைசி பஸ் மட்டகளப்பு நகரிலிருந்து மாலை 5.15 உடன் சேவையை நிறுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பஸ் டிப்போக்களினால் நடத்தப்படும் சில பஸ்சேவைகளில் பயணிகளைக் கேலிக்குள்ளாக்கும் சில சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெறுகின்றன.

கடந்த 25.10.97 அன்று காலை 6.45 மணியளவில் காத்தான்குடியிலிருந்து வாழைச்சேனை நோக்கி 60-6822 இலக்க பஸ் சென்று கொண்டிருந்தது. மட்டக்களப்பில் வைத்துப் பயணிகள் அந்த பஸ்ஸில் ஏறி ஆசனத்தில் அமர முற்படும்போது, அந்த பஸ் நடத்துநர், சாரதி, மற்றும் பஸ்ஸிலிருந்த சிலர், பயணிகளை "முன்வரிசை ஆசனத்தில் அமரவேண்டாம் அவை எமது பஸ் ஊழியர்கள் அமர்வதற்கானவை" என்று கூறிப் பயணிகளுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட ஆரம்பித்தனர்.

பின்புறமுள்ள ஆசனங்களுக்குச் சென்று அமராவிட்டால், பஸ்ஸை விட்டு சகல பயணிகளையும் இறங்குமாறும் கேட்டு கேலிக்கிடமான முறையில் நடந்து கொண்டனர். பயணிகள் இவர்களது வேண்டுகோளுக்கு மசியாது போகவே, 'வாழைச்சேனை' எனும் பஸ்ஸின் முகப்பு அறிவித்தலை அகற்றிவிட்டு அறிவித்தல் பலகையின்றி பஸ் சென்றது. இடைவழியில் அலுவலகங்களுக்குச் செல்வதற்காகக் காத்திருந்த ஏராளமான பயணிகளை ஏற்றிச்செல்லாது பஸ் சென்றது.

## ஆசிரிய நியமனங்களில் மாற்றம்?
## கல்விச் சேவைகள் ஆணைக்குழு முடிவு!

(கண்டி நிருபர்)

பட்டதாரிகளுக்கும் கல்விக் கல்லூரிகளில் பயிற்சியை முடித்தேறிய டிப்ளோமாதாரர்களுக்குமே ஆசிரியர் நியமனங்களை வழங்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

ஜீ.ஸி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் பெற்ற புள்ளிகளின் இறங்கு வரிசை அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கும் இன்றைய நடைமுறை இதனால் மாற்றி அமைக்கப்பட இருப்பதாக பொதுச் சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுத் தலைவர் கர்னல் ஸி.குடலிகம தெரிவித்திருக்கிறார்.

கடைசியாக 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டிப் பரீட்சைக்கு 2,40,000 பேர் தோற்றலாயினர். இதன் மூலம் அரசுக்குக்கிடைத்த வருமானம் 2 கோடியே 65 இலட்சம் ரூபாவாகும்.

ஆண்டு தோறும் 3500 பட்டதாரிகளும், 1500 கல்வி டிப்ளோமா தராதரம் உடையோரும் ஆசிரியர் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படக் கூடியதாக திகழ்வதால் ஜீ.ஸி.ஈ. உயர்தர தராதரப் பத்திரம் உடையோருக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குவதில் பல இடர்பாடுகளும் வேறு பல சிரமங்களும் இருப்பதாக கல்வி அமைச்சு ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் வழங்கப்பட இருக்கும் இவ்வாறான நியமனங்கள் மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடையோருக்கும் வழங்கக்கூடியதாக எதிர்காலத்தில் புதிய நியமனங்கள் அமையும் எனவும் கூறப்படுகின்றது.

இதற்கு முன்னோடியாக நாடு எங்கிலும் கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை, இப்பொழுது இருப்பதைவிடவும் 18 ஆக அதிகரிக்கப்பட இருப்பதுடன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் நலனும் அதிகரிக்கப்படவும் இருக்கின்றன.

## "உலர் உணவு உடன் கொடுத்தோம்"
## பிரதேச செயலாளர் விளக்கம்

"227வது முரசில் (ஒக்-19-25,1997) 4ம் பக்கத்தில் "நாலாம் கொலனி அகதிகளின் நிலவரம்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் இரு விடயங்கள் தவறாகத் தரப்பட்டுள்ளன.

01. 23.09.97ம் திகதிய அனர்த்தத்தில் உண்மையில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 185 என்று தரப்பட்டுள்ளது. இது தவறு. அகதிகள் தங்கியுள்ள சேனைக் குடியிருப்பு கணேச வித்தியாலயம் அமைந்துள்ள பிரிவின் கிராமசேவகர் எஸ். தேவராஜாவின் அறிக்கையின்படி 24.09.97ம் திகதி இருந்த அகதிக்குடும்பங்கள் 329. 03.10.97ம் திகதி மேலதிகமாக வந்து சேர்ந்த குடும்பங்கள் 67.

இதேவேளை கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இக்கணக்கெடுப்பில் விடுபட்டுப்போன 149 குடும்பங்களுக்கும் சேர்த்து உலர் உணவு வழங்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளார்.

02. கல்முனை பிரதேச செயலாளர் ஒருவாரம் கழித்தே அரச உலர் உணவை வழங்கினார் என்பது பற்றிய செய்தி. இச் செய்தியும் தவறு. சம்பவம் நடந்த மறுநாள் அதிகாலையே- இவ்வகதிகள் பற்றி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஐ.விக்ரம, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ரி.பி. விஜேரத்ன என்பவர்களால் தொலைபேசி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டன. இப்பாடசாலை என் வதிவிடத்திலிருந்து சுமார் அரைமைல் தூரத்திலேயே உள்ளது. பதற்ற நிலையையும் பொருட்படுத்தாது உடன் நான் அவ்விடம் சென்று பார்வையிட்டு, எனது வாய்மூல உத்தரவின் பேரில் கல்முனை ப.நோ.கூ. சங்கத்தின் மூலம் அன்றிலிருந்தே உலர் உணவு கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

03. இத்தவறான செய்திகள் காரணமாக உலர் உணவு விநியோகத்தில் மோசடிகள் இடம் பெற்றிருக்கக்கூடும் என்று வாசகர்கள் கருதக்கூடும். எனவே, இவ்விளக்கத்தைப் பிரசுரித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்."

ஏ.எல்.எம்.பளீல்,
பிரதேச செயலாளர், கல்முனை.

## கொடுத்ததும்-பறித்ததும்

திருக்கோணமலை தேசிய வீடமைப்பு அதிகாரசபை, மலசலகூட அமைப்புக்கென குடியிருப்பாளர் ஒருவருக்கு வழங்கிய கடன்தொகை இரண்டாயிரம் ரூபா; அறவிட்ட தொகையோ ரூபா 4312/-.

லவ்லேன் பகுதியைச் சேர்ந்த ஏ.எம். கமல்தீன் என்ற கடற்படைத் தள சிவில் ஊழியரிடமே இவ்வாறான அறவீடு செய்யப்பட்டுள்ளது.

1985 ஐப்பசி மாதத்தில் இவர் கடன் பெற்றார். கடனைச் சம்பளப் பட்டியலிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதியளித்ததன் பேரில் 1990 புரட்டாதி வரை கழிப்பனவு இடம்பெற்றுள்ளது.

1995ல் இவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "பெற்ற கடனை மீளச் செலுத்தாதபடியால் வழக்குத் தாக்கல் செய்யப்படும்" என வீடமைப்புச் சபை அறிவித்திருந்தது.

கடன் பெற்றவர் தனது திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோதுதான் அளவுக்கதிகமாகப் பணம் கழிக்கப்பட்டமை தெரியவந்தது.

மீதிப்பணத்தைத் தரும்படி கேட்டு வீடமைப்புச் சபைக்கு அந்த நபர் இரண்டு வருட காலமாக நடையாய் நடந்து வருகிறார். "பழைய எக்கவுன்ட் இப்போது பார்க்க நேரமில்லை!" என்ற பதிலே கிடைத்து வருகிறது.

"வழக்குத் தாக்கல் செய்யப் புறப்பட்டவர்கள் கழித்த பணத்தைத் தரப் பின்னடிப்பது ஏன்?" என்று பாதிக்கப்பட்டவர் முரசு நிருபரிடம் மனம் நொந்து கூறினார்.

முன்பொரு தடவை கடன் வழங்காமலேயே இருவர் மேல் கடனை மீளளிக்கவில்லை என வழக்குத் தாக்கல் செய்ய இதே சபையினர் நடவடிக்கை எடுத்ததை முரசு சுட்டிக்காட்டியது நினைவிருக்கலாம். முரசின் செய்தியையடுத்து அவர்களிருவரும் அழைக்கப்பட்டு கடனுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால கொடுப்பனவு
## கல்விச் செயலர் இணக்கம்

(திருமலை நிருபர்)

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இழுபறி நிலையிலிருந்த வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவில் ஒரு பகுதி நவம்பர் மாதச் சம்பளத்துடன் வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இணக்கம் தெரிவித்துள்ளார்.

இக் கொடுப்பனவு விடயத்தில் கல்வியமைச்சு அதிகாரிகள் ஊக்கமுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஆசிரியர் வட்டாரத்தில் பரவலாக உள்ளது. கல்வியமைச்சு சார்ந்த சகல ஊழியர்களும் அவ்வப்போது இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டு ஆசிரியர்களை மாத்திரம் புறக்கணித்து விட்டதால் மாவட்டங்கள் தோறும் ஆர்ப்பட்டம், மறியற் போராட்டம் என்பன பலதடவைகள் நடைபெற்றதோடு கல்வியமைச்சு அலுவலகத்தின் முன்புறமும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன.

இந்த விரக்தி காரணமாக இவ்வாண்டு ஆசிரியர் தின நிகழ்விற்கூட ஆசிரியர்களில் பெருவாரியானோர் கலந்து கொள்ளவில்லை.

இதனையடுத்து இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் பலனாக முதல் ஏழு மாதக் கொடுப்பனவு நவம்பர் சம்பளத்துடனும், மீதி ஏழுமாதக் கொடுப்பனவு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள்ளாகவும் வழங்கப்படும் என கல்விச் செயலாளர் எழுத்துமூல உறுதிப்பாடு அளித்துள்ளார்.

## விளம்பரப் பகுதி


**மனோதத்துவ வைத்தியம்**

வவுனியாவிலும் சந்திக்கலாம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்

கல்முனையில் நவம்பர் 8, 9, 10, 11 ஆம் திகதிகளில்
T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329
வவுனியாவில் நவம்பர் 15, 16, 17ஆம் திகதிகளில்
T.P. 024 - 22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INN இல் சந்திக்கலாம்

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072- 609388

கொழும்பில் ஒக்டோபர் 22 முதல் 30 வரை
DR. P. ARUMUGAM, AHAMED TOURIST INN,
Bang Bang Building No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall Street, Opposite Ranjanas)
COLOMBO - 11. T.P. 436383, 436390

**அஸ்மா வைத்தியம்**

* அஸ்மா * தொய்வு
* முட்டு * சளி
* இருமல் * இழுப்பு
* இளைப்பு

போன்ற நோய்களுக்கு முழு சுகமடைய
ஒரு முறை வைத்தியர் செய்து மருந்துகள் பாவித்து பாருங்கள் பலன் தெரியும்

டாக்டர் சுராஜ். சோமசுந்தரம்
Ph. Dh (Ind); M.B.B.Sch (Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர்
25, சென். சில்வெஸ்டர் ரோட், கல்கிசை. (மவுண்ட்லேவினியா)

தினமும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை

☎ 074 - 201582

Admiral Graphics

**ரெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**வெளிவந்து விட்டது**
**விஞ்ஞானம்**
G.C.E. (O/L) - 97
துரித மீட்டல் மாதிரி வினாக்கள் (விரிவான வினா-விடை)
இம்முறை G.C.E. (O/L) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்குரியது. பகுதி I - 150 வினாக்கள், பகுதி II - 30 வினாக்களும் அவற்றிற்கான விரிவான விடைகளும் அடங்கியது. விலை 42/-

| | |
|---|---|
| விஞ்ஞானம் ஆண்டு - 11 | - ரூ. 75/- |
| விஞ்ஞானம் ஆண்டு - 10 | - ரூ. 77/- |
| விஞ்ஞானம் ஆண்டு - 10/11 | - ரூ. 32/- |
| விஞ்ஞானச் சுருக்கம் - 9, 10, 11 | - ரூ 23/- |

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
ஆக்கம் : ஆ. யோகராஜா
தொடர்பு : A. Jogarajah
90/1, Christhuraja Mw,
Nayakakanda - Hendala.
Wattala

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

**சித்தர் மாந்திரீகம்**
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர் களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை

**குழந்தைகள் உலகில்**
**அஷ்டலக்ஷ்மி**

பாலர் பாடசாலைகளுக்கு பல வர்ணப் பதிப்புகள்



- பாலர் தமிழ்
- பாலர் தமிழ்மலர்
- இனிய பாலர் தமிழ்
- A.B.C. Nursery Book
- பாலர் கணிதம்
- பாலர் நீதிக் கதைகள்
- குழந்தைக் கதைகள்
- பாப்பா பாட்டு
- மாணவர் கதைக் களஞ்சியம்
- மாணவர் அறிவுக் கதைகள்
- பழகு தமிழ்
- ஆங்கில எழுத்துப் பயிற்சி

வெளிநாட்டு ஆடர்களும் ஏற்கப்படும்

பாலர் வகுப்புக்கான புதிய வெளியீடு
**பாலர் தமிழ் அமுதம்**

ஆக்கம்: குலபதி ஆறுமுகம் கந்தையா
புத்தகத்துடன் அன்பளிப்பு:- அரிச்சுவடி ஏடு

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு 11
தொலைபேசி:- 334004, 331960
தலைமைச் செயலகம்:- 41, கண்டி வீதி, கைதடி.

**மலையாள மாந்திரிகம்**





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில், கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி.
மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எரிந்த கப்பலும் – எழும் சந்தேகங்களும்

# பட்டப்பகலில் கப்பல் நின்றது ஏன்?

## பொறியா? பழுதா? அழிக்கப்படவா?

முல்லைக் கடலில் 2.11.97 அன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை விமானப்படையினர் நடத்தி முடித்த தாக்குதலை மாலையிலேயே தொலைக்காட்சி காண்பித்தது.

கப்பல் தாக்கப்பட்டதோ, மூழ்கடிக்கப் பட்டதோ எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாத செய்திகள்தான்.

ஆனால் கப்பல் தாக்குதல் தொடர்பாக படைத்தரப்பினர் வெளியிட்டுள்ள செய்திகள்தான் முன்னுக்குப்பின் முரணாக உள்ளன.

மூன்று தினங்களுக்கு முன்னர் கப்பல் பற்றிய தகவல் கிடைத்தது என்று கடற்படையினர் கூறுகின்றனர்.

**அவ்வாறு தகவல் கிடைத்திருந்தால் முல்லைத்தீவில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியை ஒட்டிய கடற்பகுதிக்கு சென்று கப்பல் தரிக்கும்வரை ஏன் பார்த்துக் கொண்டிருந்தனர்?**

**முன்கூட்டியே தகவல் கிடைத்திருந்தால் விமானப்படையினருக்கு ஏன் அறிவிக்கப் படவில்லை. 2.11.97 அன்று காலை 10 மணியளவில்தான் தனக்கு கடற்படை மூலம் தகவல் கிடைத்தது என்று விமானப்படை அதிகாரி கூறியிருக்கிறார்.**

மூன்றுநாட்களுக்கு முன்னர் தகவல் கிடைத்தது என்று கடற்படை தளபதி கூறியுள்ளபோது, இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க வேறு விதமாக கூறியிருக்கிறார். தாக்குதல் நடத்தப்படுவதற்கு 24 மணிநேரத்திற்கு முன்பாகத்தான் இரகசிய உளவுத் தகவல் கிடைத்தது என்று கூறியிருக்கிறார்.

**ஒரு தாக்குதல் தொடர்பாக வெளியே என்ன விதமாக செய்தி தெரிவிப்பது என் பதில்கூட படையினருக்குள் புரிந்துணர்வு இல்லை என்பதும் நன்கு தெரிகிறது.**

உண்மையில் நடந்ததுதான் என்ன? நடந்த தாக்குதலுக்கும், அது பற்றி சொல்லப்பட்ட செய்திகளுக்கும் இடையே எந்தளவுக்கு தொடர்புகள் இருக்கலாம் என்பதைக் காணவேண்டும்.

புலிகள் கப்பல் மூலாக ஆயுதம் கொண்டுவருவது புதுமையல்ல. பல தடவைகள் அவ்வாறு ஆயுதம் கொண்டுவந்து இறக்கியுள்ளனர்.

இரண்டு விதமாக புலிகள் ஆயுதங்களை கப்பலில் இருந்து இறக்கிக் கொள்வர்.

ஒன்று: இலங்கை இந்திய கடற்படை கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட பகுதியில் கப்பலை நிறுத்திவிட்டு, அதிவேகப் படகுகளில் ஆயுதங்களை ஏற்றி கரைக்கு கொண்டுவருதல்.

இரண்டு: வடக்கில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதி சார்ந்த கடல்பகுதிக்கு கப்பலை தருவித்து ஆயுதங்களை இறக்குதல்.

சந்திரிக்கா அரசுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது புலிகளின் ஆயுதக் கப்பல்கள் வடமராட்சிக் கடலுக்கும், முல்லைக் கடலுக்கும் வந்து சென்றன.

அப்போதுதான் விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் கொண்டு வந்து சேர்க்கப் பட்டன.

பேச்சுவார்த்தைக் காலத்தில் கடற்படை ரோந்துகள் தீவிரமாக இல்லாத சூழல் காரணமாக வடபகுதிக் கடல் பரப்புக்குள் புலிகளின் கப்பல் வந்து செல்லக்கூடியதாக இருந்தது.

14.02.96 அன்று இரவு முல்லைத்தீவுக் கடற்பகுதியில் புலிகளின் ஆயுதக் கப்பல் பிரவேசித்தது.

'ஹொரிசோன்' என்ற பெயருடைய அக் கப்பலின் நடமாட்டத்தை மோப்பம் பிடித்த இந்தியக் கடற்படை இலங்கைக்கு தகவல் கொடுத்தது.

**இரவோடு இரவாக அக்கப்பலை இலங்கை கடற்படையினர் தாக்கி அழித்தனர். ஐந்து புலிகள் பலியானார்கள். 60 கோடி ரூபாய்கள்வரை புலிகளுக்கு நஷ்டம்.**

கப்பல் முல்லைக் கடலுக்குள் பிரவேசித்த உடனேயே இரவோடு இரவாக தாக்கப்பட்டதால், கப்பலில் இருந்த ஆயுதங்களை புலிகளால் இறக்க முடியவில்லை.

அக் கப்பல் முல்லைக் கடலுக்குள் புகுந்த நேரத்தில், கடற்படையினரை திசை திருப்ப தீவுப்பகுதியில் கடற்புலிகள் தாக்குதல் போக்கு காட்டினார்கள்.

ஆயினும் இந்தியா கொடுத்த தகவல் காரணமாக இலங்கை கடற்படையினர் காரியத்தை கச்சிதமாக முடித்திருந்தனர்.

**அதன் பின்னரும் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் வந்து சென்றுள்ளன. சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து புலிகளின் அதிவேக விசைப்படகுகளில் ஆயுதங்களை இறக்கிவிட்டுச் சென்றுள்ளன.**

முல்லைக் கடலுக்குள் வந்தால்கூட கப்பல் கரைக்கு செல்ல முடியாது. படகுகள் மூலம்தான் ஆயுதங்களை கொண்டு சேர்க்க வேண்டும்.

எனவே சர்வதேசக் கடற்பரப்பில் நின்றே இறக்கிவிட்டுப் போய் விடலாம். கப்பலுக்கு பாதகம் இல்லை.

அவ்வாறான வசதிகள் இருக்கும்போது முல்லைக் கடலுக்குள் புலிகளின் கப்பல் ஏன் வந்தது?

ஏற்கனவே ஒரு தடவை தமது கப்பலை இழந்த புலிகள் மறுபடியும் விஷப்பரீட்சையில் இறங்க நினைப்பார்களா?

அது மட்டுமல்ல கப்பல் தாக்கப்பட்டிருப்பது காலை 10.55 மணிக்கு. அதாவது கடற்பரப்பும், அங்கு தரித்து நிற்கும் கப்பலும் துல்லியமாக தெரியக்கூடிய நேரத்தில்.

**பொழுது விடிந்த பின்னர் கடற்பரப்பில் கப்பல் நிற்பதைக் காண ராடர்கள்கூட தேவையில்லை. எட்டத்தில் நின்று கடற்படையினர் பார்த்தாலே தெரிந்து விடும்.**

வானத்தில் பறக்கும் ஒரு விமானத்தில் இருந்துகூட சாதாரண தொலை நோக்கி மூலமே கப்பல் நிற்பதையும், அதன் அமைப்பையும் கண்டுவிடலாம்.

வன்னியில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அடிக்கடி விமானங்கள், ஹெலிகள் பறந்து புலிகளின் நிலைகளை நோக்கி குண்டுகளை வீச முயல்கின்றன.

கடலில் புலிகளின் படகுகளது நடமாட்டத்தை கண்காணிக்கவும் விமானங்கள் பகல் நேரங்களில் பறப்பதுண்டு.

குறிப்பாக முல்லைக் கடலில் மீன்பிடிப் படகுகள்கூட விமானத்தாக்குதலுக்கு உள்ளாகின்றன. அந்தளவுக்கு கண்காணிப்பு இருக்கிறது.

இந் நிலையில் பொழுது விடிந்த பின்னரும் புலிகள் தங்கள் கப்பலை முல்லைக் கடற்பரப்பில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றால் அதன் அர்த்தம் என்ன?

மூன்று காரணம்தான் இருக்க முடியும்.

**1) கப்பல் தாக்கப்படவேண்டும் என்பதை புலிகள் விரும்பியிருக்க வேண்டும்.**

**2) கப்பலை பொறியாகப் பாவித்து கடற்படையினரை உள்ளே இழுத்து தாக்க திட்டமிட்டிருக்க வேண்டும்.**

**3) கப்பல் பழுதடைந்த காரணத்தால் குறிப்பிட்ட நேரத்தில் கிளம்பிச் செல்ல இயலாமல் இருந்திருக்கலாம்.**

**மேற்கண்ட மூன்று காரணமும் இல்லையானால் அது புலிகளின் கப்பல் அல்ல என்ற முடிவுக்கே வரவேண்டும்.**

கப்பலில் ஆயுதங்கள் இருந்தன, இறக்க முன்னர் தாக்கிவிட்டோம் என்பது முழுக்கணக்கான பூச்சுற்றல்.

இரவோடு இரவாக ஆயுதங்களை இறக்கி முடிப்பதுதான் வழக்கமே தவிர, பகல் நேரத்தில் ஆயுதங்களை இறக்குவது கிடையாது.

பொழுது சரிந்து இருள் விரிந்து கடலைத் தழுவும் நேரம்வரை சர்வதேச கடற்பரப்பில் கப்பல் நகர்ந்து கொண்டிருக்கும். இருள் சூழத் தொடங்க, கப்பல் உள்ளே வரும். இருளோடு இருளாக மளமளவென்று ஆயுதங்கள் படகுகளில் இறக்கப்பட்டு கரைக்கு செல்லும். பொழுது விடிய முன்னரே கப்பல் மறுபடி சர்வதேச கடற்பரப்புக்குள் சென்று விடும்.

பாரிய கப்பலை பிரச்சனைக்குரிய கடற்பகுதியில் நிறுத்திவைக்கும் அளவுக்கு சிறுபிள்ளைத்தனமாக புலிகள் சிந்தித்தனர் என்று நம்பச் சொல்கிறார்கள்.

அதுதவிர, காலை 10 மணிக்குபின் உளவு விமானம் மூலம் எடுக்கப்பட்ட படத்தில்கூட கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்ட காட்சிகள் இல்லை.

அப்போதுதான் ஆயுதங்கள் இறக்கப்பட தொடங்கியிருந்தால் வானிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படத்தில் அக் காட்சி தெரிந்திருக்கும்.

விமானங்கள் பறக்காத, கடற்படை ரோந்து பெருமளவு இல்லாத இரவு நேரத்தை தவிர்த்து விட்டு, அடிக்கடி கடற்பரப்புக்கு மேலாக விமானப்படை விமானங்கள் பறந்து திரிகின்ற, ரோந்துப் படகுகளின் பார்வையில் பளிச்சென்று தெரியக்கூடிய பட்டப்பகலில் ஆயுதங்களை இறக்க புலிகள் நினைத்தனர் என்பது பொருத்தமே இல்லாத புனைகதையாக இருக்கிறது. சினிமாக்களில் மட்டுமே இப்படியான காட்சிகள் எடுக்கப்படலாம்.

எனவே, குறிப்பிட்ட கப்பலில் வந்த ஆயுதங்கள் அனைத்தும் இரவோடு இரவாக இறக்கப்பட்டுவிட்டன. அதன்பின்னர் பலமணி நேரங்கள் சென்ற பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆயுதங்களை ஏற்றிச் சென்ற படகுகளை தாக்கி அழித்ததாக கடற்படையினர் கூறியுள்ளனர். இதில் இரண்டு முரண்பாடுகள் உள்ளன.

**கப்பலில் இருந்து ஆயுதம் கொண்டு சென்ற சிறு படகுகளை குறிபார்த்து தாக்கக் கூடிய தூரத்திற்கு கடற்படையினர் சென்றிருக்க முடியுமானால், பாரிய கப்பலை அங்கிருந்து தாக்கி அழிக்க முடியாமல் போனது ஏன்?**

அடுத்த கேள்வி, படகுகள் ஆயுதம் ஏற்றிச் சென்றபோது தாக்கப்பட்டிருந்தால் கடலில் பற்றி எரிந்திருக்க வேண்டும். அல்லது கடலில் மூழ்கிக் கொண்டிருக்க வேண்டும் அப்படி நடந்திருந்தால், கப்பல் தாக்குதலுக்கு பின்னர் வானில் இருந்து எடுக்கப்பட்ட படத்தில் எரியும் படகுகளோ, மூழ்கும் படகுகளோ இடம்பெற்றிருக்க வேண்டும். அப்படி எக் காட்சியும் இல்லை.

கப்பல் எரியத் தொடங்கிய பின்னர் கடற்படைப் படகுகள் கப்பலை சுற்றித் திரிவதைக் காணக்கூடியதாக இருந்தது. அக் காட்சிகள் படப்பிடிப்பில் தெரியும்போது, புலிகளின் படகுகள் தாக்கப்பட்டிருந்தால் தெரியாமல் போகாது. அதுதவிர விமானப் படையினரும் அக் காட்சியை ஒன்றுக்கு பத்துத் தடவை படம்பிடித்துக் காண்பித்தே இருப்பர்.

கப்பல் தாக்கப்பட்ட பின்னர் வெடித்தது என்றும், ஆகவே, உள்ளே குண்டுகள் இருந்தன என்றும் படையினர் கூறியுள்ளனர்.

கப்பல் தீப்பிடித்து எரியத் தொடங்கிய பின்னர்தான் கப்பலுக்குள் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன என்றும் படைத்தரப்பினர் கூறியுள்ளனர்.

**கப்பலுக்குள் வெடி பொருட்கள் இருந்தால் மட்டும்தான் வெடிப்புச் சத்தம் கேட்க வேண்டும் என்று கட்டாயமில்லை. கப்பலின் எரிபொருள் தாங்கியில் குண்டு வீழுந்தாலோ, அல்லது தீப்பிடித்து தாங்கி வெடித்தாலோகூட குண்டு வெடிப்புபோல சத்தம் எழும்.**



எயர் வைஸ் மார்சல் ஜயலத் வீரக்கொடி, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க, நேவி கொமாடோர் சரத் வீரசேகர ஆகியோர் பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றனர் பிரமாண்டமான கதை.

இரண்டு தடவைதான் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. வெடிபொருட்கள், மோட்டார் ஷெல்கள் நிறைய இருந்திருந்தால் அடுத்தடுத்து வெடிச் சத்தங்கள் கேட்டிருக்க வேண்டும். கப்பல் சுக்கு நூறாகச் சிதறியிருக்கும்.

எனவே உள்ளே குண்டுகள் வெடி பொருட்கள் இருந்தன என்று காட்ட கூறப்படும் காரணம் சரியாக இல்லை.

250 கிலோ கிராம் எடையுடைய எட்டுக் குண்டுகள் விமானப் படையினரால் போடப் பட்டுள்ளன. அதில் இரண்டு குண்டுகள்தான் கப்பலில் விழுந்துள்ளன. ஏனையவை குறி தவறிக் கடலில் விழுந்திருக்கின்றன.

**எனவே வெற்றுக் கப்பல்தான் குண்டு வீச்சுக்கு இலக்காகி உள்ளது என்ற முடிவுக்கே வரவேண்டி உள்ளது.**

எனவே, தாக்குதலை எதிர்பார்த்து, அல்லது தாக்குதல் ஒன்றுக்கு பொறியாக புலிகள் நிறுத்தி வைத்திருந்த கப்பலாகவே அது இருக்க வேண்டும்.

ஏனெனில் கப்பலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருந்தால், அதனை சரி செய்யும்வரை கடற்புலிகள் கப்பலுக்கு பாதுகாப்பாக நிறுத்தப் பட்டிருப்பர். கடற்படையினரை திசை திருப்ப வேறு கடற்பகுதிகளில் மோதலுக்கு இழுத்திருப்பர்.

எனவே ஒரு கல்லில் இரண்டு மாங்காய் தளை அடிக்க புலிகள் நினைத்தார்களா என்று சந்தேகம் ஏற்படுகிறது.

**ஒன்று: குறிப்பிட்ட கப்பலை தடயமே இல்லாமல் அழிப்பது.**

**இரண்டு: குறிப்பிட்ட கப்பலை நெருங்கி ஆராயவோ, கைப்பற்றவோ கடற்படையினர் முற்பட்டால் சுற்றிவளைத்து தாக்குவதுடன், கப்பலையும் அழிப்பது.**

ஏன் கப்பலை புலிகள் அழிக்க வேண்டும்?

சைப்பிரசில் இருந்து மோட்டார் குண்டுகளுடன் காணாமல்போன கப்பல் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அதனைக் கண்டுபிடிக்க சர்வதேசப் பொலிசான 'இண்டர்போல்' தீவிரமாக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது. அக் கப்பல் விவகாரத்தில் தனக்கொன்றும் நஷ்டமில்லை என்று இலங்கை அரசு இங்கே சொல்லிக் கொண்டாலும், புலிகளை சர்வதேசக் கடற்கொள்ளையர்களாக வெளியுலகில் சித்தரிக்க இரகசிய முயற்சிகள் நடக்கின்றன.

அதனால்தான் மோட்டார் குண்டு கப்பல் காணாமல் போனதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் தாமதமாக மறுப்பு அறிக்கை விடுத்திருந்தனர்.

எனவே குறிப்பிட்ட கப்பலை சர்வதேசப் பொலிசார் கண்டுபிடித்தால் பெரும் நெருக்கடியாகிவிடும். ஆகவே தடயமே இல்லாமல் அழிப்பது ஒன்றுதான் புத்தி சாலித்தனம் என்ற முடிவுக்கு புலிகள் வந்திருக்கலாம்.

அக் கப்பலில் ஆயுதங்கள், மருந்துப் பொருட்கள், ஏவுகணைகள் என்பவற்றை கொண்டு வந்து இறக்குவது. அதுதான் அக்கப்பலின் கடைசிப் பயணம் என்று முடிவு பண்ணி இருக்கக்கூடும்.

சரி அழிப்பதுதான் அழிக்கிறோம், கடற்படையினருக்கு பொறியாக வைத்துப் பார்க்கலாமே என்று கடற் தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டிருக்கலாம்.

ஆனால் கடற்படையினருக்கு அனுபவம் உண்டு. ஐரிஸ்மோனா பயணிகள் கப்பலை கேடயமாக வைத்து கடற்புலிகள் முன்னர் வலைவிரித்தனர். டோரா படகுகளை தாக்கினர். கைப்பற்றியும் கொண்டனர்.

எனவே இம் முறை கடற்படையினர் வெகு தொலைவில் நின்று கொண்டனர். கப்பல் ஒன்று நிற்பதுபோல தெரிகிறது என்று விமானப்படைக்கு தகவல் கொடுத்து விட்டு நின்றுவிட்டனர்.

பின்னர் கப்பலை விமானப்படையினர் தாக்கிய பின்னர், வானில் விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதுதான் கப்பலை சமீபித்து ரவுண்ட் அடித்திருக்கிறார்கள். அதுதான் படத்தில் பதிவாகி இருந்தது.

**எனவே கடற்படையினரை தாக்கும் புலிகளின் திட்டம் பலிக்கவில்லை. ஆனால் கப்பலை தடயமே இல்லாமல் அழிக்கும் நோக்கம் மட்டும் நிறைவேறிவிட்டது.**

குறிப்பிட்ட கப்பலை கடற்படையினரால் கைப்பற்ற முடிந்திருந்தால், அதனால் பல சாதகங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் அதற்கு கடற்புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என்று முடிவு செய்து, கப்பலை அழிக்க முடிவு செய்தமையானது கடற்படையினரின் பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

1993ல் கிட்டு ஆயுதங்களுடன் கொண்டு வந்த டொங்நோவா என்ற கப்பலை இந்தியக் கடற்படையினர் முற்றுகையிட்டனர். குண்டுகளை வெடிக்கவைத்து கப்பலை புலிகள் தகர்த்தபோதும், கப்பலில் இருந்து குதித்தவர்களை இந்தியக் கடற்படையினர் கைது செய்தனர்.

ஆனால் இலங்கைக் கடற்படையினர் கப்பலை நெருங்கவே முயலவில்லை. பிறிதொரு நாட்டு போர்க்கப்பலை அணுகுவது போன்றே பெரிய எடுப்புக்களுடன் தாக்குதல் நடந்துள்ளது.

உளவு விமானத்தை விட்டு படம் எடுத்தோம். பின்னர் விமானங்களை அனுப்பி தாக்கினோம் என்கிறார்கள். பட்டப்பகலில் கடலில் நிற்கும் பாரிய கப்பலைப் பார்க்க உளவு விமானம் ஏன்? சாதாரண ஹெலிகொப்டரில் சென்றே பார்த்திருக்கலாம்.

உளவு விமானம் படம் பிடிப்பது, அதனைத் திரையில் காண்பது என்பன நம்நாட்டு மக்களுக்கு புதிது என்பதால், அந்த ஆச்சரியங்களுக்குள் பல உண்மைகள் அமுங்கிப் போய்விட்டன.

பலத்த கண்காணிப்புக்கள் மத்தியிலும் முல்லைக் கடலுக்குள் கப்பல் புகுந்திருக்கிறது. இரவு முழுக்க நின்றிருக்கிறது. ஆயுதங்களை இறக்க முடிந்திருக்கிறது. அதுவரை கண்ணை மூடிக்கொண்டு இருந்த பலவீனத்தை மறைக்க, கப்பல் தாக்குதலை பிரமாண்டமாக விபரிக்கும் முயற்சி நடந்திருக்கிறது. ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**மாபெரும் தலைநகரில்** வாகனம் நிறுத்த இடமில்லை. பாதசாரிகள்மீதும் ஒரு கண்தான், பையோடு செல்லும் பாதசாரிகள் சிரமப் பட நேரலாம். எல்லாம் பாதுகாப்புக் கருதித்தான். 'காட்டில் இருந்தபடி நாட்டின் தலைநகரையே ஆட்டிப் படைக்கினம்' எண்டு பெரும்பான்மை இன நண்பர் ஒருத்தர் 'கொமண்ட்' பண்ணினார். நான் மூச்சுக் காட்டேல்லை.

**எந்த வாகனம்** வாங்கினாலும் லொறி வாங்கக்கூடாது. மீறி வாங்கினா சொந்த வாகனம் வாங்கி மனம் நொந்து, உள்ளே இருந்து வெந்து போக வேண்டியிருக்கும். தலைநகர வெடிப்பின்பின்னர் லொறி வாங்குவோர் விடயத்தில் கடும் விழிப்பாக இருக்கினம். புதுசா லொறி வாங்கின கொஞ்சப் பேரை இனபேதம் இல்லாமல் அள்ளிக்கொண்டுபோய் லொறி லோட் கணக்கான கேள்விகளாம். லொறியை வாங்குவானேன், லொள்ளுப்படுவானேன்?

**லொள்ளுப்பற்றி** எழுதும்போது ஒரு ஜொள்ளுச் செய்தி காதில் விழுந்தது. யாழ குடாநாட்டில் இயக்க உறுப்பினர்கள் பலத்த ரோந்துகளில் ஈடுபட்டுவருகிறார்களாம். முன்னர் ஒரு காலத்தில் 'சுழட்டல்' என்று அழைக்கப்பட்ட காரியம்தான் இப்போது இயக்கப் பாஷையில் 'ரோந்து' என இயம்பப்படுகிறதாம். பஸ் நிலையம், பெண்கள் பாடசாலைகள் பக்கமாக ரோந்துகளில் அதி தீவிரம் காட்டுகிறார்களாம். விரைவில் பலர் மணமகன்களாக மாறும் யோகமுண்டாம்! யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஒரு இயக்க முக்கியஸ்தர் அடிக்கடி காணப்படுகிறாராம். வாழ்க மாநகரக் காதல்!

**கூட்டான கட்சித்** தலைவர் வாஹினிக்கு பேட்டி கொடுத்து கலக்கிப்போட்டார். 'கைதுகள் நடக்குது, பால் கெடுபிடி இருக்குது, அதிகாரத் தரப்பாரை நம்பலாமோ?' எண்டு கேள்வி கேட்கப்பட்டது. காந்தியவாதி டென்ஷனாகிப் போனார். தலைவர் சொன்ன சூடான பதில் இது: "கடந்த காலத்தில் நடந்ததை மறப்பது தமிழர்களின் குணம். இந்த அரசாங்க காலத்தை விட, 77 இலும் 83 இலும் நடந்ததையெல்லாம் மறந்து போனீர்களோ?" என்று கேட்டார். யாரும் மறக்கவில்லை. 77ல் தமிழர்களை கொளுத்திய ஜே.ஆரை அதன் பின்னர் நல்லவர்- வல்லவர் எண்டு பாராட்டியது தலைவரின் சகா அமுதர் தானே? அதுசரி ஐயா- ஏன் 77 உடன் நிறுத்திக்கொண்டார்? முதன் முதலாக தமிழருக்கு எதிரான கலவரம் பெரிசா நடந்தது 56ல தானே? காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்த தலைவர்களை காடையர்களைவிட்டு தாக்கியவர் மிஸ்டர் பண்டாரநாயக்கா என்று கூட்டணிதானே மேடைகளில் சொன்னது? அதையெல்லாம் ஏன் தலைவர் நினைவுபடுத்தவில்லை. அவர் மறந்ததுபோல் நடிப்பது சாணக்கியமாக்கும்! ஹி.ஹி.ஹி. அது சரி ஐயா, எப்போது அம்மையாரின் பேச்சாளரானவர்? 'பெரிய மனுசன்', 'மூத்த தலைவர்' எண்டு கொண்டாடின ஆட்களுக்கு இப்பவாவது வெளிக்குதோ?!

**"தலை நகரில் குண்டு** வெடித்தால்கூட தெருவில் சன நடமாட்டம் இருக்கும். கடைகளில் வியாபாரமும் நடக்கும். கிரிக்கெட் போட்டி நடந்தால் மட்டும் சன நடமாட்டமே இருக்காது. வியாபாரமும் படுத்துவிடும்." இது தலைநகர கடைக்காரர் ஒருத்தர் கவலையோடு சொன்ன தகவல். குண்டு வெடித்த நகரில் கடந்த வாரம் பட்டாசுச் சத்தம். மேற்கிந்திய தீவு அணியை இலங்கை அணி சாய்ச்சுப் போட்டுதாம்! போதாக் குறைக்கு ஹிந்தி நட்சத்திரங்களும் 'பைலா' போட வருகினம். 'பொப்' நாடு என்று நான் போன தடவை சொன்னது சரி தானே!

**சைக்கிளில் செல்வோர்** சோதனை முகாம்களில் நடந்து செல்லவேண்டும் என்பது யாழ் குடாநாட்டில் கட்டளை. உத்தரவு என்ன உத்தரவு? இறங்காமல், ஏறாமல் சில பெண் பிள்ளைகள் அரண்களைத் தாண்டிப்போகினம்! அதுக்கெல்லாம் டெக்னிக் இருக்குதுங்கோ. கொஞ்சம் சிரிப்பு, கொஞ்சம் இடக்குப் பேச்சு- நெஞ்சம் குளிருதாம் பச்சை உடையினருக்கு. இறங்காமல் போனாலும் கண்டுகொள்ள மாட்டினமாம்.

**யாழ் நகரில்** திரையரங்கு திறந்தே தீருவது எண்டு ஒற்றைக் காலில் நிற்பவர்களில் ஒருத்தர் கூட்டான கட்சிப் பிரமுகராம். முன்னர் வாத்தியாரின் தீவிர ரசிகராக இருந்த 'ராஜா'வாம். அதெல்லாம் இருக்க, 'அந்த மாதிரியான' படங்கள் எல்லாம் உரியவையின் மறைமுக ஆதரவுடன் ஓஹோவென்று ஓடுகிறதாம். 'என்ன வேண்டுமானாலும் செய்யுங்கோ இரண்டு எழுத்தாரை சப்போட் பண்ணாதேங்கோ' எண்டதுதான் பொலிசியாம்!

**இந்த வாரம்** ஒரு பொன்மொழி. இது சீனாவில் இருந்து இறக்குமதியானது.

"ஏழைகள்
ஜோசியர் வீட்டை விட்டு
வரமாட்டார்கள்.
செல்வர்கள்
மருந்துக்கடையைவிட்டு
வரமாட்டார்கள்!" ■



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர்** அற்புதன் —எழுதுவது

# பிரேமா அனுப்பிய ஆயுதங்கள்

இந்தியப் படையினரை திருப்பி அழைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசு பலமாக முன்வைக்கத் தொடங்கி இருந்தது.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினரும் இந்திய எதிர்ப்பில் முன்னணியில் நின்றனர்.

02.04.87 அன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அருகே குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றது.

'87 ஜூன் மாதம் முதல் இந்தியப் பொருட்களை யாரும் வாங்கக்கூடாது என்று கோரி ஜே.வி.பி. இயக்கத்தினர் பகிஷ்கரிப்பு தொடங்கினார்கள்.

ஒரு புறத்தில் போ போ என்றது இலங்கை அரசு. மறுபுறம் ஜே.வி.பி. இயக்கத்தினர் இந்திய விரோத உணர்ச்சியை வளர்த்துக் கொண்டிருந்தனர்.

வடக்கு-கிழக்கில் புலிகள் இந்தியப் படையினரை எதிர்த்து சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். தமிழ் பேசும் மக்களிடமும் இந்தியப் படையினருக்கு நற்பெயர் இல்லை.

இந்தியா நம்பியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற இயக்கங்களால் புலிகளையும் எதிர்க்க இயலவில்லை, இந்திய உதவியைப் பயன்படுத்தி தங்கள் பலத்தை நிலைப்படுத்திக் கொள்ளவும் இல்லை. அதற்கு மாறாக தமது கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளால் இந்தியப் படைக்கும் சேர்த்து கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்த வண்ணமிருந்தன.

கால்வைத்துவிட்டோம். இனி கௌரவமாக மீளவேண்டும் என்ற கவலை இந்தியத் தரப்பினருக்கு ஏற்பட்டுவிட்டது.

கடினமான போக்குடையவரும், இந்திய, இலங்கை ஒப்பந்தம் ஏற்படக் காரணமானவர்களில் ஒருவர் என்றும் கருதப்பட்ட இலங்கைக்கான தூதர் திக்ஷித் திருப்பி அழைக்கப்பட்டார்.

களாலும் முடியவில்லை.

இந்தியப் படை வெளியேறியே தீர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதைக்கூட இந்த இயக்கங்களால் கணிப்பிட முடியாமல் போய்விட்டது.

சூழ்நிலை மாறப்போவதை கணிப்பிட்டு, இந்தியப் படை வெளியேறிய பின்னர் தாங்கள் தனித்து நிற்கக்கூடிய தயாரிப்புக்களை செய்யும் ஆற்றலோ, விவேகமோ கூட இந்த இயக்கத் தலைமைகளிடம் இருக்கவில்லை.

இந்தியப்படையை எப்படியாவது தடுத்து நிறுத்தினால் போதும் என்றுதான் நினைத்தார்கள். இந்தியத் தேர்தலில் ராஜீவ் தலைமையிலான காங்கிரஸ் தோல்வியடையப் போகிறது என்பது கூட இவர்களுக்கு தெரியாமல் இருந்ததுதான் விந்தை.

வில்லை. மலையகத் தமிழ் மக்களிடம் தன் தோள் உயர்த்திக் காட்ட தொண்டமான் அவர்கள் கூறிய கருத்துத்தான் அது.

## மாகாணசபை தீர்மானம்

"இந்தியப் படையினர் இங்கிருந்து வெளியேறக் கூடாது." என்று வடக்கு-கிழக்கு மாகாணசபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார் வரதராஜப் பெருமாள்.

அத் தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரசின் அம்பாறை மாவட்ட உறுப்பினர் எம்.ஐ.நிசாம்டீன் ஆமோதித்தார்.

அந்தத் தீர்மானத்தின் வாசகம் இதுதான்:

"தமிழ் பேசும் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய நாங்கள், இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து, இந்திய அமைதி காக்கும் படையினை



'ஐலன்ட்' வெளியிட்ட காட்டூன்

ஒருவர் கூறிய கருத்து, வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு கலக்கத்தைக் கொடுத்தது.

"வெகு விரைவில் இந்தியப் படை இலங்கையில் இருந்து வெளியேறும். அதற்கான உகந்த சூழ்நிலை ஒன்றை உருவாக்க இலங்கையுடன் இந்தியா தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது" என்று அந்தப் பேச்சாளர் கூறியதாக ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்திருந்தது.

இச் செய்தி இங்குள்ள பத்திரிகைகளிலும் வெளியானது. செய்தியைக் கண்ணுற்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களின் உறுப்பினர்கள் ஆடிப்போனார்கள்.

தங்கள் ஆட்டம் முடிவுக்கு வரப்போகிறது என்று தெரிந்துவிட்டது. உடனே பலத்த தயாரிப்புக்களில் இறங்கினார்கள்.

கொள்ளைகள் மளமளவென்று நடந்தன. சில வீடுகளுக்குள் கொள்ளையிடச் சென்றபோது தேடிப்போன அளவுக்கு நகைகள் கிடைக்கவில்லை என்றால், அந்த வீட்டுப் பெண்கள் அணிந்திருந்த தோடுகளைக்கூட பிடுங்கிக் கொண்டார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் அப்போது முக்கியஸ்தராக இருந்த தங்கன் என்ற சுதாகர் பற்றி முன்னரே விபரித்திருந்தேன்.

சுன்னாகத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த தங்கன் கோஷ்டிக்கு எதிர்பார்த்த பணமோ நகையோ கிடைக்கவில்லை.

அந்த வீட்டில் இருந்த பெண்கள் அழகாக இருந்தனர். ஒரு இளம் பெண்ணை துப்பாக்கி முனையில் ஒரு அறைக்குள் கொண்டு சென்ற தங்கன், ஆடைகளை களையுமாறு மிரட்டி இருக்கிறான்.

வெளியே நின்றவர்கள் துணிச்சலாக அபயக்குரல் கொடுத்தனர். அதனால் தங்கன் கோஷ்டி தப்பியோடியது. அப்படி ஓடும்போது ஒரு பெண்ணின் காதில் இருந்த தோட்டைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். அப்பெண்ணின் காது அறுந்து தொங்கியது.

இந்தியப் படை வெளியேற முன்னர் சுறுட்டுவதை சுறுட்டவேண்டும் தாகத்தில்

செல்லத் தவறினால் பதவிகள் காலியாகும்.

ஜனாதிபதி விரும்பினால் மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கலாம்.

ஈரோஸ் எம்.பி.கள் அனைவரும் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்டுத் தெரிவானவர்கள்.

ஈரோஸ் எம்.பி.கள் அனைவரும் பாராளுமன்றம் செல்லத் தவறியதால் அவர்கள் பதவி காலாவதியாகும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

## இரகசியத் தொடர்பு

இதற்கிடையே புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே இரகசியத் தொடர்புகள் ஏற்படத் தொடங்கி இருந்தன

**இந்தத் தொடர்புகள் ஏற்படுவதற்கு சூத்திரதாரியாக இருந்தவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரியான கொத்தலாவல.**

கிட்டு யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தபோது நடைபெற்ற கைதிப் பரிமாற்றங்கள் பற்றி இத் தொடரில் முன்னரே கூறப்பட்டுள்ளது.

அப்போது கிட்டுவுக்கும், கொத்தலாவலவுக்கும் இடையே நட்பு ஏற்பட்டிருந்தது. அந்த நட்புத்தான் பின்னர் பிரேமதாசாவுக்கும் புலிகள் இடையே தொடர்புகள் ஏற்பட பாலமாக அமைந்தன.

இந்தியப் படைக்கு எதிரான பிரேமதாசாவின் நிலைப்பாட்டை பயன்படுத்திக் கொள்ளலாம். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இலங்கை அரசுடன் நட்பை ஏற்படுத்தலாம் என்று புலிகளுக்குள் ஒரு சாரார் விரும்பினார்கள்.

கிட்டு, அன்ரன் பாலசிங்கம், மாத்தையா ஆகியோர்தான் இலங்கை அரசுடன் தந்திரோபாயமாக ஒரு உறவை ஏற்படுத்தலாம் என்று விரும்பினார்கள்.

ஆனால் பிரபாகரன் முதலில் அதனை விரும்பவில்லை. "சிங்கள அரசுகளை நம்பக்கூடாது. அவர்களது வலையில் விழுந்து இலட்சியத்தை விட்டுக் கொடுக்க முடியாது" என்றுவிட்டார்

# படை வெளியேற்ற கோரிக்கையும் ஆட்டம் கண்ட இயக்கங்களும்




இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதராக மொஹரோத்திரா நியமிக்கப்பட்டார்.

"இந்தியப்படை வெளியேறுவதற்கு காலக்கெடு எதுவும் விதிக்க முடியாது" என்று ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துக் கூறினார் இந்தியத் தூதர்.

## கூட்டறிக்கைகள்

காலக்கெடு விதிக்க முடியாது. ஒப்பந்தம் அமுலாக்கப்படுவதை பார்த்துத்தான் வெளியேறுவோம் என்று இந்தியா சொன்னதே தவிர, இந்தியப் படை அதிகாரிகள் பலர் வெறுத்துப்போயிருந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் நாம் வேண்டாத விருந்தாளிகள் ஆகிவிட்டோம். இலங்கை அரசும் வெளியேறச் சொல்கிறது. இனிமேலும் இங்கிருப்பது மரியாதையாக இருக்காது என்று நினைக்கத் தொடங்கிவிட்டனர்.

விடுதலைப் புலிகளின் போர் ஆற்றல், விடா முயற்சி என்பவையும் இந்தியப்படை அதிகாரிகளுக்கு வியப்புக்குரியதாகின.

ஆயுதம் கொடுத்து, போதிய உதவிகள் கொடுத்து ஊக்குவித்தும்கூட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் தாக்குப் பிடிக்க முடியவில்லையே என்பது, புலிகள் பற்றிய மதிப்பை இந்தியப் படை அதிகாரிகளிடம் மேலும் வளர்த்துவிட்டது.

இதற்கிடையே வரதராஜப்பெருமாள் இந்தியாவுக்கு பறந்துபோனார். பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்தார்.

இந்தியப் படையை வாபஸ் பெற வேண்டாம் என்று ராஜீவ் காந்தியிடம் கோரிக்கை விடுத்தார் வரதராஜப் பெருமாள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ ஆகிய மூன்று இயக்கங்களும் கூட்டாக அறிக்கை விட்டன.

"இந்தியப் படையை வாபஸ்வாங்க ஏற்ற தருணம் இதுவல்ல" என்று மூன்று இயக்கங்களும் கூறியிருந்தன.

இந்தியப்படை வெளியேறினால் தம்மால் ஒரு நிமிடம்கூட தாக்குப் பிடிக்க முடியாது என்பது மூன்று இயக்கங்களுக்கும் நன்கு தெரிந்திருந்தது.

இத்தனைக்கும் மூன்று இயக்கங்களதும் உறுப்பினர்கள், மற்றும் தொண்டர் படைக்காக கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்கள் என்று அனைவரையும் கூட்டிப் பார்த்தால் புலிகளின் ஆட்பலத்தைவிட அதிகம் இருந்தனர்.

ஆயுதம் இருந்தும், ஆட்பலம் இருந்தும், இந்தியா என்னும் மாபெரும் நாட்டின் படைகள் பக்க பலமாய் நின்றும்கூட அதனை பயன்படுத்த மூன்று இயக்கங்

வடக்கு-கிழக்கில் ஊர்வலங்கள் நடத்தினார்கள். பல்வேறு பெயர்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தினார்கள்.

வடக்கு-கிழக்கு முழுவதும் இந்தியப் படைக்கு ஆதரவாக பல்வேறு அமைப்புக்கள் போராடுகின்றன என்று காண்பிக்க 'ஈழத் தமிழர் ஒன்றியம்', 'தேசடக்தர்கள்' என்று பல புதிய பெயர்களில் சுவரொட்டிகள் முளைத்தன.

மட்டக்களப்பு களுதாவளையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் ஈழத்தமிழர் ஒன்றியம் என்ற பெயரில் ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள்.

ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்ட சுலோகங்களில் ஒன்று வாய் வீச்சுக்கு அருமையான உதாரணம்.

அது இதுதான்:

"முதல்வரே! தமிழீழத்தைப் பிரகடனம் செய்!"

தன்னைக் காத்துக்கொள்ளவே முடியாத வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரிடம் தமிழீழப் பிரகடனம் செய்யுமாறு கேட்டது எத்தனை வேடிக்கை. வாய்வீச்சுக்கு ஒரு எல்லையே இருக்கவில்லை.

## தொண்டா மிரட்டல்

நடக்காது என்று தெரிந்தாலும்,மக்களிடம் எடுபடும் என்று தெரிந்தால் அதிரடியான பேச்சுக்களையும், பேட்டிகளையும் கொடுப்பது தொண்டமான் அவர்களின் பாணி.

"இந்தியப் படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக இலங்கையும், இந்தியாவும்



கட்டாய ஆட்சேர்ப்பு மூலம் திரட்டப்பட்ட தொண்டர்படை

புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவேண்டும்" என்று கூறினார் தொண்டமான். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கை தேவையற்றதாகிவிட்டது என்றும் தொண்டமான் கூறியிருந்தார்.

ஜே.வி.பி. இயக்கத்தினரின் இந்திய எதிர்ப்பு பற்றியும் தொண்டமானிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு தொண்டமான் கூறிய பதில்:

"இந்தியத் தமிழர்கள் தாக்கப்பட்டால் இந்தியப்படை தெற்கேயும் வரும்."

உண்மையில் இந்தியத் தமிழர்களைத் தாக்கும் எண்ணம் ஜே.வி.பி.யினருக்கு இருக்க

வாபஸ் பெறுவதற்காக இலங்கை ஜனாதிபதி தன்னிச்சையாக விடுத்த வேண்டுகோளை சந்தேகத்திற்கு இடமற்றவகையில் கண்டனம் செய்கிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கு இந்திய, இலங்கை சமாதான உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் சரியான முறையில் கொடுக்கப்படுகின்றபோதும், தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய, உறுதியான ஒரு மாகாண பாதுகாப்புப்படை உருவாக்கப்படுகின்ற பொழுதிலுமே, இந்திய அமைதி காக்கும் படை வெளியேறுவது பற்றி தமிழ் பேசும் மக்களாலும், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலும் கருத்தில் எடுக்கப்படும்" என்பதுதான் தீர்மானம்.

## திண்டாட்டம்

06.06.89 அன்று புதுடில்லியில் இந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணியான தேசிய முன்னணிக் கூட்டம் இடம்பெற்றது. வி.பி. சிங்: தலைமை தாங்கினார்.

தேசிய முன்னணியில் தி.மு.க.வும் அங்கம் வகித்தது.

பின்வரும் தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது.

"இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப்படையை விலக்க காலக்கெடு விதித்துள்ளார். பிரதமர் ராஜீவ் காந்தியின் இலங்கைக் கொள்கை முற்றிலும் தோல்வி அடைந்திருப்பதையே இது காட்டுகிறது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து உடன் வெளியேறுவதே சரியாக இருக்கும்" என்று தீர்மானம் இயற்றினார்கள்.

இதனையடுத்து 6.06.89 அன்று செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர்

ஆளாளுக்கு கொள்ளையிடத் தொடங்கினார்கள். தலைமையால் கட்டுப்படுத்த இயலவில்லை.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## ஈரோஸ் எம்.பி.கள்

பாராளுமன்றத் தேர்தலில் பதின்மூன்று எம்.பி.கள் ஈரோசுக்கு இருந்தனர்.

தேர்தலில் போட்டியிட புலிகளின் அனுமதிக்காக ஈரோஸ் காத்திருந்தமை பற்றி முன்னர் விபரித்திருந்தேன்.

தேர்தலில் வெற்றியீட்டிய பின்னரும் ஈரோஸ் புலிகளின் அனுமதிக்காகக் காத்திருந்தது.

பாராளுமன்றம் செல்வதற்கான அனுமதியைப் பொறுவதற்காகவே இம்முறை காத்திருந்தனர்.

அப்போது யாழ் மாவட்டத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்தவர் கந்தசாமி.

ஈரோஸ் தலைவர் பாலகுமாரை சந்தித்த கந்தசாமி புலிகளின் நிலைப்பாட்டை விளக்கினார்.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஈரோஸ் பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க வேண்டும் என்றார் கந்தசாமி.

நான்கு அம்சக் கோரிக்கைகள் எவை என்பதையும் கந்தசாமியே எடுத்துக் கூறினார்.

**நிரந்தர யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை நடத்துதல், அரசியல் அமைப்பு சட்டத்தின் ஆறாவது ஷரத்தை நீக்குதல், சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் என்பவைதான் அந்த நான்கு அம்சக் கோரிக்கைகள்.**

தேர்தல் சட்டப்படி அரசியல் கட்சிகள் ஆறுமாதமும், சுயேட்சைக் குழுக்கள் மூன்று மாத காலமும் தொடர்ச்சியாக பாராளுமன்றம்

பிரபாகரன்.

அன்ரன் பாலசிங்கம், மாத்தையா ஆகியோர் பிரபாகரனை பேச்சுக்கு உடன்படச் செய்யப் படாத பாடுபட்டனர்.

இறுதியாகப் பிரபாகரன் சம்மதித்தார். ஆனாலும் ஒரு நிபந்தனை விதித்தார்.

**"மூன்று மாத கால அவகாசம் தருவேன் அதற்குள் பேச்சுக்களால் பயன் ஏதும் இல்லை என்று தெரிந்தால், மறுபடி சண்டை தொடங்கிவிடுவேன். அப்போது நீங்கள் கொழும்பில் நிற்கிறீர்களா, இங்கே நிற்கிறீர்களா என்றுகூட பார்க்கமாட்டேன்" என்றாராம் பிரபாகரன்.**

அரசுடன் பேச்சு நடத்தும் பொறுப்பு புலிகளின் அரசியல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

"எக்கட்டத்திலும் பேச்சில் நான் கலந்துகொள்ளமாட்டேன். என்னை வற்புறுத்தவும் கூடாது" என்றும் சொல்லிவிட்டார் பிரபாகரன்.

**பேச்சுக்கான இரகசிய முயற்சிகள் நடந்து கொண்டிருந்தபோதே, இலங்கை அரசு சார்பாக தமது நல்லெண்ணத்தை காட்டும் வகையில் ஒரு தொகை ஆயுதங்கள் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.**

அரசு, புலிகள் பேச்சுவார்த்தை பற்றிய செய்திகள் பகிரங்கத்துக்கு வர முன்னரே பிரேமதாசா அரசின் முதற்கட்ட ஆயுதங்கள் வன்னிக்குப் போய்ச் சேர்ந்தன.

அப்போது வவுனியாவில் இராணுவ பொறுப்பதிகாரியாக இருந்தவர் டென்சில் கொப்பக்கடுவ.

டென்சின் கொப்பக்கடுவவுக்கு புலிகளை பலப்படுத்துவதில் இஷ்டமில்லை. அதேசமயம் இந்தியப் படையினர் இங்கு வந்ததும் விருப்பமில்லை.

அதனால் புலிகளுக்கு ஆயுதம் கொடுக்குமாறு மேலே இருந்து வந்த உத்தரவை டென்சில் கொப்பக்கடுவ நிறைவேற்றினார்.

அதன்பின்னர் பேச்சுக்கு முன்பாக அரசியல் நாடகம் ஒன்றை அரங்கேற்றினார் பிரேமதாசா. (தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# 'பச்சைக் கொமாண்டோக்கள்'

## திரும்பிய இரகசியம்!

**பொ**துநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா விடுதலைப் புலிகளை தடை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அமெரிக்காவை பின்பற்றி ஏனைய நாடுகளும் விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி கோரியிருந்தார்.

ஏகாதிபத்திய சக்திகள் பற்றியும் எச்சரித்துவரும் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பின்பற்றுமாறு ஏனைய நாடுகளைக் கோருவது முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளது.

**ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்சகட்டமாகும். தனது நாட்டு மக்களை மட்டுமல்லாமல், உலக நாடுகளையும் சுரண்டுகின்ற உலக நாடுகளை ஆதிக்கம் செய்கின்ற கட்டமாகும்.**

பல நிறுவனங்களை கைக்குள் வைத்துள்ள ஏகபோக முதலாளிகள் தங்கள் பொருட்களை விற்க உலகெங்கும் சந்தை தேடும் கட்டமாகும்.

இன்றைய உலகில் ஏகாதிபத்திய தலைமைச்சக்தியாக இருப்பது அமெரிக்காதான். எனவே ஜனாதிபதி சந்திரிக்கா ஏகாதிபத்திய நாடுகள் குறித்து வளரும் நாடுகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கோரியிருப்பது அமெரிக்காவைப் பற்றிய எச்சரிக்கையாகவே கொள்ளவேண்டும்.

ஆனாலும் அதே அமெரிக்காவிடம் இராணுவ, பொருளாதார உதவிகளுக்காக கையேந்தும் நிலையில்தான் இலங்கை அரசு இருந்துவருகிறது.

**விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்கத் தடையின் பின்னர், அமெரிக்காவை நீதிமான்போல இலங்கை மக்களிடம் சித்தரிக்கவும் ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர்.**

எனவே ஏகாதிபத்தியம் தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் எச்சரிக்கை வெறுமனே உதட்டளவிலான பேச்சாகவே அமைந்திருக்கிறது.

இதற்கிடையே அமெரிக்க 'கிறீன்பெரட்ஸ்' என்றழைக்கப்படும் 'பச்சைக் கொமாண்டோக்கள்' இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

கொழும்பு கலதாரி குண்டுவெடிப்பை அடுத்தே பச்சைக் கொமாண்டோக்கள் அமெரிக்காவுக்கு திரும்பியுள்ளனர்.

இதற்கிடையே இலங்கைக்கு புதிய தூதரை நியமித்துள்ளது அமெரிக்கா. இலங்கை இராணுவத்தினரின் மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவும் ஆராயப்படவேண்டும் என்று அவர் கருத்துக் கூறியுள்ளார்.

இவற்றை அமெரிக்காவின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்று நினைத்துவிடக்கூடாது.

இலங்கை விவகாரத்தில் தனது இரட்டை வேடம் வெளிப்பட்டுவிட்டதால் அமெரிக்க வெளியுறவுத் துறை உஷாரடைந்துள்ளது என்பதே அர்த்தமாகும்.

**இலங்கை அரசும், அமெரிக்க அரசும் இணைந்து மேற்கொண்டுள்ள ஒரு நாடகம்தான் பச்சைக் கொமாண்டோக்கள் அமெரிக்கா திரும்பியுள்ளமையாகும்.**

இந்த நாடகத்தின் பின்னணியில் பல விடயங்கள் உள்ளன.

இலங்கைப் படையினருக்கு இங்கு வந்தும், அமெரிக்காவில் வைத்தும் பச்சைக் கொமாண்டோக்கள் உட்பட அமெரிக்க பயிற்சியாளர்கள் பயிற்சியளித்துள்ளனர்.

ஆயினும் விடுதலைப் புலிகளை தடை செய்த கையோடு, அமெரிக்க பச்சைக் கொமாண்டோக்கள் கொழும்பில் வந்து இறங்கிய செய்தி அம்பலமாகியமை அமெரிக்காவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

கொழும்பு கலதாரி குண்டுவெடிப்பின் முன்னரே அச் செய்தி வெளியே கசிந்திருந்தது. ஆனாலும் அது ஊர்ஜிதமான செய்தியாக அமைந்திருக்கவில்லை. பச்சைக் கொமாண்டோக்கள் எப்போது வந்தனர், எங்கு தங்கியுள்ளனர் என்ற தகவல்களை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

ஆனால் கொழும்பு கலதாரி குண்டுவெடிப்பு, காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதைபோலாகிவிட்டது. கலதாரி ஹொட்டலில்தான் அமெரிக்க கொமாண்டோக்கள் தங்கியிருந்தனர். அவ் ஹொட்டல் பகுதியில் குண்டு வெடித்தமையால் அமெரிக்க கொமாண்டோக்களைத்தான் புலிகள் குறிவைத்தனர் என்ற ஊகத்தை அரசாங்கமே அவசரப்பட்டு கிளப்பிவிட்டிருந்தது.

**புலிகளின் குண்டுவெடிப்பால் உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சியடையப் போகிறதே என்ற அதிர்ச்சியில் இலங்கை அரசும், அதன் பிரசார சாதனங்களும் குண்டுவெடிப்புத் தினத்தன்று தடுமாறிக்கொண்டிருந்தன.**

அதனால்தான் புலிகள் வெளியிட்ட மறுப்பைக்கூட இலங்கை அரசின் வானொலியும், தொலைக்காட்சிகளும் தங்கள் செய்தி அறிக்கைகளில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

**அமெரிக்க கொமாண்டோக்களுக்கே புலிகள் குறிவைத்தனர் என்று கூறுவதன் மூலம், உல்லாசப் பயணத்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அல்ல என்று காண்பிக்கவும் அரசாங்கம் விரும்பியது.**

இவையெல்லாம் அவசர கோலத்தில் முன்னுக்கு பின் முரணாக செய்யப்பட்ட பிரசாரங்கள்தான். இவற்றினால் எவ்வித பயனும் ஏற்பட்டிருக்கவில்லை.

**உல்லாசப் பயணத்துறைக்கும், வர்த்தக முதலீடுகளுக்கும் விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலே குண்டுத் தாக்குதல் என்பது ஐயத்துக்கிடமின்றி வெளிப்பட்டுள்ளது.**

ஆயினும் அரசாங்கத்தின் அவசரப் பிரசாரம் காரணமாக அமெரிக்க கொமாண்டோக்கள் இலங்கை வந்தமையும், கலதாரி ஹொட்டலில் தங்கி இருந்தமையும் உலகெங்கும் தெரியவந்தது.

இலங்கையில் அமைதியை நிலைநாட்ட உதவுவதாகக் கூறிக்கொண்டு, இங்கு நடைபெறும் யுத்தத்தில் அமெரிக்காவும் முக்கிய பங்காளியாக மாறியிருப்பதையே அச் செய்தி அம்பலமாக்கி இருந்தது.

அவ்வாறான செய்தியை அவசரப்பட்டு வெளியிட்டதற்காக இலங்கை அரசு பின்னர் வருந்தியே இருக்கும். குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்ட கதையாகிவிட்டது அரச பிரசாரம்.

எனவே, பச்சைக் கொமாண்டோக்களை திருப்பி அழைப்பதுபோல ஒரு நாடகமாடி, அச் செய்தி பத்திரிகைகளுக்கும் எட்டச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை அவதானித்த பின்னரே, எதிர்காலத்தில் பச்சை கொமாண்டோக்களை அனுப்புவது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று அமெரிக்கா கூறியிருக்கிறது. இக் கூற்றும் அமெரிக்கா தன்னை நீதிமானாக சித்தரிக்கும் முயற்சியாகவே அமைந்திருக்கிறது.

**வடக்கு-கிழக்கில் மனித உரிமை மீறல்கள், பாலியல் வல்லுறவுகள், குடியிருப்புக்கள் மீதான ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள் பற்றிய செய்திகள் எல்லாம் யுத்தம் ஆரம்பமான நாள் முதலாக வெளியாகி வருகின்றன.**

**அவற்றை அறிந்துகொண்டேதான் இலங்கை அரசுக்கு அமெரிக்கா இராணுவப் பயிற்சியும், பிற உதவிகளும் வழங்கிவந்தது, வருகிறது என்பது தெரிந்ததே.**

அதுதவிர, அமெரிக்கா மனித உரிமைகள் பற்றியும் அடிக்கடி நீலிக் கண்ணீர் வடிப்பது வழக்கமாகும். அவ்வாறு அமெரிக்கா மனித உரிமைகள் பற்றி விடுத்த அறிக்கைகளில் இலங்கை அரசினதும் படைகளினதும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்திருந்தது. இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்றெல்லாம் உபதேசித்திருந்தது.

**அதே அமெரிக்காதான் இலங்கை அரச படையினருக்கு தொடர்ந்து பயிற்சியளித்தது. அமெரிக்க பிரதி வெளிநாட்டமைச்சர் தனது இலங்கை விஜயத்தின்போது 'ஜயசிக்குறுய்' படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்கு நேரடியாக விஜயமும் செய்திருந்தார்.**

எனவே- பச்சைக் கொமாண்டோக்களை அமெரிக்கா திருப்பியழைத்ததும், இலங்கைப் படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் கவனிக்க வேண்டும் என்று அமெரிக்க தூதர் கூறியிருப்பதும் அமெரிக்காவின் மன மாற்றத்தை குறிப்பதல்ல, தனது சுயரூபத்தை மறைக்கும் முயற்சியே அது ஆகும்.

இதற்கிடையே இலங்கை அரசுக்கும் அமெரிக்காவுடன் தனக்குள்ள அதிகபட்ச நெருக்கத்தை சற்று மறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமையும் புலனாகியுள்ளது.

இந்தியாவின் பிரதமர் குஜ்ரால் இலங்கை விவகாரத்தில் என்னதான் கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும், இந்தியாவின் வெளியுறவுத்துறையும், உளவு நிறுவனங்களும் இலங்கை விவகாரங்கள் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்தே வருகின்றன.

இலங்கையில் அமெரிக்கத் தலையீடு தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை விழிப்போடு நோக்கிக் கொண்டிருக்கிறது.

**விடுதலைப் புலிகளை இந்தியாவும் தடை செய்துள்ளது. இந்நிலையில் அமெரிக்காவும் புலிகளை தடை செய்துள்ளதை இந்தியா வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் இந்தியா அதுபற்றி வாயே திறக்கவில்லை.**



அமெரிக்காவின் செயலைப் பாராட்டுவது இலங்கை விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டுக்கு ஆதரவளிப்பது போலாகிவிடும் என்பதால்தான் இந்திய அரசு மௌனம் சாதித்துள்ளது.

**ஆனால் இலங்கை அரசு வேறுவிதமாக நினைத்து இருந்தது. அமெரிக்கத் தடையை இந்தியா வரவேற்கும் என்று இலங்கை அரசு எதிர்பார்த்தது. அதனால்தான் அமெரிக்கத் தடை பற்றிய செய்தியை இந்தியப் பிரதமருக்கு உடனடியாக தெரிவித்தார் லக்ஷ்மன் கதிர்காமர்.**

இந்தியாவின் மௌனம் இலங்கை அரசுக்கு கவலையளித்தது. அதன்பின்னரே ஏகாதிபத்திய சக்திகள் பற்றி விழிப்பாக இருப்பதுபோன்ற பேச்சுக்கள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் இருந்து வெளிப்பட்டன. உலக வர்த்தக மையத் திறப்பு விழாவில் ஏகாதிபத்திய சக்திகளைப் பற்றி பொதுப்படையாக சாடியிருந்தார்.

இந்தியாவை திருப்திப்படுத்துவதோடு அமெரிக்க எதிர்ப்பு நாடுகளையும் சாந்தப்படுத்தும் முயற்சியே அது என்று கருத இடமுண்டு.

ஆயினும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருந்த கருத்து பொதுஜன முன்னணி ஆட்சியாளருக்கு பேரிடியாக அமைந்தது.

புலிகள்மீதான அமெரிக்கத் தடையை பொதுஜன முன்னணி அரசின் சாதனைகளில் ஒன்றாகவே ஆட்சியாளர்கள் கூறத்தலைப்பட்டனர்.

இதனால் வெறுப்புற்ற ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவின் தடை குறித்து ஆட்சியாளருக்கு அதிர்ச்சியளிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

"அமெரிக்கத் தடை புலிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. தவிர புலிகள் சிறு குழுவல்ல. அரச படையினருடன் சமபலத்தோடு போரிடும் அணியினர். எனவே புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று தடை செய்வதால் பயன் ஒன்றுமில்லை" என்று ரணில் கூறியிருந்தார்.

ரணில் கூறிய மற்றொரு கருத்து ஆட்சியாளரை மட்டுமல்லாமல், அமெரிக்காவையும் அதிர்ச்சியுறச் செய்திருந்தது. **"இலங்கை விவகாரத்தில் இந்தியா தவிர்ந்த, இந்தியாவுக்கு ஏற்புடையதல்லாத வெளியார் தலையீடுகள் இருக்கக்கூடாது."** என்று ரணில் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

இக் கருத்துக்கள் ஐ.தே.கட்சியின் அரசியல் நலன் கருதி முன்வைக்கப்பட்டவையே. பொதுஜன முன்னணிக்கு சாதகமான விடயங்களை பாதகமான விடயங்களாக சித்தரிப்பதுதான் ஐ.தே.கட்சியின் அரசியலாக உள்ளது. அதன் பிரதிபலிப்பே ரணில் கூறிய கருத்துக்களாகும்.

அமெரிக்க தலையீட்டுக்கு இங்கு முதலில் சிவப்புக் கம்பளம் விரித்தவர்கள் ஐ.தே.கட்சி ஆட்சியினர்தான். இப்போது அமெரிக்க நிலைப்பாடு பொதுஜன முன்னணி ஆட்சியாளர்களுக்கு சாதகமாக உள்ளதால் ஐ.தே.கட்சியினர் இந்தியாவின் நலன் விரும்பிகளாகி உள்ளனர்.

**தமிழ்பேசும் தரப்பைப் பொறுத்தவரை ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு சாதகமானது என்பதால், அதனைப் பயன்படுத்த முயல்வதே சரியானதாகும்.**

ரணில் இந்தியாவுக்கு சார்பாக பேசியதும், அதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கு விஜயம் செய்து அங்கு வெளியுறவுத் துறையினருடன் கலந்துபேசியதும் இலங்கை அரசுக்கு மகிழ்ச்சி தரத்தக்க செய்திகள் அல்ல.

இந்தியப் பிரதமர் குஜ்ரால் முன்னர் ஒருமுறை இலங்கை வந்திருந்தபோது எதிர்க்கட்சி தலைவர் ரணிலிடம் இந்தியா வருமாறு சம்பிரதாயபூர்வ அழைப்பு விடுத்திருந்தார். அதில் எந்த உள்நோக்கமும் இருக்கவில்லை.

ஆனால் தகுந்த நேரத்தில் அந்த அழைப்பை பயன்படுத்தி இந்தியாவுக்கு விஜயம் செய்தார் ரணில். இந்தக் கட்டத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்தால் அதற்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் இருக்கும், பல்வேறு ஊகங்களும் கிளம்பி பரபரப்பு ஏற்படும் என்று ரணில் நினைத்திருப்பார் போலும்.

இந்தியாவில் ரணில் சந்தித்த பிரமுர்கள் பற்றிய பட்டியல் ஜனாதிபதி சந்திரிக்காவரை சென்றது. அது மட்டுமல்லாமல் அமெரிக்க தூதரக வட்டாரங்கள் ஊடாக அமெரிக்க வெளியுறவுத்துறைக்கும் சென்றது.

**இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டும் என்றெல்லாம் ரணில் தெரிவித்த கருத்துக்கள் அமெரிக்க தலையீட்டுக்கும் மறைமுக எதிர்ப்புப்போலவே அமைந்தன. ஏனெனில் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துக்களில் ஒன்று, இலங்கையில் பிறநாடுகள் ஆதிக்கம் செலுத்துவதற்கும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்தியப் பிரதமர் குஜ்ரால் இலங்கை ஜனாதிபதிக்கும், வெளியுறவு அமைச்சர் கதிர்காமருக்கும் நெருக்கமானவர் என்றாலும்கூட, இந்திய வெளியுறவுத் துறைக்கு இந்தியாவின் நலன்தான் முக்கியமானதாகும்.

**எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் சிலர் ரணிலின் நிலைப்பாட்டை தட்டிக்கொடுத்தும் பாராட்டியுள்ளனர். இத் தகவல்கள் எல்லாம் இலங்கை அரசுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கும் உள்ளூர கசப்பை கொடுத்த தகவல்கள்தான்.**

கொழும்பில் நடைபெற்ற மிகப் பாரிய குண்டுவெடிப்பை பலநாடுகள் சம்பிரதாயமாக கண்டித்திருந்தன. ஆனால் இந்தியா மட்டும் கண்டிக்கவில்லை என்பதும் இலங்கை அரசுக்கு கவலை அளித்திருக்கிறதாம்.

இவ்வாறான சூழலில்தான் இலங்கை அரசும், அமெரிக்காவும் இரகசியமாகப் பேசி ஒருநாடகத்தை அரங்கேற்றியுள்ளன.

**இந்தியாவின் வெறுப்பை சம்பாதிப்பது அமெரிக்காவுக்கும் பாதகம்தான். இலங்கையில் பலமாக காலூன்ற முன்னரே இந்தியாவின் சந்தேகப்பார்வையை கிளறிவிடுவானேன் என்று நினைக்கிறது அமெரிக்கா.**

மறுபுறம் மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் மத்தியில் புலிகள் மீதான தடைக்கு வரவேற்பில்லை என்றும் அமெரிக்காவுக்கு தெரிந்துவிட்டது.

அமெரிக்கா புலிகளை தடைசெய்தால், அதனை வைத்து உலகின் பல நாடுகளில் புலிகளை தடைசெய்யலாம் என்று இலங்கை வெளிநாட்டமைச்சு அமெரிக்காவுக்கு நம்பிக்கை ஊட்டியிருந்தது.

**ஆனால், அமெரிக்கா தவிர்ந்த எந்தவொரு நாடும் புலிகளை தடை செய்யும் கோரிக்கையை ஏற்க முன்வரவில்லை. பிரிட்டனில் ஜனாதிபதி சந்திரிக்காவை எதிர்த்து புலிகளின் ஆதரவாளர்களும், தமிழ் அமைப்புக்களும் ஆர்ப்பாட்டமும் நடத்தியிருந்தனர். அதற்கு அனுமதி வழங்கவேண்டாம் என இலங்க விடுத்த் கோரிக்கையையும் பிரிட்டன் நிராகரித்திருந்தது.**

இலங்கையில் புலிகளை தடைசெய்ய மாட்டோம், வெளிநாடுகளில் தடை செய்யுங்கள் என்று கோரும் இலங்கை அரசின் கோரிக்கையை அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகள் கேலியாகவே நோக்குகின்றன.

இந்நிலையில் அமெரிக்கா மூக்குடைபட்டு நிற்கிறது. இந்தியாவின் அதிருப்தி, ரணிலின் நிலைப்பாடுகள் என்பவற்றால் இலங்கை அரசும் அமெரிக்காவுடன் இரண்டறக் கலக்கவில்லை என்று காண்பிக்கவேண்டி ஏற்பட்டது.

இதன் காரணமாகவே பச்சைக் கொமாண்டோக்கள் அமெரிக்கா திரும்ப முடிவு செய்யப்பட்டது.

**ஒரு வழியால் சென்று, மறுவழியால் உள்ளே வருவது அமெரிக்காவுக்கு தெரியாத வித்தையல்ல. அமெரிக்க உதவி இலங்கை அரசின் யுத்த நடவடிக்கைகளுக்குத் தொடரவே செய்யும்.**

எனினும் ரணில் தற்போது எடுத்துள்ள நிலைப்பாடு தமிழ்பேசும் தரப்புக்கு சாதகம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

**உலக நாடுகள் பல புலிகளை தடைசெய்தால், சர்வதேச அரங்கில் தனிமைப்பட்ட புலிகளின் கைகளை பின்புறமாக முறுக்கி, பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரலாம் என்பதே அரசின் நோக்கமாகும். புலிகள் மீதான தடை புலிகளை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாகவே தமிழ் பேசும் தரப்பையும் பலவீனமாக்கும். அந்நிலையில் அரைகுறைத் தீர்வை மறுபேச்சின்றி ஏற்கச் செய்யலாம் என்பதுதான் அரசின் மூல உபாயமாகும்.**

அதனால்தான் இலங்கையில் தடை கிடையாது, உலக நாடுகளில் தடை செய்யுங்கள் என்ற நிலைப்பாட்டை அரசு முன்வைத்துள்ளது. மேலோட்டமாக நோக்கினால் இந்த நிலைப்பாடு முன்னுக்கு பின் முரணாகத் தெரியும். ஆனால், திட்டமிட்ட நோக்கத்தோடுதான் இலங்கையில் புலிகளை தடை செய்யாமல், உலக அரங்கில் தடை செய்யக்கோரும் தந்திரத்தை அரசு கையாளுகிறது.

இந்த நிலைப்பாடு ஒட்டுமொத்தமாக தமிழ்பேசும் தரப்பின் அரசியல் கோரிக்கைகளையும், அவற்றை முன்னெடுக்கும் தளங்களையும் சேதமாக்கக்கூடியதாகும். எனவேதான் அரசின் இத்தகைய தந்திரத்தை பலவீனப்படுத்தும் ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு தமிழ்பேசும் தரப்புக்கு சாதகமானதேயாகும்.

இத்தகைய நிலைப்பாடுகளை முன்வைக்க ஐ.தே.கட்சிக்கு அதன் சொந்த அரசியல் நலன்களே காரணமாக இருக்கின்றன. அதனை தமிழ்பேசும் தரப்பு தனது அரசியல் நலன்களுக்காக பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் இற்றைவரை, தமிழ்பேசும் கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளை பெரும்பான்மை இனக் கட்சிகளும், ஆட்சியாளரும் பயன்படுத்துவதே நடந்துவருகிறது.

தமிழ் பேசும் கட்சிகளின் தலைமைகள் குறிக்கோள் இன்றியும், அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்கும் ஆற்றல் இன்றியும் செயற்படுவதுடன், தங்கள் எதிர்த்தரப்புக்களை ஒன்றுபடுத்தவும் முற்பட்டு வருகின்றன.

---

## மாறியது ஏனோ?



பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசு சமர்ப்பித்த யோசனைகள் மற்றும் ஏனைய கட்சிகளின் சாட்சியங்கள் என்பவை அடங்கிய விசேட அறிக்கையை நீதியமைச்சர் பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் அல்லவா.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டம் 94 இன் கீழ் ஒரு தெரிவுக்குழு தான் விரும்பினால் விசேட அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கலாம்.

ஆனால் தெரிவுக்குழுவுக்குள் உள்ள கட்சிகள் உடன்பட மறுத்தால் மேற்குறிப்பிட்ட நிலையியற் சட்டப்படி அறிக்கை சமர்ப்பிக்க முடியாது.

அதனால் ஈ.பி.டி.பி., புளொட், கூட்டணி, மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவற்றுடன் நாசூக்காகப் பேசி அறிக்கை முன்வைக்க சம்மதம் வாங்கினார் பீரிஸ்.

முதலில் ஐ.தே.கட்சியும் அதற்கு உடன்பட்டது. குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால், தீர்வை முன்வைக்கும் காலம் இழுத்தடிக்கப்படும். அது நல்லதுதான் என ஐ.தே.கட்சி நினைத்திருந்தது.

குறிப்பிட்ட விசேட அறிக்கையின் முன்னுரையை கூட்டணியும், ஐ.தே.கட்சியும் இணைந்தே தயாரித்தன.

இதன் பின்னர் இந்தியா சென்றிருந்தார் ரணில். இந்தியாவில் ரணில் சந்தித்த முக்கிய பிரமுகர்கள் இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு மாறான விடயங்களை ஏற்கவேண்டாம் என்று கூறியதாகவும், அமெரிக்க தலையீடுகள் பற்றியும் கவலை தெரிவித்ததாகவும் தகவல்.

இதனை அடுத்தே ரணிலுக்கு உற்சாகம் பீறிட்டது. உடனே அங்கிருந்தபடியே தனது பாராளுமன்ற குழுவுக்கு தகவல் அனுப்பினாராம். "பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தால் எதிர்ப்புக் காட்டுங்கள்" என்று உத்தரவிட்டாராம்.

---

## அப்படிப் போடு அண்ணாச்சி



நிலன்

பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் முன்வைத்த விசேட அறிக்கைக்கான முன்னுரையை தாமும், கூட்டணியினருமே எழுதியதாக திரு.ரொனி டிமெல் சொல்லிவிட்டார். குட்டு உடைந்த நிலையில் முழிக்கிறார்கள் கூட்டணியினர்.

இதில் வேடிக்கை என்ன தெரியுமா? பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் குறிப்பிட்ட அறிக்கை வெளியிடும் முடிவை தமிழ்க்கட்சிகள் எதிர்த்தால் தர்மசங்கடமாகிவிடுமே என்று நினைத்தார் நீதியமைச்சர். ஈ.பி.டி.பி, புளொட், ஆகிய கட்சிகளுடன் தனித்தனியே பேசி எதிர்ப்புக் காட்டாதீர்கள். உங்கள் கருத்தை முன்வையுங்கள். அதனையும் அறிக்கையுடன் இணைக்கலாம் என்று கூறிவிட்டார்.

இந்த அறிக்கை வைக்கும் முடிவு பற்றி கூட்டணியுடன் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் முன்னுரை எழுதியதே அவர்கள்தானே.

இக்கட்டத்தில் நீலன் திருச்செல்வம் புளொட் தலைவர் சித்தார்த்தனுடன் தொடர்பு கொண்டார்.

"பாராளுமன்றம் முன்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்போகினமாம். தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைத்தால்தான் சரியாக இருக்கும்" என்றாராம்.

"உங்களுக்கு உடன்பாடில்லாத விஷயங்களை சொல்லுங்கோ. ஒரு பொது நிலைப்பாடாக போடுவோம்" என்றாராம்.

இதன்பின்னர் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவனாந்தாவுடன் தொடர்பு கொண்டு நீலனின் கோரிக்கை பற்றி கூறினாராம். "நாங்கள் தனியாகத்தான் எங்கள் நிலைப்பாட்டை முன்வைப்போம்" என்று கூறிவிட்டார் டக்ளஸ் தேவானந்தா.

அதனால் சித்தார்த்தனும் தாமும் தனியாகக் கருத்துக் கூறுவதாக தெரிவித்துவிட்டார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஏனைய தமிழ்க்கட்சிகள் அறிக்கையை முன்வைக்க எதிர்ப்பு தெரிவிக்காமல் தடுக்கத்தான் நீலன் அப்படி அவசரப்பட்டாராம். எதிர்ப்பு தெரிவிக்காமல், கருத்து தெரிவித்து, அதனை அறிக்கையுடன் இணைத்துவிட்டால் பிரச்சனை இல்லையல்லவா. நீதியமைச்சரிடமும் நல்ல பெயர் கிடைக்கும். ஏனைய தமிழ்க் கட்சிகளை அண்ணாச்சிதான் மேய்க்கிறார் என்றும் நினைப்பார்கள்.

ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் இப்போது பாராளுமன்ற அரசியல் அத்துப்படி. தாமே நேரடியாக நீதியமைச்சரிடம் நல்ல பெயர் எடுத்துவிட்டன. அறிக்கையை முன்வைப்பதை எதிர்க்காமல், தம் கருத்தை மட்டும் முன்வைத்தன.

தங்களுக்குள் ஒரு ஒற்றுமையை காண முடியாத தமிழ்க்கட்சிகள் ஆளும் தரப்புக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே சமரசம் செய்துவைக்கப்போவதாக ஓடுப்பட்டுத் திரிவதுதான் வேடிக்கையான காட்சிகளாக உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

**68**

தருவது ரசிகன்

கடந்த வாரம்

**பாபாவின் கட்டளைப்படி தனியான குழுவாக செயற்படத் தொடங்குகிறாள் பூலான். மான் சிங் பூலானின் தளபதியாகிறான். பூலான்மீது மான் சிங் காதல் கொள்கிறான். பூலான் தயங்குகிறாள். ஆனாலும் சபலம் எட்டிப்பார்க்கிறது.**

இனி...

கொள்ளைக் கோஷ்டித் தலைவர்களின் மாநாடு முடிந்த பின்னரும் பாபாவுடன்தான் பூலானின் குழுவினரும் தங்கி இருந்தனர்.

பொலிசார் கொள்ளைக் கோஷ்டியினரைத் தேடி தீவிரமாக வலை வீசிக் கொண்டிருந்தனர். அந்தச் செய்தியை பாபா அறிந்ததால் பூலான் குழுவினரையும் தன் குழுவினருடன் வைத்திருந்தார்.

கொள்ளைக் கோஷ்டிகளில் சில பொலிசாரின் கையாட்களாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தன.

அக்கோஷ்டிகள் மூலம்தான் ஏனைய கோஷ்டிகள் பற்றிய தகவல்கள் பொலிசாருக்குப் போய்ச் சேர்ந்தன.

ஸ்ரீராம் லாலா ராம் போல பலருக்கு பொலிசார் சன்மானம் கொடுத்து தங்கள் ஆட்கள்போல நடத்திக் கொண்டிருந்தனர்.

பொலிசாரின் கையாட்களாகச் செயற்படும் கொள்ளைக் கோஷ்டிகளையும், அதன் தலைவர்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும். பொலிசாருக்கு தகவல் கொடுப்போரையும் தீர்த்துக்கட்ட வேண்டும் என்று பாபா கூட்டிய கொள்ளைக் கோஷ்டி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீராம், லாலா ராம் உட்பட பலரது பெயர்கள் தீர்த்துக்கட்டப்பட வேண்டியவர்கள் பட்டியலில் இருந்தன.

பாபா கோஷ்டிக்கு தகவல் கொடுக்கும் ஆட்களில் ஒருத்தன் மூலம் பூலானை மகிழ்ச்சிப்படுத்தும் தகவல் வந்தது.

ஸ்ரீராமும், லாலா ராமும் பக்கத்து கிராமம் ஒன்றுக்கு வருகிறார்கள் என்பதுதான் தகவல்.

பாபா பூலானிடம் பொறுப்பை ஒப்படைத்தார். "பூலான், நீ தேடிய விருந்து உன்னைத் தேடி வருகிறது. முடித்துவிட்டு வா. உன் ஆட்களுடன் புறப்படு!" என்றார்.

ஸ்ரீராமும் லாலா ராமும் நிறை போதையில் இருந்தார்கள். லாலா ராம் கிராமத்து அழகி ஒருத்தியை கட்டிப் பிடித்து முகர்ந்து கொண்டிருந்தான்.

அவன் கை ஒன்று அவள் முன்புறங்களில் தடுமாறிக்கொண்டிருந்தது. வரவழைத்துக் கொண்ட சிணுங்கலும், கிசுகிசுப்புமாய் அவள் லாலா ராமை உருவேற்றிக் கொண்டிருந்தாள்.

லாலா ராமிடம் பணம் இருந்தது. ஒரு கட்டாக வைத்திருந்தான். அதைச் சுருட்டிக் கொண்டு போவதற்காக, அவனைச் சுருட்டிக் கொண்டிருந்தாள்.

லாலா ராம் கொஞ்சம் கொஞ்சமாக அவளை உரிக்கத் தொடங்கியிருந்தான். அவள் தேகம் கட்டாக இருந்தது. கிராமத்தனம் வழிந்தது. எல்லாமே இயற்கை. ஒன்றுமே செயற்கை கிடையாது. லாலா ராம் தொட்டுப் பார்த்தான். அவன் சந்தேகம் தீரவில்லை. மேலும் தொட்டுப் பார்த்தான்.

அவள் செல்லமாய் சிணுங்கினாள். லாலா ராமை மார்பில் கைவைத்து மல்லாக்கச் சாய்த்தாள். மார்பைத் தடவிக் கொடுத்தாள். தோள் பிடித்தாள். வயிறு தடவினாள். லாலா ராமுக்கு போதையை விட அவள் கை செய்த மாயம் இருமடங்கு போதையேற்றியது. அவள் கைகள் பரவப் பரவ அவன் 'வரேவா' என்றான்.

அப்போதுதான் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. லாலா ராம் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து ஓடத் தொடங்கினான்.

உயிர்ப்பயம் காரணமாக அவனுக்கு போதை முறிந்துவிட்டது.

ஸ்ரீராமும் தன் ஆட்களுடன் தலை தெறிக்க ஓடத்தொடங்கினான்.

ஸ்ரீராம் கோஷ்டியினர் அந்தக் கிராமத்தில் இரண்டு வீடுகளில் தங்கி இருந்தனர்.

ஒருவீட்டில் ஸ்ரீராமின் ஆட்கள் ஐந்து பேர் தங்கியிருந்தனர். கிராமத்துப் பெண்களுடன் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர்.

அடுத்த வீட்டில்தான் ஸ்ரீராமும், லாலா ராமும் அவர்கள் ஆட்கள் மூன்று நான்கு பேரும் இருந்தனர். ஸ்ரீராமுடன் அன்று, குசுமா வரவில்லை.

கிராமத்துக்குள் புகுந்த பூலான் கோஷ்டி முதல் வீட்டுக்குள் புகுந்து விட்டது. அங்குதான் ஸ்ரீராமும், லாலா ராமும் இருக்கிறார்கள் என்று நினைத்துவிட்டனர்.

அந்த வீட்டுக்குள் புகுந்தபோது தடுக்க முற்பட்ட ஒருவனைத்தான் மான் சிங் சுட்டான்.

அந்தச் சத்தம்தான் எங்கும் எதிரொலித்தது. அந்தச் சத்தம்தான் ஸ்ரீராமையும், லாலா ராமையும் எச்சரித்து தப்பச் செய்தது.

ஸ்ரீராமின் ஆட்களை கயிறுகள் கொண்டு கட்டிப்போட்டார்கள். அடி தாங்காமல் அவர்கள் கதறினார்கள்.

ஸ்ரீராமும்,லாலா ராமும் அடுத்த வீட்டில் இருப்பதாகக் காட்டிக் கொடுத்தார்கள்.

பூலானும் மான் சிங்கும் வேறு இரண்டு பேரும் அந்த வீட்டுக்குள் சென்றபோது, வீடு காலியாக இருந்தது.

பூலானுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. "நாய்கள் தப்பி ஓடிவிட்டார்கள்!" என்றாள் வெறுப்பாக.

ஆனால் அவர்கள் ஓடவில்லை. அந்தக் கிராமத்தில் ஒரு வீட்டின் கொல்லைப்புறத்தில் ஒளிந்திருந்தார்கள்.

கிராமங்களுக்குள் செல்லும்போது பாபாவின் ஆட்கள் ஒருவரே இயக்கும் சிறிய ஒலிபெருக்கி ஒன்றுடன்தான் செல்வார்கள். கட்டளைகள் போடவும், எச்சரிக்கை செய்யவும், அறிவிப்புச் செய்யவும் அது பயன்படும்.

பூலான் கோஷ்டியிடமும் ஒரு ஒலிபெருக்கி இருந்தது. அதனை கையில் எடுத்த பூலான், "டேய் ஸ்ரீராம், தேவடியா மகனே, நீ மீசைவைத்த ஆண்பிள்ளையாக இருந்தால் என் முன்னால் வாடா! பண்ணையார் நாயே, இங்கே எங்கோதானடா நீ ஒளிந்து கிடக்கிறாய் தொடை நடுங்கி மகனே! முதுகுக்குப் பின்னால் இருந்துதானடா உன்னால் தாக்க முடியும். வாடா, துணிவிருந்தால் வாடா!"

பூலானின் குரல் கிராமம் எங்கும் எதிரொலித்தது. கிராமம் முழுவதும் பயத்தில் உறைந்ததுபோல நிசப்தமாக இருந்தது.

நாய்கள்கூட குரைக்கப் பயந்து வாலைச் சுருட்டிக் கொண்டு எங்கோ பதுங்கிக் கொண்டன.

"டேய்... டேய்... பண்ணையார் நாயே! உன் ஆட்கள் ஐந்துபேரையும் சுட்டுத்தள்ளப் போகிறேனடா. முடிந்தால் வந்து தடுத்துப் பார்க்கலாம். வாடா.. எங்கேயடா பதுங்கி இருக்கிறாய்..? தூ.... நீயெல்லாம் ஒரு ஆண் பிள்ளை. உனக்கும், உன் தம்பிக்கும்..... இருக்கடா நாய்களே....தூ."



பூலான்

ஆவேசம் வந்துவிட்டால் பூலானின் வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் கொட்டத் தொடங்கிவிடும். மான் சிங்குக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

"ம்... சுடுங்கள்.. சுட்டுத் தள்ளுங்கள்!" என்றாள் பூலான்.

கயிறுகளால் பிணைக்கப்பட்டுக் கிடந்த ஐந்துபேரும் மரணப் புலம்பல் எழுப்பினர்.

"எங்களை மன்னியுங்கள் பூலான்ஜி..." என்று கூவினார்கள்.

பூலான் கோஷ்டியினரின் துப்பாக்கிகள் வாய்களைத் திறந்து ரவைகளைத் துப்பின.

முதலில் மான் சிங் சுட்டான்.

தவறாமல் குறிவைக்கக்கூடியவன் மான் சிங்.

அவன் சுட்ட ரவை ஒருவனது நெற்றியின் மையத்தில் பொத்தல் போட்டது.

மான் சிங்கைத் தொடர்ந்து ஏனையோரும் சுட்டுத் தள்ளினார்கள்.

ஸ்ரீராமின் சகாக்கள் ஐந்துபேரும் மரக்கட்டைகள் போல சரிந்து கிடந்தார்கள். இரத்தம் வெள்ளமாய்ப் பரவியது.

மேலும் இரண்டுபேரை பூலானின் ஆட்கள் பிடித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பொலிசாருக்குத் தகவல் கொடுப்பவர்கள். இரண்டு பேரையும் தனித்தனியாக மரங்களோடு சேர்த்துக் கட்டிப்போட்டார்கள்.

இரண்டுபேருக்கும் மொட்டை அடிக்கும்படி உத்தரவிட்டாள் பூலான்

மளமளவென்று கத்தரித்து, சரசரவென்று சுத்தமாக வழித்து முடித்தார்கள். வழித்தபோது அவர்கள் தலைகளில் கத்தி சீறியதில் இரத்தம் பீய்ச்சியது.

இரண்டு பேரையும் பூலான்தான் சுட்டாள்.

வாய்க்குள் துப்பாக்கி முனையைச் செருகி, உள்ளே வைத்தே சுட்டாள்.

நிச்சயமான மரணம்!

கோரமான கொலைகள்!

இருவரது கழுத்திலும் ஒவ்வோர் அட்டை தொங்கவிடப்பட்டது.

"பொலிசாருக்குத் தகவல் கொடுக்கும் நாய்களுக்கு இதுதான் தண்டனை! பூலான் தேவி." என்று அதில் எழுதச் சொன்னாள் பூலான்.

கிராமத்தையே கிடுகிடுக்க வைத்துவிட்டு பூலான் கோஷ்டி புறப்பட்டுச் சென்றது.

அவர்கள் புறப்பட்டுச் சென்றதை உறுதிப்படுத்திய பின்னர்தான் ஸ்ரீராமும், லாலா ராமும் பதுங்கியிருந்த இடத்தைவிட்டு வெளியே வந்தார்கள். ஸ்ரீராம் கோஷ்டியில் லாலா ராமைத் தவிர மூன்று பேர்தான் மிஞ்சி இருந்தார்கள்.

ஸ்ரீராமுக்கும், லாலா ராமுக்கும் அவர்களை அறியாமலேயே உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

பூலானின் கையில் தாங்கள் அகப்பட்டிருந்தால் என்னாகியிருப்பார்கள் என்பது தங்கள் சகாக்களின் உயிரற்ற உடல்களைப் பார்க்கும் போது தெரிந்தது.

பண்ணையார் சாதியைப் பாதுகாக்கும் வீரனாக தோள்தட்டிக்கொண்டு திரிந்த ஸ்ரீராமுக்கு வெட்கமாக இருந்தது.

அந்தக் கிராமமே தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவதுபோல இருந்தது.

பூலான் ஒலிபெருக்கியில் தன்னை அழைத்து கேவலமாகப் பேசிய வார்த்தைகள் இன்னமும் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

பொலிசாருக்குத் தகவல் போய், ஒரு படையாக கிராமத்துக்குள் புகுந்தனர். அதற்கு முன்னரே ஸ்ரீராம் ஆட்கள் கிராமத்தை விட்டுப் போய்விட்டனர்.

ஏழு உடல்களையும் பொலிசார் எடுத்துச் சென்றார்கள்.

பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி பரபரப்பாகின.

இந்தியப் பாராளுமன்றத்தில் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களைப் பற்றி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசைக் கேலி செய்தார்கள்.

'சிறப்புப் பொலிஸ் படைகள் அமைக்கப்படும்' என்று உள்துறை மந்திரி வாக்குறுதி அளித்தார்.

மத்திய பிரதேஷ், உத்தர பிரதேஷ், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆயிரக் கணக்கான பொலிசாரைக் கொண்ட விசேட பொலிஸ் அணிகள் உருவாக்கப்பட்டன.

கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களைப் பிடிப்பவர்களுக்கு பெருந்தொகையான சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் பொலிசார் போட்டி போட்டுக் கொண்டு தேடுதலை ஆரம்பித்தார்கள்.

அவ்வாறான தேடுதலின் போது ஸ்ரீராமும் மாட்டிக்கொண்டான். தான் பொலிசாருக்கு உதவுபவன் என்று எடுத்துச் சொல்லி மன்றாடினான்.

அவனைப் பிடித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் புதியவன். அதனால் ஸ்ரீராமை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுபோக ஆயத்தமானான்.

அப்போதுதான் குளித்துவிட்டு, ஒரு துணியை குறுக்குக் கட்டாக கட்டியபடி குசுமா வந்துகொண்டிருந்தாள்.

பொலிசாரைக் கண்டதும் அவள் மிரண்டாள். இன்ஸ்பெக்டரின் கண்கள் குசுமாவின் வாளிப்பான தேகத்தின்மீது மொய்த்தன.

குறுக்காக துணியைக் கட்டியிருந்ததால் திறந்திருந்த தோள்களின் மினுமினுப்பும், மெல்லிய துணிக்கட்டை மீறி மதமதர்ப்பாக திமிறிக்கொண்டிருந்த அங்கத் திரட்சிகளும் இன்ஸ்பெக்டரின் உச்சியில் கிறுகிறுக்கச் செய்தன.

"யார் அவள்?" என்று கேட்டான். "என் காதலி." என்றான் ஸ்ரீராம்.

ஸ்ரீராமை விட்டுவிட்டு குசுமாவிடம் சென்றான். அவள் கையைப் பற்றி குடிசை ஒன்றுக்குள் தரதரவென்று இழுத்துப் போனான்.

ஸ்ரீராமுக்கு இன்ஸ்பெக்டரின் போக்குப் புரிந்தது. பலவீனம் தெரிந்தது.

உள்ளே குசுமாவின் உடலில் கிடந்த துணியைக் கழற்றி வீசியெறிந்தான் இன்ஸ்பெக்டர். அவளது திறந்த உடலை அங்கம் அங்கமாக இரசித்துப் பார்த்தான்.

"அடி வாடி குட்டி.. அந்த ராமன்கூட உன்னை காப்பாற்றவரமாட்டான். ஸ்ரீராமாம், ஸ்ரீராம்." இன்ஸ்பெக்டர் குசுமாவை கட்டியணைத்து அவள் முகமெங்கும் முத்தமிட்டான்.

குசுமா கத்தவில்லை. குசுமா எதிர்ப்புக் காட்டவில்லை. குசுமா திமிறவில்லை.

ஸ்ரீராமுக்கு பயந்து அடக்கிவைத்திருந்த அவள் உணர்ச்சிகள் எட்டிப்பார்த்தன. தலைநீட்டின.

குசுமா அந்த இன்ஸ்பெக்டரை தன் கைகளால் சுற்றிவளைத்தாள். மூச்சு முட்டும் விதமாக இறுக அணைத்தாள்.

வெளியே இருக்கும் ஸ்ரீராமுக்கு உள்ளே என்ன நடக்கும் என்பது தெரிந்தது.

அவனுக்கும் அந்த இன்ஸ்பெக்டரின் உதவி தேவைப்பட்டது.

'இன்ஸ்பெக்டரை வளைக்க குசுமாவைத்தான் தூண்டிலாகப் போடவேண்டும்' என்று நினைத்துக்கொண்டான்.

குசுமா ஏற்கனவே தூண்டில் போட்டுவிட்டாள் என்பது அவனுக்குத் தெரியாது. குசுமா இன்ஸ்பெக்டரை முழுவதுமாக ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தாள்.

(தொடர்ந்து வரும்)

---

## 'எய்ட்ஸ்' அழகியின் உலக சாதனை



சாராஜேன் சலஸார்

மிகவும் பயங்கரமான சாதனைதான். பிலிப்பைன்ஸ் அழகி சாரா ஜேன் சலஸார் என்னும் பெண்தான் தன் சாதனை மூலம் உலகத்தை கதிகலங்கச் செய்திருக்கிறாள்.

சாதனை... மன்னிக்கவும்.. உலக சாதனை என்ன தெரியுமா? மூன்று வருடங்களில் மொத்தம் ஆயிரம் காதலர்களுடன் சல்லாபித்திருக்கிறாள்.

23 வயதான சாராஜேன் சலஸாரின் சல்லாப வாழ்க்கை வரலாறு பற்றிய சுருக்கம் இதோ:

மநிலா நகரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த சலஸார் 16வது வயதில் உயர் நிலைப் பள்ளிப்படிப்பைத் தொடர முடியாமல் ஒரு மதுபானக்கடையில் பணி ஏற்றாள்.

வருமானம் போதாமையினால், இரவு நேரக் கேளிக்கை விடுதிகளில் துயிலுரி நடனங்களை ஆடினாள். தொடர்ந்து இவ் விடுதிகளுக்கு வரும் வாடிக்கையாளர்களின் இச்சையைப் பூர்த்தி செய்யும் வாடகைப் பெண்ணாக மாறினாள்.

ஏராளமான பணம் சம்பாதித்தாள், குடித்து வெறித்து கும்மாளமிட்டாள். ஜப்பான், ஹொங்கொங் போன்ற நாடுகளுக்கும் அடிக்கடி பயணம் செய்தாள். இவளுடைய காதலர்களின் பட்டியலும் விரிந்தது.

1993ல் சலஸாவுக்கு 'எச்ஐவி' வைரஸ் தொற்றிக் கொண்டது. இதனை அறிந்த இவளுடைய காதலர்கள் இவளைக் கண்டால் ஓடி ஒளிந்து கொண்டனர். இவள் ஏதாவது உணவு விடுதிகளுக்குச் சென்றால் அங்கிருக்கும் எல்லோரும் எழுந்தோடி விடுவார்கள்.

மநிலாவில் பயணிகளை ஏற்றிச் செல்ல பெரும்பாலும் ஜீப் வண்டிகளே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஏறினாலும் ஏனைய பயணிகள் வண்டியை நிறுத்தும்படி கூக்குரலிட்டு, வண்டியை விட்டு இறங்கி ஓடிவிடுவார்களாம்.

எய்ட்ஸ்நோய் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சலஸாரை தங்கள் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டனர். இவளுடைய வாழ்க்கையை திரைப்படமாகவும் தயாரித்தனர். சிலகாலம் மட்டும் கட்டுப்பாடாக வாழ்ந்த சலஸார், மீண்டும் தன் பயணத்தைத் தொடர ஆரம்பித்தாள்.

"நான் இளமைத் துடிப்புள்ளவள். எப்போதும் சந்தோசமாகவே இருக்க விரும்புகிறேன். இதற்குப் பணம் தேவை. எனது காதலர்கள் பெரும்பாலும் ஆசியாவைச் சேர்ந்தவர்களே! கொரியா, ஜப்பான், தாய்வான், என்று பல ஆசிய நாடுகளிலும் என் காதலர்கள் பரந்து வாழ்கின்றனர்...!" என்று சலஸார் கட்டுப்பாடுகளைக்களைந்தெறிந்துவிட்டு பல இடங்களிலும் பவனி வரத் தொடங்கிவிட்டாள்.

இறுதியாக இவள் வலைக்குள் விழுந்தவன் ஒரு 15 வயதுப் பையன். வயது குறைந்த பையனுடன் தொடர்பு வைத்தாள் என்ற குற்றச்சாட்டில் பொலிசார் கைது செய்தனர். பையனின் பெற்றார் வழக்கைத் தொடர வேண்டாம் என்று கோரியதன் பேரில் இவள் விடுதலையானாள். இப்பொழுது பையனுக்கு 16 வயதாகிறது. இருவருக்கும் ஒரு பெண் குழந்தையும் பிறந்துள்ளது.

'எய்ட்ஸ்' நோய் அறிகுறிக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரும் மேலும் 50 புதிய காதலர்களை இவள் சம்பாதித்தாள் என்று கூறப்படுகிறது. மருத்துவர்கள் இவளுடைய வாழ்க்கை முடிவுறப் போகிறது என்று கொடுத்த கால எல்லையைத் தாண்டியும் சலஸார் இன்னும் குதூகலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். நடமாடும் 'எய்ட்ஸ்' விநியோக நிலையமாகவும் மாறி இருக்கிறாள்.

---

## தொழில் புதிது

பெண்களில் மட்டும்தான் விபசாரத் தொழிலில் ஈடுபடுவதாகக் கூறுவது தப்பு.



ஆண் விபசாரகர்களும் உலகெங்கும் பெருகி வருகிறார்கள்.

பிரபலமான பெண்மணிகளுக்கு கம்பனி கொடுப்பதுதான் இவர்கள் வேலை. கைநிறைய கூலி கிடைக்கும்.

நம்நாட்டில் இந்தக் கண்றாவி இல்லை என்று நினைக்காதீர்கள். மறைமுகமாக விளம்பரம் செய்கிறார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரமாகின்றன.

"இளம் பையன்கள் உள்ளனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வீடுகளுக்கு நேரில் வந்து மசாஜ் செய்யப்படும். இரகசியம் பாதுகாக்கப்படும்" என்று விளம்பரங்கள் காணப்படுகின்றன. தொலைபேசி இலக்கங்களும் தரப்படுகின்றன. இதன் பின்னணியில் வேறு விவகாரங்கள் இருப்பதாகத் தகவல்.

ஆண் விபசாரகர்களுக்கு ஆண்களிடம் இருந்தும் அழைப்பு விடுக்கப்படுகிறதாம்.

இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் ஆண் விபசாரகர்கள் பெருகி வருகின்றனர் என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. உலகம் போகும் வேகம் அச்சத்தைத் தருகிறதல்லவா!

---

## கிலாரியின் கண்ணீர்



அமெரிக்கா போன்ற நாடுகளில் ஜனாதிபதிகளின் மனைவிமார்களுக்கு சமூக சேவை செய்வது ஒரு பொழுது போக்கு.

தங்கள் செயலாளர்கள் எழுதிக் கொடுத்த உரைகளைப் பாடமாக்கி ஒப்புவிப்பார்கள். ஜனாதிபதிகள், பிரதமர்களின் மனைவிமாரை முதற் பெண்மணிகள் என்று அழைப்பார்கள்.

இந்த முதற்பெண்மணிகள் பலர் சேர்ந்து பனாமா நகரில் ஒரு மாநாடு நடத்தினார்கள்.

இந்த மாநாட்டில் பலரது கவனத்தை ஈர்த்தவர் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி கிலாரி.

வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் பற்றியெல்லாம் காலையில் முழங்கினாராம். மாலையில் நீச்சல் அடித்து மகிழ்ந்தார்கள். மதுவகைகளை ஒரு பிடி பிடித்துவிட்டு கிலாரி உட்பட முதற் பெண்மணிகள் தள்ளாடினார்கள். கட்டியணைத்து ஒருவருக்கொருவர் முத்தம் கொடுத்து உற்சாகத்தை பகிர்ந்து கொண்டனர்.

மொத்தத்தில் பனாமா மாநாடு கலகலப்பாக நடந்து முடிந்தது. 'பெண்கள் உரிமைக்காக கிலாரி கிளிண்டன் குரல் கொடுத்தார்' என்று பத்திரிகைகள் பக்கம் பக்கமாகச் செய்தி வெளியிட்டன.

சாதாரண பெண்கள் செய்யும் காரியத்தில் ஒரு பங்குகூட செய்யத் தெரியாத இந்த முதற் பெண்மணிகளுக்கு நீலக் கண்ணீர்விட மட்டும்தான்தெரியும். உண்மையில் சாதாரண பெண்கள்தான் முதற் பெண்மணிகள்.

---

## கதை சொல்கிறார்



டயானாவின் கடைசிக் காதலர் டோடி ஃபயட். டோடியின் முன்னாள் காதலிகளில் ஒருவரும், மொடல் அழகியுமான கெல்லி பிஷர் ஒரு புத்தகம் எழுதப்போகிறார்.

டோடியுடன் தனக்கு இருந்த தொடர்புகளைப் பற்றி விலாவாரியாக விபரிக்கப் போகிறாராம்.

"டோடி என்னை ஏமாற்றிவிட்டார். காதல் மோதிரம் தந்தவர் கைவிட்டுவிட்டார் என்றெல்லாம் மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தவர் கெல்லி பிஷர்.

டோடி இறந்த பின்னர் கதையை மாற்றிச் சொல்கிறார். "டயானாவை காதலித்தபோதும் என்னையும் உதாசீனம் செய்யவில்லை. டோடி என்னையும் நேசித்தார்" என்று இப்போது பேட்டி கொடுத்திருக்கிறார் அம்மணி.

டோடி பற்றி கெல்லி பிஷர் எழுதும் புத்தகத்துக்கு பெரும் தொகைப் பணம் கொடுக்க பல புத்தக நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.




படிப்பகம்

www.padippakam.com

தகவல் பெட்டி

# நட்ட நடுக் கடலினிலே



↑ ஆழ்கடலில் காணப்படும் உயிரினங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வது மிகவும் அபாயகரமானது. சுழியோடிகள் ஆழ்கடலின் நில மட்டம் வரை சென்று ஆய்வுகளை நடத்துகின்றனர். இவர்களின் பரம எதிரி சுறாமீன்கள். அதன் வாயில் எவர்பட்டாலும் அதன் வாள்போன்ற கூரிய பற்களால் துண்டாடி தன்பசியைப் போக்கிவிடும்.

மற்றுமொரு கடல் பிராணி- மிகவும் பிரமாண்டமான உருவம் கொண்டது- திமிங்கிலம். சாதாரண அளவிலுள்ள ஒரு கப்பலையே கவிழ்த்துவிடக் கூடியது; தனது எதிரிகளைத் தன் வாலினாலேயே அடித்து கடலுள் அமிழ்த்திவிடக்கூடியது.

இத்தகைய பயங்கரத் திமிங்கிலம் தன் உடல் முழுவதையும் கடலினுள் அமிழ்த்தி வாலை மட்டும் மேலே உயர்த்திக் கொண்டிருக்கும் வேளையில் ஃபிலிப் நிக்லின் என்ற படப்பிடிப்பாளர், தனது கமராவினுள் காட்சியைப் புகுத்திக் கொண்டார்.

கடலில் மாசு படிவதனால் திமிங்கிலங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதனை ஆராய்ந்தறிவதற்காக ஒரு சிறு படகில் திமிங்கிலத்தின் அருகிலேயே வந்துவிட்டார்கள் ஆய்வாளர்கள். ஆர்ஜென்டினாக் குடாக் கடலில்தான் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இவ்வாய்வுக் குழுவின் தலைவர் ரோகர் பைன் வலது கோடியில் தனியாக இருக்கிறார்.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல, ஆராயச் சென்ற திமிங்கலம் எதிரே தெரிகிறது. கண்டதும், இதயத்தில் கத்திக்குத்தி பட்டதுபோல கலங்கிப்போனார்களாம். வேறொரு படகில் பாதுகாப்புக்காக வந்தவர்களோடு சேர்ந்து வந்த ஃபிலிப் கிளிச் செய்த காட்சிதான் இது. வாலே இப்படி இருந்தால் முழு உடலும் வெளிப்பட்டால் எப்படி இருக்கும்?! யாரும் வால் பிடிக்க முடியாது!

# முன்னாள் 'ராட்டினம்'



↑ 'காணிவேல்' போன்ற களியாட்டங்களில் சிறுவர்களை மட்டுமல்லாமல் வயதானவர்களையும் கவர்ந்திழுப்பது ராட்டினம் மற்றும் 'ஜயன்ற் வீல்' எனப்படும் இராட்சதச் சக்கரம் என்பவையாகும்.

தற்காலத்தில் இவை மின்சாரத்தால் இயக்கப்படுகின்றன. படத்தில் காணப்படுவது அல்பேனியாவிலுள்ள எல்பகான் என்ற இடத்தில் 1924ம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட ராட்டினமாகும். இதனைப் பலபேர் சேர்ந்து கைகளால் இயக்குவார்கள்.

இத்தகைய புராதன ராட்டினம் பல்கேரியாவில் 1620ம் ஆண்டுகளில் இருந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. நவீன ராட்டினம், 1863ம் ஆண்டில் சிக்காகோ நகரில் நடைபெற்ற உலக கொலம்பியன் கண்காட்சியில் வைக்கப்பட்டது. இதனை அமெரிக்கப் பொறியியலாளரான ஜோர்ஜ் ஃபெர்ரிஸ் (இளவல்) அமைத்தார்.

264 அடி உயரமான இந்தச் சக்கரத்தில் 36 பெரிய சவாரிப் பெட்டிகள் பொருத்தப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் 60 பேர் ஏறி இருக்க வசதி செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொருவரிடத்திலும் 50 சதம் (அமெரிக்க அரை டொலர்) அப்போதே வசூலிக்கப்பட்டதாம்.

மொத்தம் ஒரு இலட்சம் பேர் இந்த இராட்சதச் சக்கரத்தில் 'சவாரி' செய்தனராம். 1000 குதிரை வலு கொண்ட எந்திரம் இச்சக்கரத்தைச் சுழற்றப் பயன்படுத்தப்பட்டது.

இப்போதெல்லாம் மின்சார ராட்டினத்தில் நாம் எல்லாம் ஹாயாகச் சுற்றுகிறோமல்லவா. அதனை கண்டுபிடிக்கவும், முன்னேற்றவும் அந்தக் காலத்தில் எத்தனை முயற்சி எடுத்திருக்கிறார்கள் பாருங்கள்! இன்று நாம் அனுவிக்கும் பல வசதிகள் முன்னோர்கள் தந்த கொடைதான். வருங்காலத் தலைமுறைக்கு நாம் என்ன விட்டுச் செல்லப் போகிறோம். கற்குவியலும், மண்டை ஓடுகளும்தானா?!

# போரும் - நோயும்



← இரண்டாவது உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் டிடி.ரி. எனப்படும் பூச்சிகொல்லி மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகளையும் தீமை விளைவிக்கும் பூச்சி, புழுக்களையும் அடியோடு அழிக்கும் சக்தி வாய்ந்த அற்புதக் கண்டுபிடிப்பு என்று எல்லோரும் பாராட்டினார்கள்.

நுளம்புகளை ஒழித்துக்கட்டுவதில் டிடி.ரி. என்னவோ வெற்றிகண்டது. ஆனால் இதனால் பயங்கரப் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன என்பது- இம்மருந்து கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 20 வருடங்களின் பின்னரே தெரியவந்தது.

மனிதர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கு இம்மருந்து தூண்டுகோலாக இருந்ததாம். இம்மருந்து பயன்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள பறவைகள் இனப் பெருக்கம் செய்வதற்கேற்ற வல்லமையை இழந்து விட்டனவாம்.

எக்காலமானாலும் இம்மருந்தில் பொதிந்துள்ள இரசாயனக் கூறுகள் சிதைவடையவோ அழிந்து போகவோ மாட்டாதாம். இத்தகைய அபாயகரமான டிடி.ரி.யை அமெரிக்கா 1972ல் முற்றாகத் தடை செய்தது.

நமது நாட்டிலும் நுளம்பை அழிக்க இம்மருந்து பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் தடை செய்யப்பட்டு விட்டது.

நியூயோர்க் நகரிலுள்ள ஜோன் கடற்கரைப் பூங்காவில் 1945ம் ஆண்டு டி.டி.ரி. கடற்கரையிலும், கடலாட வருவோர்மீதும் பிய்ச்சி அடிக்கப்படுவதைப் படம் காட்டுகிறது. போர் நடந்த காலத்திலும் நோய் தடுக்க என்ன பாடு பட்டிருக்கிறார்கள் பாருங்கள். போரைக் காரணம் காட்டி போதிய மருந்துகள் அனுப்பாதிருப்பதுதானே நாம் அறியும் தற்காலச் செய்திகள்.

# பரம்பரை



1 மாத எள்ளுப் பேத்தி ஜொவான்னாவுடன், எள்ளுப்பாட்டி

↓ ரொம்ப ஜாலியான குடும்பம் இது. ஆஞ்செலாவுக்கு 88வயது. படு திடகாத்திரமாக இருக்கிறார். கணவர் மரணமாகிவிட்டார். பேத்தி, பூட்டி, கொள்ளுப் பேத்தி, எள்ளுப் பேத்தி என்று வாழையடி வாழையாக நீண்டுவிட்டது பரம்பரை. எள்ளுப் பேத்தியான ஜொவான்னா பிறந்து ஒரு மாதம்தான் ஆகிறது.

இந்தக் குடும்பத்தில் ஒரு ஆச்சரியம் என்ன தெரியுமா? எள்ளுப் பாட்டியான ஆஞ்சலாவில் இருந்து கொள்ளுப் பேத்தியான யுசெப் பீனா வரை எல்லோரும் பெண் பிள்ளைதான் பெற்றிருக்கிறார்கள். அதுவும் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று ஒரே ஒரு பெண் பிள்ளைதான். என்றாலும் யுசெப் பீனாவுக்கு இப்போது 18 வயதுதான். அதனால் இந்தப் பரம்பரையில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு தாயாகும் வாய்ப்பு அவருக்கு இருக்கலாம்.

ஆறு தலைமுறையாக ஒவ்வொரு பெண் வாரிசை மட்டும் உற்பத்தி செய்வதோடு நிறுத்திக் கொண்டதும், எள்ளுப்பாட்டி கல்லு மாதிரி இன்னமும் இருப்பதுதான் ஆச்சரிய சமாச்சாரம். இவர்கள் இத்தாலியைச் சேர்ந்தவர்கள். பெண் குடும்பப் பரம்பரை!



ஆஞ்செலா–எள்ளுப்பாட்டி வயது–88 | யுசெப்பீனா–கொள்ளுப்பாட்டி வயது–68 | வின்சென்ஷா–பூட்டி வயது–51 | வின்சென்சீனா–பாட்டி வயது–35 | யுசெப்பீனா (தாய், மகளுடன்) வயது–18



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 28

# கோபத்தைத் தணிக்க குளிரான செய்தி

## நடிகையின் சமயோசித நடவடிக்கை

புதிதாக பாதை போட்ட இயக்குநர் அவர். அவரே புதிய பாதை போட்டு, அவரே கதாநாயகனாக நடித்து முதல் படம் தயாரானது. ராமரின் மனைவியின் பெயர் கொண்ட நடிகை கதாநாயகியாக நடித்தார்.

இயக்குநரான நடிகருக்கு நாயகிமீது ஈடுபாடு ஏற்படத் தொடங்கியது. கதை டிஷ்கஷன் என்று தனியாக சந்திக்கத் தொடங்கினார்கள். அந்தச் சந்திப்புக்களில் ஒன்றில் கதாநாயகியை முழுவதும் அறிந்தார் இயக்குநர். புதிய பாதை காட்டிய இயக்குநரை அதன் பின்னர் நடிகைக்கும் மறக்க முடியவில்லை.

படம் வெளியாகி சூப்பர் ஹிட்டானது. இயக்குநரும், நடிகருமானவருக்கு அது திருப்பமாக அமைந்தது. அதனால் நடிகையும் மேலும் ஒட்டினார். சொந்தக்காலில் நிற்கக்கூடிய தைரியம் ஏற்பட்டதால் இயக்குநரான நடிகரும் நடிகையை திருமணம் செய்ய முடிவு செய்தார்.

நடிகையின் வீட்டார் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்க முட்டையிடும் வாத்தை இழக்க விரும்புவார்களா? நடிகையுடன் அந்த இயக்குநர் நெருக்கமாக பழகுவதுபற்றிக்கூட நடிகையின் வீட்டாருக்கு ஆட்சேபனை கிடையாது. திருமணம் செய்வதைத்தான் எதிர்த்தனர்.

திருமணம் செய்தால் இமேஜ் போய்விடும். தொடர்ந்து நடிக்க முடியாது. வருமானம் போய்விடும் என்பதால்தான் எதிர்த்தனர்.

நடிகையோ தன் வீடு சிறையாக மாறிவிட்டதாகச் சொல்லி அழுதார். நடிகையின் வீட்டாரின் எதிர்ப்பையும் மீறி இரகசியமாக நண்பர்கள் உதவியுடன் திருமணம் நடந்தது.

### இராமாயணக் கதை

இராமாயணத்தில் சீதையை இராவணன்தான் கடத்திப் போனான். இங்கே சீதையை காதலன் கடத்திப் போனான், ஆனால் அவள் சம்மதத்துடன் என்று ஒரு எழுத்தாளர் கதை நடையில் அந்த திருமணத்தை விபரித்தார்.

இன்றுவரை அவர்கள் தம்பதியாகவே இருக்கின்றனர். ஆனால் அவர் மட்டும் இடைக்கிடையே சில நடிகைகளுடன் தாவிக்கொண்டிருக்கிறார்.

இன்னொரு வேடிக்கையும் சொல்ல வேண்டும். இயக்குநரும் நடிகருமானவர் அந்த நடிகையை காதலிக்கும்போது நடந்த சம்பவம் இது.

படப்பிடிப்பின்போது இயக்குநரும், நடிகருமானவர் உதவி இயக்குநர்கள்மீது அடிக்கடி கோபப்படுவார். உடனே அவர் கோபத்தை தணிக்க விரும்பும் உதவி இயக்குநர்களில் ஒருவர் அந்த நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு, "சார் உங்களைப்பற்றி அவங்க ரொம்ப உயர்வாகப் பேசிக்கிட்டு இருந்தாங்க" என்பார்.

உடனே சந்தோசச் சிரிப்புடன் "சரி, சரி, நீ மெதுவா அது பக்கத்திலே போய்நின்னு என்ன பேசறுன்னு கவனி" என்பாராம்.

இந்த விடயம் எப்படியோ கசிந்து 'குமுதம்' பத்திரிகையில் கிசு கிசுவாக வெளியானது. உடனே அப்பத்திரிகை அலுவலகத்துக்கு நேராகவே சென்றார் இயக்குநர் நடிகர். "காதலும் இல்லை கத்தரிக்காயும் இல்லை" என்று சத்தியம் செய்துவிட்டுப் போனார்.

பின்னர் அந்த சத்தியத்துக்கு மாறாக அதே நடிகையை மணந்து கொண்டார். இப்போதும் சில நடிகைகளுடன் அவருக்குள்ள அந்தரங்க உறவுகள் பற்றி செய்திகள் வெளியாகின்றன. அவற்றை முன்பு போலவே பக்கம் பக்கமா எழுதி மறுத்துக் கொண்டிருக்கிறார்.

***

### சமாளித்தார் நடிகை

சத்தியமான அந்த நடிகருக்கும் அம்பிகை நடிகைக்கும் இடையே அப்படியொரு நெருக்கம் இருந்தது.

திலக நடிகரின் வாரிசான நடிகரும் சத்யமான நடிகரும் இணைந்து நடித்த படத்தில் அம்பிகை நடிகைதான் நாயகி.

வெளிப்புறப் படப்பிடிப்புக்காகச் சென்றபோது இரண்டு நடிகர்களுக்கும் நடிகையின் துணை தேவைப்பட்டிருக்கிறது.

இருவரும் தனித்தனியாக தங்கள் ஆசையை நடிகையிடம் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டு பேரையும் அனுசரித்துப் போக வேண்டும் என்ற கட்டாயம்.

முதலில் திலக நடிகரின் வாரிசான நடிகர் தங்கியிருந்த அறைக்குச் சென்றார் நடிகை. இருவரும் சந்தோசமாக இருந்தனர். நள்ளிரவு நேரம் வாரிசு நடிகர் நல்ல தூக்கத்தில் இருந்தார்.

அவரது அறைக்கதவை திறந்து கொண்டு பூனைபோல வெளியேறிய நடிகை, அந்த ஹோட்டலின் மறு கோடியில் இருந்த சத்யமான நடிகரின் அறைக்கதவை தட்டி உள்ளே புகுந்துகொண்டார்.

தூக்கம் வராமல் காற்றைவாங்கிக் கொண்டிருந்த ஒரு துணை நடிகர் மூலம் இந்தச் சம்பவம் மறுநாள் படப்பிடிப்புக் குழுவினரிடம் கிசுகிசுவாக பரவிக்கொண்டிருந்தது.

குறிப்பிட்ட நடிகையின் இது போன்ற சாமர்த்தியங்கள் பல உள்ளன. சகோதரிகளாக திரையுலகில் வலம் வந்தவர்களில் ஒருவர் தான் அந்த நடிகை. தற்போது சில படங்களில் மீண்டும் தலைகாட்டி வருகிறார்.

## 'என் சுவாசக் காற்றே'

அரவிந்தசாமியின் ரசிகர்களும், ரசிகைகளுக்கும் இனிப்பான செய்தி. ஏ.ஆர்.ரகுமான் இசையில் பிரமாண்டமான படம் ஒன்றில் நடிக்கப்போகிறார் அரவிந்தசாமி. படத்திற்கு 'என் சுவாசக் காற்றே' என்று பெயர் சூட்டியுள்ளனர். ஜோடியாக மும்பாயில் இருந்து விசேஷ இறக்குமதி. பெயர் இஷாகோபிகா.

பெயர்தான் ஒரு ரகம், ஆள் மட்டும் அசரவைக்கும் அழகு. இந்தியாவில் மிக அழகான தோற்றம் உள்ளவர் என்று மும்பாயில் நடந்த விழாவில் தெரிவானவராம்.

'மிஸ்டர்ரோமியோ' உட்பட பல படங்களை இயக்கிய கே.எஸ்.ரவி இயக்குகிறார். ஒளிப்பதிவு ரவி கே.சந்திரன். 'மருதநாயகம்' படத்தின் ஒளிப்பதிவாளரும் இவர்தான்.

ரகுவரன், பிரகாஷ்ராஜ், தலைவாசல் விஜய், வடிவேலு, விவேக், சந்தானபாரதி ஆகியோரும் நடிக்கின்றனர்.

## 'உன்னுடன்' முரளி

முரளி, கௌசல்யா ஜோடியாக நடித்த படம் 'காலமெல்லாம் காதல் வாழ்க'. சூப்பர் ஹிட்டான அந்தப் படத்தை இயக்கியவர் ஆர்.பாலு. அவர் அடுத்து இயக்கும் படம் 'உன்னுடன்'. இப்படத்திலும் முரளி தான் கதாநாயகன். பிரியதர்ஷினி என்ற பெயரில் புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார்.

வித்தியாசமான காதல் கதையுடன் தயாராகும் 'உன்னுடன்' படத்தின் இசை தேவா. பாடல்கள் வைரமுத்து. மணிவண்ணன் ராஜீவ், சார்லி, பூர்ணம் விசுவநாதன், விவேக், கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

# சினிவிசிட்

## ரஜினி படம்

ரஜினியின் அடுத்த படத்தை 'சூர்யவம்சம்' இயக்குநர் விக்கிரமன் இயக்குவதாக செய்தி அடிபட்டது. ஆனால் விக்கிரமனோ அதை அடியோடு மறுக்கிறார். "கலப்படமில்லாத வதந்தி. ஆனால் ரஜினியின் படத்தை இயக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதை என் பாக்கியமாகக் கருதுவேன்" என்கிறார்.



வெங்கடேஷ்-மீனா
படம்: சின்ன எஜமான்

## பெயர்வு

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நிரந்தரமாக குடியேறிவிட்டார் சிம்ரான். தமிழும் கற்றுத் தேர்ச்சி பெற்று வருகிறார்.

எதையும் கற்று மறப்பது தான் சிம்ரானுக்கு பிடிக்குமாம். மும்பாயில் இருந்து சென்னைக்கு இடம்பெயர்ந்துள்ளது இந்தப் புயல்.




சிம்ரான்

## சர்ச்சையைக் கிளப்பும் மருதநாயகம்

'மருதநாயகம்' படத்தை கமல் எடுக்கத் தொடங்கியதால் பல சர்ச்சைகள் கிளம்பி உள்ளன.

"மருதநாயகம் இந்தியாவை அடக்கியாண்ட ஆங்கிலேயர்களுக்கு தளபதியாக இருந்தவன். விடுதலை வீரர்கள் பலரை அடக்கியவன். எதிரியின் தளபதியை எப்படி சுதந்திரப் போராளியாக சித்தரிக்கலாம்?" என்று விமர்சகர்கள் சிலர் வினா தொடுத்துள்ளனர்.

"முதலில் ஆங்கிலேயர்களின் தளபதியாக இருந்தாலும் பின்னர் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த வீரன் மருதநாயகம். ஆங்கிலேயர்களின் படையில் இருந்த இந்திய சிப்பாய்கள் கலகம் செய்தனர். அதனை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு அங்கமாக கூறுகிறோம். அதற்கு முன்னரே ஆங்கிலேயரை எதிர்த்த முதல் சிப்பாய் மருதநாயகம்தான்" என்கிறார் கமல்.

மருதநாயகம் ஆங்கிலேயரின் தளபதியாக மட்டுமல்லாமல், மதுரை கவர்னராகவும் இருந்தவர். இந்துவாகப் பிறந்து முஸ்லிமாக மதம் மாறிய மருதநாயகம் 'யூசுப்கான்' என்று அழைக்கப்பட்டார். பிரெஞ்சுப் பெண்ணான மாஷா என்பவளை திருமணம் செய்தார்.

பிரெஞ்சுப் படைகள் ஆங்கிலேயர் வசம் இருந்த சென்னைக் கோட்டையை கைப்பற்ற முயன்றபோது, பிரெஞ்சுப் படைகளை விரட்டி அடித்தவர் யூசுப்கான் என்னும் மருதநாயகம்.

இறுதியாக ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்றார். தொழுகை நடத்தும்போது கைது செய்யப்பட்டு தூக்கில் போடப்பட்டார்.

கமலுக்கு அடுத்தபடியாக நாசர், ஓம்பூரி ஆகியோருக்குத்தான் படத்தில் முக்கிய பாத்திரம். தமிழ்த் திரைப்பட வரலாற்றில் பிரமாண்டமான சரித்திரப்படமாக மருதநாயகம் அமையும் என்பது உறுதி.

# மினி சினி

* 'காலாபாணி' (சிறைச்சாலை) படத்திற்குப் பின் பிரபு-மோகன்லால் இணைந்து நடிக்கும் மலையாளப்படம் ஒன்றை சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தை பிரதாப் போத்தன் இயக்கவுள்ளார்.

* கமலின் 'மருதநாயகம்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்பவர் ரவி கே.சந்திரன். இவர் 'ஆனஸ்ட்ராஜ்', 'மின்சாரக் கனவு' ஆகிய இரண்டு தமிழ்ப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

* கே.பாக்யராஜிடம் உதவியாளராக இருந்து பின்னர் 'ஆயுத பூஜை' படத்தை இயக்கியவர் சிவக்குமார். தற்போது 'இரட்டை ஜடை வயசு' படத்தை இயக்கி வரும் இவர், அடுத்து பாரதிராஜா தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* கே.பாலசந்தர் தயாரிப்பில் பாலசேகரன் இயக்கம் 'துள்ளித்திரிந்த காலம்' படத்தில் அருண்குமாருக்கு ஜோடியாக நடிப்பவர் ரோஷினி. முதலில் இந்த வேடத்தில் மந்த்ராவை ஒப்பந்தம் செய்து பின் நீக்கி விட்டனர்.

* செல்வா இயக்கத்தில் அர்ஜுன் நடிக்கும் 'ஜெயசூர்யா' என்ற படத்தை எம்.ஜி.பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இதில் அர்ஜுனுக்கு ஜோடியாக அஞ்சு அரவிந்த் நடிக்கிறார்.

* 'ஆணழகன்', 'வாய்மையே வெல்லும்' ஆகிய படங்களைத் தயாரித்தவர் வேலூர் பாலாஜி அடுத்து, 'குறிஞ்சி நிலம்' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை ரவிந்திரநாத் என்ற புதிய இயக்குநர் இயக்கவுள்ளார்.

* 'பொலிஸ் லாக்கப்' படத்திற்குப் பின்னர் 'ரௌடி தர்பார்' படத்தில் இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார் விஜயசாந்தி. தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் விஜயசாந்தி ஏற்றிருப்பது அம்மா-மகள் வேடம்.

* விஜயகாந்தின் 125வது படமான 'உளவுத்துறை'யில் 'தாய்மாமன்', 'மாமன்மகள்' போன்ற படங்களை இயக்கியுள்ள குருதனபால் மேயர் வேடத்தில் நடித்திருக்கிறார்.

* விஜய்- (பேபி) ஷாலினி நடிக்கும் படத்தை பாசில் இயக்குகின்றார். இளையராஜா இசையமைக்கும் இப்படத்தில், விஜய் சொந்தக் குரலில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

* கதிர் இயக்கும் 'காதலர் தினம்' படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் 'பம்பாய்' படத்தில் 'ஹம்மா ஹம்மா....' பாடலுக்கு நடனமாடிய சோனாலி பாந்த்ரே. சோனாலி என்றால் தங்கப் பதுமை என்று அர்த்தம்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## ...தக் கடித்த நடிகை

...தக் கடித்து பரபரப்பு ஏற்படுத்திய ...க் டைசன். அந்தப் பாதிப்பில் ...ரி' படத்தில் காதுக்கடி காட்சி ...சேர்ந்துவிட்டார்கள்.

...சகமில்லாமல் கவர்ச்சி காட்டும் ...நடிகை திவ்யாதத். அவர்தான் ...படத்தில் கார்த்திக்கின் காதை ...ர்த்திருக்கிறார்.

...யாதத் உணர்ச்சிவசப்பட்டு விட்டால் ...க்கின் காது தப்பாது என்பதால், ...வேண்டாம், கடிப்பதுபோல பாவனை ...ல் போதும் என்று இயக்குநர் ...இருந்தார்.

...று முறை கார்த்திக்கின் காதை ...கடித்தார் திவ்யாதத். கூச்சத்தில் ...ார் கார்த்திக். ஆனாலும் காட்சி ...தத்ரூபமாக வரவில்லை. இன்னும் ...ம் அழுத்தமாக கடிக்கலாம் என்று ...ார்கள்.

...ா ஒடத் தொடங்கியது. கார்த்திக்கின் ...ன் இதழ்களால் கவ்வி, அழுத்தமாக ...ர் ஒரு கடி. 'அம்மா' என்று கத்தி ...ாம் கார்த்திக். காட்சி தத்ரூபமாக ...தது. நல்ல வேளை காது தப்பியது ...ாம் கார்த்திக்.

## ...ுபடி அஹானா

...லப்பேரி பாண்டி' படத்தில் ஒமிலா ...நெப்போலியனுடன் நடித்தவர் ...னா. கவர்ச்சிப் புயலாக தொடர்ந்து ...டிப்பார் என்று பார்த்தால், திடீ... காணாமல் போய்விட்டார்.

...ம்பாயில் ஒதுங்கி இருந்த அஹா... புதிய தமிழ்ப்படம் ஒன்றுக்காக ...க் கொண்டு வந்துள்ளனர். முழுக்க, ...அமெரிக்காவில் தயாராகும் ...த்தின் இசை இளையராஜா. படத்திற்கு ...சூட்டப்படவில்லை.

## ...து தேவை?

...ரயுலகில் நிலைக்க முக்கியத் தேவை ...அதிஷ்டமா? திறமையா? இந்தக் ...யை தமிழ்ப் பட நடிகைகளிடம் ...ல் தத்துவமாக பதில் சொல்லி ...பூ சுற்றுவார்கள்.

...பாய் நடிகையான காஷ்மீராஷா ...ஒரு பத்திரிகை அக் கேள்வியை ...யிருந்தது. அவர் என்ன சொல்லி ...றார் தெரியுமா? "திறமை பெரிய ...ப் தேவை இல்லை. அதிஷ்டம் முக்கியம். ...டு திரைக்குப் பின்னால் வேறு சில ...களும் தேவை. சகிப்புத்தன்மையும்' என்கிறார்.

# காதோடு சொல்லுகிறோம்

**பெ**ரும் தொழிலதிபர்களுடன் தங்குவதற்கு மீன் நடிகைக்கு விருப்பம் கிடையாதாம். தாய்க்குலத்தின் கட்டளையை மீறமுடியாமல் தான் இசைகிறாராம். தற்போது இளம் இயக்குநரின் தூண்டிலில் சிக்கியுள்ளார் மீன் என்பது தெரிந்த செய்தி. மூவேந்தர்களில் ஒருவரின் பெயர் கொண்ட அந்த இயக்குநரிடம் தனது தாய்க்குலம் பற்றி புகார் செய்திருக்கிறார் மீன் நடிகை. இயக்குநரோடு விரைவில் திருமணம் நடந்தாலும் ஆச்சரியமில்லையாம்.

**'வி'** என்ற எழுத்தில் பெயர் ஆரம்பிக்கும் அந்த மூன்றெழுத்து நடிகை இந்தியில் ஒரு 'பெரும்புள்ளியை' மடக்கிப்போட்டிருந்தார். சென்ற இடமெல்லாம் புளியங்கொம்பில் தாவும் நடிகைக்கு இம்முறை ஏமாற்றம் காத்திருந்தது. அந்த 'பெரும்புள்ளி' காரியம் முடிந்ததும் கை கழுவிவிட்டாராம். சொன்னபடி சிபாரிசுகளும் செய்யவில்லையாம்.

**'கா'** நடிகரின் லீலைகளை தடுக்க எத்தனையோ முயற்சி செய்தாராம் மனைவி. அவரும் முன்னாள் நடிகைதான். மனைவிக்கு கட்டுப்பட மறுத்த நடிகர் கூட நடிக்கும் நடிகைகளுடன் எல்லாம் மலையேறிக் கொண்டிருந்தார். பொறுக்க முடியாத மனைவி குழந்தையையும் அழைத்துக் கொண்டு பிறந்த ஊர் சென்றுவிட்டார். நடிகர் கலங்கவில்லை. பிரிய நடிகைகளை நேராக வீட்டுக்கே அழைத்துச் சென்று ஜமாய்க்கிறார்.

**மா**வீரன் பெயர் கொண்ட உயரமான நடிகருக்கும், விஜயமான நட்சத்திர குடும்ப நடிகரின் மகளுக்கும் இடையே ஒரு 'இது' இருந்ததாம். அந்தப் பிரச்சனை பெரியதாகியதால் நடிகர் சங்க விவகாரத்தில் விஜயமான குமார நடிகருக்கு கொடுத்த ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டார் 'மாவீர' நடிகர்.

**எ**ந்தப் பக்கம் சாய்வது என்று தெரியாமல் சில நடிகைகள் தடுமாறுகிறார்கள். ஆனால் 'ரன்' நடிகை மட்டும் 'சிம்மம் போல வலம் வருகிறார். தொழிலாளர் பக்கம் உள்ள நடிகர்களும் அவரிடம் ஜொள் விடுகிறார்களாம். படைப்பாளிகளான இயக்குநர்கள் சிலரும் அவரது கைக்குள் அடக்கமாம். திரையுலகப் பிரச்சனையால் எந்தப் பாதிப்பும் இல்லாமல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு வீட்டில் இருக்கிறார் நடிகை.

**வி**ஷயம் உள்ள சாந்தி நடிகை முன்னணி ஹீரோக்களுடன் நடிக்க மறுத்து வருகிறார். காரணம் கேட்டால், அவர்கள் தாங்கள் முன்னணி ஹீரோக்கள் என்ற மிதப்பில் வரம்பு மீறுகிறார்கள். நெருக்கமான காட்சிகளில் அவர்களுடன் நடிப்பது என்றாலே எனக்கு அலர்ஜியாகிவிடுகிறது. அதுதான் தவிர்த்து வருகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.



கமல்-ஓம்பூரி
படம்: மருதநாயகம்

### முகப்பில்

அஜித்குமார்

சௌந்தர்யா

## ...ினி நடிப்பாரா?

...நதநாயகம்' படத்தில் கமலுடன் ரஜினி, ...ரஜ் ஆகியோர் நடிப்பதாக முன்னர் ...வந்தது. அதனைக் கமல் மறுத்திருந்தார். ...ப்போது மறுபடி அதே கதை. ரஜினி ஒரு ...பாத்திரத்தில் நடிக்க இருப்பதாகக் ...றார்கள்.

...ராட்டிய மன்னனான பிரதாப்சிங் மருத...த்தை தன் படையில் சேர்த்துக் கொள்கிறார். ...மாக்ஸில் மன்னர் பிரதாப்சிங் மருத...த்துக்கு உதவுகிறார். மராட்டியத்தைச் ...தவரான ரஜினி பிரதாப்சிங் பாத்திரத்தில் ...ரவ நடிகராக தோன்றக்கூடும் என் ...கள். ஆனால் ரஜினியோ, கமலோ இதனை ...மும் உறுதி செய்யவில்லை.

## ...சனை தேடுகிறார்

...ருமணம் செய்து, 'போதை' மருந்துக்கு ...மையாகி மீண்டவர் ஐஸ்வர்யா. அம்மா ...மிடம் திரும்பினார்.

...ல்லாம் கொஞ்சக்காலம்தான். இப்போது ...ும் போதை தேட ஆரம்பித்திருக்கிறார். ...ா படப்பிடிப்புக்கு சென்றால் மகள் ...னை தேடி கிளம்பிவிடுகிறாராம்.

## ...லைப் பயணம்

...ற்கொலை முயற்சியில் இறங்கிய நடிகை ...இலண்டன் சென்று திரும்பியுள்ளார். ...லைச்சேவை செய்யத்தான் போனார். ...ால் மட்டும் மறுக்கிறார். "உடலை மெரு...ம் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப் போனேன்" ...றார். அதற்கு பணம்?

## ...போலியனின் புதிய படங்கள்

...ஜிவியின் நண்பரான தெலுங்கு நடிகர் ...ன்பாபுவின் தெலுங்குப் படத்தில் இரண்டாவது ...நாயகனாக நடிக்கவுள்ளார் நெப்போலியன். ...அத்துடன் கன்னடப் படம் ஒன்றிலும் கதாநாயக...நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தில் ...போலியனுக்கு ஜோடியாக ரஞ்சிதா நடிக்கிறார்.

## அக்கா—தம்பி

...அம்பிகா,ராதா ஆகியோரின் சகோதரர் விஸ்வா. ...யாளத்தில் விஸ்வா நடித்த படம் ஹிட்டாகி...து. தமிழில் நடிக்கவும் வாய்ப்புத் தேடுகிறார். ...அக்கா அம்பிகா தம்பிக்கு வாய்ப்புத் தேடி...டுக்கும் முயற்சியில் இறங்கி உள்ளார்.

...ந்தோட்டக் காவல்காரன் போன்ற படங்களில் ...த வாணி விஸ்வநாத் இப்போது மலையாளப் ...லகில் பிஸி. வாணியும், விஸ்வாவும் இலட்சியக் ...லர்களாகிவிட்டனராம்.

## 'அவருடன் இருந்தேனா?' மீனா விளக்கம்

பிரபல தொழிலதிபர் ஒருவருடன் மீனா ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்தார். அதற்காக பெருந்தொகையான பணம் பெற்றுக்கொண்டார் என்று ஒரு தமிழக சஞ்சிகை தகவல் வெளியிட்டிருந்தது.

அது தவறான தகவல் என்கிறார் மீனா. குறிப்பிட்ட தொழிலதிபருடன் அந்த சஞ்சிகைக்கு பிரச்சனை. அதுதான் அவரைப் பற்றி எழுதுவதற்காக என் பெயரையும் இழுத்திருக்கிறார்கள்' என்கிறார் மீனா. அந்த தொழில் அதிபருடன் தனக்கு பழக்கம் இல்லை என்று மட்டும் மீனா மறுக்கவில்லை. அதுதான் உறுத்துகிறது.

இதற்கிடையே மீனா சீனா போய்வந்த விவகாரமும் 'சேவை நோக்கம்' என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் முன்னாள் கவர்ச்சி நடிகையும், மீனாவின் தாயாருமான ராஜ் மல்லிகா காட்டமாக மறுத்துள்ளார்.

"கடல் மாதிரி இங்கே வீடு கட்டிப்போட்டிருக்கிறேன். நான் நினைத்தால் இங்கேயே நூறு தொழில் அதிபர்களை வரவழைக்க முடியும். இதற்காக ஏன் சீனா போக வேண்டும்? என்று கேட்கிறார் தாய்க்குலம். சரிதான்.

## சிபாரிசு

'நாம் இருவர், நமக்கு இருவர்' என்று எதிர்காலக் கனவுடன் இருந்த குஷ்புவை கலக்கியவர் ரம்பா. தென்னாபிரிக்காவில் ரம்பாவும் சுந்தரும் பிரச்சனைப்பட்டதில் ரம்பா சென்னை திரும்பினார். குஷ்புவுக்கு மகா சந்தோசம். குஷ்புவின் சிபாரிசில் ரம்பா நடித்த பாத்திரத்தில் நடிப்பவர் சிம்ரான்.

## இசையால் மழை

இசை கேட்டால் புலி அசைந்தாடும் என்பார்கள். இசைமழை கேட்டு வானம் விட்ட ஆனந்தக் கண்ணீர் மழையாகிவிட்டது. கற்பனை என்று நினைக்காதீர்கள்.

இசை அமைப்பாளர் தேவா தீவிர அம்மன் பக்தர். தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி முத்தாரம்மன் கோவிலுக்கு இசை நிகழ்ச்சி நடத்தச் சென்றார்.

அங்கு கடந்த 4 வருடகாலமாக மழை இல்லாமல் கடும் வரட்சி நிலவியது. தென்னை மரங்களும் கருகிப்போய் காட்சியளித்தன. மழை இல்லாத சோகத்தை தேவாவிடம் தெரிவித்தார்கள் ஊர் மக்கள்.

அவரும் "மழை வேணும் தாயே... முத்து முத்தாய் மழை வேண்டும், தென்னை மரம் வாடுதம்மா, பனைமரம் வாடுதம்மா..." என்ற பாடலைப் பாடினார்.

என்ன ஆச்சரியம், அன்று இரவே புயல் காற்றுடன் தொடங்கிய மழை நாலு நாட்களாக வஞ்சகம் இல்லாமல் கொட்டியதாம். அந்த ஊர்மக்கள் தேவாவை தெய்வம் என்கிறார்கள். தேவாவோ அம்மன் செயல் என்று நெகிழ்ந்து நிற்கிறார்.



சசிகுமார்-சாரதா-விஜயசாந்தி
படம்: போக்கிரி ராணி

## மணி மறுப்பு

கமலின் 'காதலா காதலா' படத்தில் நடிக்க மீனா மறுத்தது பழைய செய்தி. இப்போது மணிவண்ணனும் நடிக்க மறுத்திருக்கிறார்.

மணிவண்ணனுக்குப் பதிலாக மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் நடிக்க இருக்கிறார். 'மருதநாயகம்' பட விழாவில் படைப்பாளிகளை கமல் கிண்டலடித்தது இயக்குநர்கள் வட்டாரத்தில் பயங்கர கடுப்பை ஏற்படுத்தி உள்ளதாம்.

www.padippakam.com

## லேடீஸ் ஸ்பெஷல்

# நேசியுங்கள் நேசிக்கப்படுவீர்கள்



மூன்று வயதில் உங்கள் குழந்தைக்கு உங்களது அணைப்பு தேவைப்படுகிறது. அதே குழந்தைக்குப் பத்துப் பதினைந்து வயதாகும்போது அவர்கள் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்று நினைக்கிறது.

இதை நீங்கள் புரிந்து கொண்டால் உங்கள் குழந்தைகள் உங்களை விரும்புவார்கள்.

ஒருநாளில் சிறு பொழுதையாவது உங்கள் குழந்தையோடு செலவிடுங்கள். இல்லையென்றால் நம்மீது அம்மா- அப்பாவிற்கு அக்கறை இல்லை என பிள்ளைகள் எண்ணிவிடுவார்கள்.

மேலும் உங்கள் குழந்தைகளின் சிறு சிறு செயல்களைக் கூட மனந்திறந்து பாராட்டுங்கள். புகழ்ச்சிக்கு மயங்காத குழந்தைகள் ஏதுமில்லை.

ஒருபோதும் மற்றக் குழந்தைகளோடு ஒப்பிட்டு உங்கள் குழந்தைகளைத் திட்டாதீர்கள். இது அவர்களில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிடும்.

அன்பின் ஆற்றலுக்கு இணையாக உலகில் எதையும் குறிப்பிட முடியாது. அன்பால் எல்லாவற்றையும் சாதிக்கலாம். எனவே உங்கள் குழந்தைகள் தவறு செய்தால் அன்பாகக் கண்டியுங்கள். அன்பாக எடுத்துச் சொல்லுங்கள்.

வயது வந்த பெண்கள் வீட்டில் அன்பு, பாசம் குறையும்போது அதை வெளியில் தேட ஆரம்பிக்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் தங்களுடன் நெருங்கிப் பழகும் வாலிபர்களுடன் காதல் கொள்கிறார்கள். வீட்டை விட்டு அவர்களுடன் ஓடிப்போகத் துணிகிறார்கள். வீட்டில் பாசம் அதிகமாக இருக்கும்போது பெண் குழந்தைகளுக்கு இந்த எண்ணங்கள் அதிகமாக இருப்பதில்லை.

குழந்தைகள் பாசம் காட்டுபவர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

உங்களது அன்பான வார்த்தைகள்தான் உங்கள் குழந்தைகளிடம் நம்பிக்கையை விதைக்கும். அது அவர்களைச் சாதனையாளர்களாக மாற்றும்.

## ஒரு வயது வரை உகந்த உணவு



குழந்தை பிறந்து ஒரு வயதாகும் வரை உணவு விஷயத்தில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

* தாய்ப்பால்தான் குழந்தைக்கு இன்றியமையாதது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. குழந்தைக்கு எந்தப் பால் கொடுத்தாலும், கொடுத்து முடிந்ததும் தோளில் இதமாக போட்டு மெதுவாக முதுகைத் தடவிக் கொடுத்து ஏப்பம் விடச் செய்ய வேண்டும்.
* 4வது மாதத்தில் இருந்து கீரைச்சாறு, தக்காளிப்பழச்சாறு, வேகவைத்த காய்கறிகளை கடைந்து கொடுக்கலாம்.
* 5வது மாதத்தில் இருந்து வேக வைத்து மசித்த தானியங்கள், பருப்பு, காய்கறிகள், இட்லி, வாழைப்பழம், இடியப்பம் போன்றவற்றைக் கொடுக்கலாம்.
* 7வது மாதத்தில் இருந்து சோறு, பருப்பு, தயிர், கீரை, முட்டை, பசும்பால் கொடுக்கலாம்.
* 9 வது மாதத்தில் இருந்து இதே உணவு வகைகளை அளவு கூட்டிக் கொடுக்கலாம்.
* ஒரு வயதான குழந்தைக்கு பெரியவர்களின் உணவுவகைகளைக் கொடுக்கலாம்.
* குழந்தைகளுக்கு ஒரே சமயத்தில் ஒரே விதமான உணவை வழங்காமல், விதவிதமான உணவுகளைக் கொடுக்க வேண்டும். போதியளவு தண்ணீரும் அவசியம்.
* தண்ணீர் சுத்தமானதாகவும், கொதிக்க வைத்து ஆற வைத்ததாகவும் இருக்க வேண்டும்.
* வளரும் குழந்தைகளுக்கு பழச்சாறு, காய்கறி சாலட் போன்றவற்றை நிறையக் கொடுங்கள். இது உடலுக்கு மிக மிக ஆரோக்கியமானது.
* குட்டிப்பாப்பாக்களுக்கு சிறு தானியங்களால் செய்யப்படும் உணவுவகை நல்ல திடகாத்திரத்தை அளிக்கக் கூடியவை.
* பால்மாவைக் கொடுக்கும் தாய்மார்கள், அந்த பால்மா பக்கெட்டிலோ அல்லது டின்னிலோ என்ன எழுதியிருக்கிறதோ அதன்படி செயற்படுங்கள்.

## எதற்கு? எது?



மின்னிடும் மேனிக்கு-அப்பிள ஜூஸ்
நீங்காத நினைவாற்றலுக்கு- மாம்பழ ஜூஸ்
உடல் பலவீனம் நீங்க- பப்பாளி ஜூஸ்
சுகப்பிரசவமாக- பேரீட்சை ஜூஸ்
நீரிழிவு நீங்கிட- திராட்சை ஜூஸ்
தாகம் தணிய- எலுமிச்சை ஜூஸ்
பளிச்சிடும் பல்வரிசைக்கு- மாதுளம் ஜூஸ்
உறுதியான உடலுக்கு- தோடம்பழ ஜூஸ்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள்

# தாதியாக வேலை செய்த இளவரசி

8

புவனா

பாடசாலை வாழ்க்கையின்போது தான் டயானா அந்த இளைஞனைச் சந்தித்தாள். டயானா செல்லும் இடங்களில் அந்த இளைஞனும் எதிர்ப்பட்டான்.

ஆரம்பத்தில் டயானாவுக்கு அச்சமாக இருந்தது. தன்னை ஒருத்தன் பின்தொடர்கிறான் என்று வீட்டில் சொல்லிவிடலாமா என்றுகூட நினைத்ததுண்டு.

பின்னர் அதுவே ஒரு திரில்லான அனுபவமாக இருந்தது. அவன் யார் என்று டயானாவுக்குத் தெரியாது.

அவனது நடை உடை பாவனைகளில் இருந்து அவனும் பெரிய இடத்துப் பிள்ளைதான் என்று ஊகிக்கக்கூடியதாக இருந்தது.



டயானா ஒருநாள் நீச்சல் அடித்துவிட்டு திரும்பும்போது அவன் கரையில் நின்றிருந்தான்.

டயானா நீச்சல் உடை அணிந்திருந்தாள். மிகக் கவர்ச்சியாகக் காணப்பட்டாள். நீர்த்துளிகள் சொட்டிக் கொண்டிருக்க பன்னீரில் நனைந்த ரோஜாப் பூப்போலத் தெரிந்தாள்.

அவன் டயானாவின் கால்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். டயானாவுக்கு வெட்கமாகவும் இருந்தது. இப்படி விவஸ்தை இல்லாமல் முறைத்தும் பார்க்கிறானே என்று வெறுப்பாகவும் இருந்தது.



டயானா பயின்ற பாடசாலை

ஒரே ஓட்டமாக உடை மாற்றும் இடத்துக்குச் சென்றுவிட்டாள்.

அன்றிலிருந்து அந்த இளைஞன்மீது டயானாவுக்கு இனம்புரியாத வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

அதன்பின்னர் அவனைக் கண்டால் ஏறெடுத்துப் பார்ப்பதையும் தவிர்த்துக் கொண்டாள்.

இறுதியாக ஒரு நாள் அந்த இளைஞன் டயானாவை வழிமறித்தான். சிகப்பு ரோஜா ஒன்றை அவன் கை ஒன்று பற்றிக் கொண்டிருந்தது.

டயானா துணிச்சலாக அவன் கண்களைச் சந்தித்தாள்.

அவனும் துணிச்சலாக, எவ்வித பதட்டமும் இல்லாமல், 'ஐ லவ் யூ' என்றபடி ரோஜாவை நீட்டினான்.

டயானா மிக நிதானமாக அவனிடம் சொன்னாள்: "மன்னித்துக் கொள், உன் காதலை ஏற்றுக் கொள்ளமுடியாது! இனி மேலும் உன் நேரத்தை விரயமாக்கிக் கொண்டு என் பின்னால் சுற்றாதே!"

மென்மையாக, ஆனால் ஆணித்தரமாக டயானா சொன்ன வார்த்தைகளால் அவன் முகம் பேயறைந்தது போல் ஆனது.

அதன்பின்னர் டயானாவின் வழியில் அவன் குறுக்கிட்டது கிடையாது. அதன் பின்னர் எப்போதும் அவனை டயானா சந்தித்ததும் இல்லை.

பாடசாலை வாழ்க்கையில் ஏற்பட்ட சபலத்தில் இருந்து மீள முடிந்தது டயானாவால். அவன் பொருத்த மற்றவன் என்பதையும் கண்டறியும் பக்குவமும் இருந்தது.

அப்படிப்பட்ட டயானா பின்னர் எப்படி சாள்ஸ்சைப் பற்றி புரிந்துகொள்ள முடியாமல், அவரை மணக்கச் சம்மதித்தாள் என்று டயானாவின் நண்பிகள் ஆச்சரியப் பட்டதுண்டு.

### வந்தார் சீமாட்டி

கல்வியை முடித்துக்கொண்ட டயானாவுக்கு மாளிகைக்குள் அடைந்து கிடக்கப் பிடிக்கவில்லை.

டயானாவின் தந்தையார் மறுமணம் செய்துகொண்ட றைன் டாட்மௌத் சீமாட்டியை டயானாவுக்குப் பிடிக்கவில்லை. டயானாவின் சகோதரிகளுக்கும் சிறிய தாயார்மீது பிடிப்புத் தோன்றவில்லை.

டயானாவின் சகோதரி ஜேன் தன் தாயாருடன் சென்று தங்கினாள். சிறிய தாயாரை 'றைன் திராவாகம்' என்று இரகசியமாக பட்டம் சூட்டி அழைத்தனர்.

றைன் சீமாட்டியும் ஏற்கனவே மணமானவர். ஏராளமான சொத்துக்கள் அவளிடம் இருந்தன.

டயானாவின் தந்தையாருக்கு ஓரளவு சொத்துக்கள் இருந்த போதும், கோமான் என்ற அந்தஸ்த்தை கட்டிக்காக்க ஆடம்பரங்களும் தேவையாக இருந்தன.

ஆடம்பரங்களுக்கு செலவிட்டதில் சொத்துக்கள் கரைந்து கொண்டிருந்தன. கடனில் மூழ்கத் தொடங்கினார். அந்த நேரத்தில்தான் கைகொடுத்தார் றைன் சீமாட்டி.

றைன் சீமாட்டிக்கு வர்த்தகத் தொடர்புகளும் இருந்தன. அதனால் அவள் வருகையுடன் ஸ்பென்சர் குடும்பத்தில் செழிப்புத் தோன்றியது.

டயானாவின் தந்தையாரும், சிறிய தாயாரும் இளம் தம்பதிகள்போலவே நடந்து கொண்டனர்.

றைன் சீமாட்டியின் பின்னாலேயே ஜோன் ஸ்பென்சர் சுற்றிக்கொண்டிருந்தார்.

ஒருநாள் இரவு தன் தந்தையாரை ஏதோ ஒரு அலுவல் நிமித்தம் சந்திக்க அவரது அறைக்குச் சென்றார் டயானா.



அறை மூடப்பட்டிருந்தது. உள்ளே இருந்து வித்தியாசமான ஒலிகளும் சீமாட்டியின் முனகல்களும் கேட்ட வண்ணம் இருந்தன. டயானா தன் அறைக்கு ஓடி விட்டாள்.

### வேலை தேடினார்

தன் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்று டயானா எண்ணத்தொடங்கினார். அதனால் வேலைத் தேட ஆரம்பித்தார்.

உயர் குடும்பப் பெண்ணான டயானாவுக்கு இளம் வயதிலேயே எளிமையாக வாழும் ஆசை வந்துவிட்டது.

டயானா முதலில் செய்த வேலையை நினைத்தால் ஆச்சியம் ஏற்படும். பிற்கால இளவரசி செய்த வேலையா அது என்று வியப்புத் தோன்றும்.

தன் சிநேகிதி வீடு ஒன்றில் அவளது குழந்தையைப் பராமரிக்கும் தாதியாக வேலைக்குச் சேர்ந்தார் டயானா.

அந்த வீட்டிலேயே ஒரு அறை எடுத்து தங்கிக்கொண்டார்.

டயானா தாதியாக வேலை செய்வதை அறிந்த தாயார் ஓடோடி வந்தார்.

"மகாராணிபோல இருக்க வேண்டியவள் பணியாளாக வேலை செய்வதா?" என்று கண்ணீர் சிந்தினார்.

தாயாரின் கண்ணீர் டயானாவின் மனதைக் கரைத்தது. தாயாருடன் சென்றார். அங்கேயே தங்கிக்கொண்டார்.

இலண்டன் மாநகரின் மத்தியில் அந்த வீடு இருந்ததால் டயானாவால் சுதந்திரப் பறவையாக சுற்றித்திரிய முடிந்தது.

தாயார் பெரும்பாலும் தன் கணவருடன் ஸ்கொட்லாந்துக்கு சென்றுவிடுவார். அதனால் டயானா மட்டும்தான் வீட்டின் நிர்வாகத்தை கவனிக்க வேண்டும்.

தாயார் இல்லாத தைரியத்தில் மறுபடியும் சொந்தமாக சம்பாதிக்கத் தொடங்கினார் டயானா.

விருந்து வைபவங்களை நடத்திவைக்கும் நிறுவனம் ஒன்றில் உணவு பரிமாறும் பணியைச் செய்தார். அதில் கிடைக்கும் வருமானம் தனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்ததாக டயானா பின்னர் நினைவு கூர்ந்தார்.

"சொந்தமாக சம்பாதித்து வாழ்வதில் உள்ள சுகம், என் வீட்டாரின் செல்வச் செழிப்பில் திளைத்தபோதுகூட கிடைத்தது இல்லை" என்று டயானா கூறியிருந்தார்.

இலண்டனில் டயானாவைப் போல வசதி உள்ள பெண்கள் டிஸ்கோ நடன விடுதிகளுக்குச் சென்று கூத்தடிப்பார்கள்.

"மகாராணிபோல இருக்கவேண்டியவள் பணியாளாக வேலை செய்யலாமா?"

தங்கள் ஆண் நண்பர்களுடன் சுற்றித் திரிவார்கள். அவர்கள் மடியில் தவளுவார்கள். விதம் விதமாக வாழ்க்கையை அனுபவிக்கத் துடிப்பார்கள்.

டயானா மட்டும் தன் சொந்தக் காலில் நிற்கும் விருப்பத்தோடு தொழில் செய்து கொண்டிருந்தாள்.

தொழில் புரியும் தம்பதிகளின் குழந்தைகளைப் பராமரிக்கும் காப்பகம் ஒன்றையும் நடத்தினார் டயானா.

குழந்தைகளோடு குழந்தைகளாக மாறி விடுவாராம் டயானா. "அந்த நாட்கள் பசுமையானவை. மீண்டும் பெற முடியாதவை. அப்போதுதான் நான் மிக மிக மகிழ்ச்சியாக இருந்தேன். இந்த உலகில் பிறந்ததற்காக சந்தோசமடைந்தேன்" என்று டயானா அந்த நாட்களைப் பின்னர் நினைவு கூர்ந்திருக்கிறார்.

### ஆசிரியை

டயானாவுக்கு 18 வயதானபோது பிரமாதமான அழகியாக இருந்தார். நடனமும் கற்றிருந்தார். நடனப் பயிற்சி உடலை மெருகுபடுத்தி இருந்தது.

1979 ஜூலையில் 85 ஆயிரம் பவுண் செலவிட்டு டயானாவுக்கு தனியான ஒரு வீட்டை வாங்கிக் கொடுத்தார் தந்தை. அந்த வீடு இலண்டன் நகரில் இருந்தது.

அந்த வீட்டின் அருகில்தான் யங் இங்கிலண்ட் கிண்டர் கார்டன் பாலர் பாடசாலையும் இருந்தது.

சென் சேவியர் ஆலயத்துடன் இணைந்திருந்த அந்தப் பாடசாலையில் ஆசிரியையாக வேலைக்குச் சேர்ந்தார் டயானா.

சிறுவர்களுக்கு நடனம், சித்திரம் ஆகியவற்றை கற்றுக்கொடுத்தார். வாரத்தில் மூன்று நாட்கள்தான் வேலை.

அதனால் செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் இன்னொரு வேலையையும் பொறுப்பேற்றார்.

இலண்டனில் இருந்த எண்ணெய் நிறுவனம் ஒன்றின் நிர்வாகியின் மகனை கவனிக்கும் வேலைதான் அது.

இளம் நிர்வாகிக்கு இளமையான டயானாமீது ஒரு கண்.

ஒருநாள் டயானா எதிர்பாராத தருணத்தில் அது நிகழ்ந்தது.

(அடுத்த வாரமும் வரும்)

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CQ

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

கையொப்பம்:...............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-11-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல:-772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**திருமதி எஸ். சரஸ்வதி,**
**24, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com



# மாற்றம்

அந்தநாளை என் நெஞ்சம் மறக்குமா?
அக்கணத்தின் அவலமும் அச்சமும்
சிந்தையுள் கொடுஞ் சிற்பமாய் நிற்குதே!
திடுமென அது தேயுமா? இல்லையாம்!
இந்த வீதிதான்: ஆம் இதே வீதிதான்!
இன்று போல் 'விழா' அன்றும் நடந்ததாம்:
வந்து சுற்றின 'வானக் கழுகுகள்'
வரிசை வரிசையாய் ஐந்தாறு 'தும்பிகள்.'

சாமி தூக்கி உள் வீதியைச் சுற்றுகையில்
தரை தகர்வதாய்ச் சத்தம் எழுந்தது:
பூமி இருகணம் ஆடி அதிர்ந்தது:
புகை அயலினை மூடிக் கவிந்தது:
"சாமியே துணை" வாய்கள் இறைஞ்சிட
தட தடவெனப் பவனி விரைந்தது.
மாமரத்தடிப் பக்கமாய்... விண்ணோக்கி
மழை எழுந்ததாய் வெடிகள் முழங்கின.

'கொம்பு காவி' நான் அண்ணாந்து
நோக்கினேன்.
கூதலற்றும்... நடுங்கிய வானிலே
ஐந்து 'யந்திரச் சக்கர வாகனங்கள்'
ஆரோகணித்தன! சிவப்பு விளக்குகள்
மின்னி மீண்டும் இரையினைத் தேடின:
பண்ணைப் பக்கம் விரைந்தன: சாமியைக்
கொண்டு சேர்க்குமுன் கூட்டம் கலைந்தது.
குருதிச் சொட்டு 'பின்ரோட்டை' நிறைத்தது!

இந்த வீதிதான்: ஆம் இதே வீதிதான்!
அன்றுபோல் 'விழா' இன்றும் நடந்ததாம்!
குண்டுபீச்சிய பட்சியும் வந்தது:
கூடை கூடையாய்ப் பூக்களைக் கொட்டிற்று!
இன்று சாமியைத் தூக்கி நடக்கையில்
பட்சி தூவிய செம்மலர்... வீதியில்
புன்னகைத்தது: வாய்கள் ரசித்தன.
புழுதி மண்கூட மெல்லச் சிரித்தது.
(நல்லூர் தீர்த்தத்தில் ஹெலி பூமாரி தூவியது.)

அருணன்- யாழ்ப்பாணம்.

# காணிக்கை!

காற்றின் முதுகிலேறி
சஞ்சரிக்கிறது
இக் கவிதை!
**
ஒரு மாற்றுத் துணியும்
கவளச் சோறும்
இல்லாதிருக்கும் முகாம்களுக்குள்
இது விழும்!
**
தேசாந்தரிகள்,
கனவின் விளிம்பிலிருந்து
கண்ணீர் உகுக்கும்
தேவதைகள்,
மடியினை தொட்டே
தழுவும்.
**
தாயகத்தின் மார்பகத்தில்
வாய் வைத்துறிஞ்சும்
கனவுப் பாலின்
கடை வாய் நுரையை,
துடைத்து விம்மும் நரைகளுக்கு
இது ஒரு- கதம்பத் தென்றலாய்
வீசும்!
**
அரசியல் வாதியின்
ஊத்தை மணத்தைவிடவும்,
அவனின் சாக்கடை
அறிக்கையை விடவும்
மிகப் புனிதமானது
இக் கவிதை!
**
காற்றின் முதுகிலேறி
புறப்பட்டு வருகிறது!
போரின் பைசாச ராஜ்யத்தின்
பிரிய மனிதர்களே!
இதை நெஞ்சிலெடுத்து
ஒற்றிக் கொள்ளுங்கள்!
**
என் செய்ய....?
என் கண்ணீரின் பெறுமானம்
இக்கவிதைதான்
உங்களுக்கு!

என்.சுஹா.

# பசுமை

என் மதன மலரே!
உன் இதழ் விரிப்பில்
நான் மலர்ந்தேன்–
மலர்ந்து மகிழ்ந்தேன்!

ராத்திரி நேரங்கள்–
காத்திருந்த காலங்கள்–
சாளரத்துச் சைகைகள்
சத்தமில்லா உறவுகள்!

குவிந்த மர மறைவில்,
உலர்ந்த சருகுகளில்,
திறந்த பொன்னுடலில்
கிறங்கிக் கிடந்தோம்–
படர்ந்து மகிழ்ந்தோம்!

தென்றல் போகும்,
வசந்தம் வலம் வரும்,
மங்கிய மாலையில்
எங்களைக் காணாமல்
ஏங்குதங்கே அந்த
இளப்ப் பசுமை!

மலர்விழி.

# பழமையும் புதுமையும்

செந்தமிழினம்
என்னும் போதினிலே...
"அடையாள அட்டை
எங்கே...?" என்று
கேட்குது காதினிலே...!

யாமறிந்த மொழிகளிலே...
"சன் டிவி டெமில்"
மொழி போல்
இனிதாவது
எங்கும் காணோம்!

எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவியது
இந்நாடே....
உறவையும் சொத்தையுமிழந்து
அகதியாய்... வாழ்வதும்
இந்நாடே...!

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே...
உச்சி மீது
"ஷெல்" விழுந்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே...!

நெஞ்சு பொறுக்குதிலையே
இந்த...
"தீர்வுப்பொதி" படும் பாட்டை
நினைந்து விட்டால்!

பொதியில் பொருளுமின்றி
பேச்சில் பொருளுமின்றி
தீர்வு சொல்வாரடி– கிளியே
அரசியலில் வல்லாரடீ!

சோ. ஸ்ரீதரன்–பொகவந்தலாவை.

# ஏதாவது கொடுங்கள்

அஞ்சி அஞ்சி
இதயம் சுருங்கிவிட்டது–
இதயமில்லாதவர்களினால்!
•
மின்மினிப்
பூச்சுகள் கூட
நெருப்புக் கொள்ளிகளே!
•
குரும்பட்டி
விழும் சத்தங்கள்கூட
'அது' விழும்
சத்தம் போல
உயிர் நடுக்கம்!
•
ஏன் ஐயா!
என்ன–
கொடுமை செய்தோம்?
உயிருடன் வைத்தே
சித்திரவதைகள்.....?
•
குயில்கள் போல்
இனத்தைப் பெருக்க
காகத்தின் கூட்டுக்கா
போவது?
வயிற்றோடு
வாழ்க்கையுந்தான்
கேள்விக்–
குறியாகிவிட்டது!
•
வேண்டும்....
வெடித்துவிடாத
இதயமும்
இடிந்துவிழாத
கறகுகையும்!

மாரிமுத்து யோகராஜன்–
அக்கரைப்பற்று.

# முடிவு

ஒரே நாடு ஒரே மக்கள்
ஆகும் வரை,
ஒரே போர்!

முடிவில்...
ஒரே பாதை ஒரே பயணம்
அதுதான் மரணம்!

நிரந்தரத் தீர்வுகள்
நிச்சயமாய்
நம் புதைகுழியில்...

தெருக்கூத்துக்களோடு
சமாதான முகமூடிகளும்
மௌனித்து விடும்!

அரசியல் மாற்றங்கள்
அமாவாசை பௌர்ணமியாய்
அடுத்தடுத்து வந்து போகும்!

ஜே.ஜஸ்டின், வவுனியா.

# யார் இவர்கள்?

→ இந்தப் படங்களில் குழந்தையாகவும், இளம் பெண்ணாகவும் இருப்பவர் ஒருவரேதான். உற்றுப் பார்த்தால் புரிந்துகொள்வீர்கள்.
இன்று உலகம் அறிந்த பெண்மணியாக இருக்கிறார். இந்தப் பெண்மணியின் நாட்டுடன் எமது நாட்டுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. இந்த மகா பெண்மணியை கண்டுபிடிப்பது பெரிய கஷ்டமல்லத்தானே?





↓ அன்று குழந்தை, இன்று இளமையான நடிகை. மானுடன் தொடர்புடைய பெயர் கொண்டவர். அழகிப் போட்டி ஒன்றிலும் வெற்றி பெற்றவர். தமிழ்ப் படங்களிலும் நடித்துள்ளார். என்ன... கண்டு பிடித்து விட்டீர்களா?

↓ மூக்குக் கண்ணாடியுடன் அமர்ந்திருக்கும் சிறுவன் யார் தெரிகிறதா? தமிழ் சினிமாவிலும் முகம் காட்டியவர்தான். இந்தியாவின் அரசியல் விமர்சகர்களில் ஒருவராகத் திகழ்கிறார். இவரது விமர்சனத்திற்கு மக்களிடம் வரவேற்பு இருக்கிறது. அரசியல்வாதிகள் மட்டும் அடிக்கடி முகம் களிப்பார்கள். யார் இவர்?

விடைகள் பக்கம் 18ல்





# சிதைந்த எண்ணங்கள்

பூக்களின் மென்மை
வேல்களின் கூர்மை
உன் விழிகள்....!

தரையில் மீன்கள்
துள்ளுதே
என்னைக் கண்ட
உனது கண்கள்....!

அமாவாசையில்
பௌர்ணமியை
பார்த்தவர் உண்டா?
கூந்தல் மூடிய
உனது முகம்.....!

இடறியது எனது
கால்கள்;
உந்தன் புன்னகையில்–
உடைந்தது மனது.....!

என்னவளே!
உன்னைத் தவிர
எல்லோரையும்
காதல் செய்கிறேன்!

உன்னை....
உன்னை....
உண்மயிலேயே


வார்த்தைகள்
வரவில்லை!

காற்றே
மெல்ல வீசு!
அவளின்
கூந்தல் பூ
வலிக்கிறதாம்!

என்றவனின்
பிரிவிற்காய்...!

உனது கண்கள்
ஏனடி சிரித்தன?
கண்ணீர்!

சுபா வரன்,
கண்டி.



# இந்த வாரம் உங்கள் பலன்

(09.11.1997 தொடக்கம் 15.11.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- கடன் பயம், மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 11 மணி |
| செவ்வாய்- வீண் அலைச்சல், பொருள் விரயம். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பொருள் பேறு. | பகல் 11 மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 3 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, கடன் படல். | பி.ப. 1 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 11 மணி |
| புதன்- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் 11 மணி |
| சனி- உயர்ந்த நிலை, வீண் விரயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் நன்மை, பெரியோர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பலவித பேறு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கடன் சுமை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் 11 மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், தொழில் சிறப்பு. | மு.ப. 10 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, காரியக் கேடு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- முயற்சிகளில் வெற்றி, அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன். |
| விருட்சிகம் | - புதன். |
| தனு | - வெள்ளி, செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| புதன் - பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| சனி- புதிய முயற்சி, அந்நியர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| திங்கள்- செய்தொழில் நன்மை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், தொழில் விருத்தி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 1. மணி |
| சனி- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவக் குறைவு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- கடன் சுமை, கௌரவம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- வீண் துயர், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் சுகம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- முயற்சிகளில் வெற்றி, இனசன நன்மை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பொருள் விரயம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் 12 மணி |
| புதன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- முயற்சிகளில் வெற்றி, உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் விரயம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, காரியக் கேடு. | பகல் 11 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பலவித நன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சிகளில் வெற்றி, பொருள் வரவு. | பகல் 12 மணி |


அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

www.padippakam.com





வாராய் நிலவே வையத் திருவே,
வெள்ளைத் தீவில் விளையுங் கடலே,
வானப் பெண்ணின் மதமே, ஒளியே,
வாராய், நிலவே, வா.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# மௌனம் தந்த வெற்றி!



வெளியூர் சென்று கொண்டிருந்த ஒருவன், வழியில் ஒரு சத்திரத்தைக் கண்டான். இங்கே தங்கி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தில் குதிரையை விட்டு இறங்கினான்.

குதிரையுடன் சத்திரத்திற்கு அருகில் சென்ற குதிரைக்காரன், பக்கத்தில் இருந்த மரமொன்றில் குதிரையைக் கட்டினான். பின் சத்திரத்திற்குள் நுழைந்தான்.

அப்பொழுது அங்கிருந்த ஒருவன் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான். இதைப் பார்த்த குதிரைக்காரன்,

"தம்பி,இது முரட்டுக்குதிரை, வாலைப் பிடித்து இழுக்காதே; உதைத்தால் பல்லெல்லாம் போய்விடும்," என எச்சரித்து விட்டு உள்ளே சென்றான்.

ஆனால் அவனோ அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்து விட்டு மீண்டும், மீண்டும் குதிரையின் வாலைப் பிடித்து இழுத்தான். வலி தாங்க முடியாத குதிரை ஓங்கி ஒரு உதை விட்டது.

குதிரை விட்ட உதையால் அவனின் முன்பற்கள் சிதறின. அவன் 'ஓ'வென அலறினான். அது மட்டுமில்லாமல் அந்த ஊர் நீதிபதியிடம் சென்று வழக்குத் தொடுத்தான்.

வழக்குத் தொடங்கியது.

நீதிபதி குதிரைக்காரனைப் பார்த்து,

"இந்தக் குதிரை உன்னுடையதா?" என்று கேட்டார்.

ஆனால் அவனோ பதில் ஏதும் பேசவில்லை.

"உன் குதிரையால் இவனுக்கு எவ்வளவு காயம் ஏற்பட்டிருக்கிறது; இதற்கு நீ என்ன சொல்கிறாய்?" என்று மறுபடியும் கேட்டார்.

அப்பொழுதும் குதிரைக்காரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

அதைக்கண்ட நீதிபதி.

"இவன் காதுகேளாத ஊமையாக இருப்பானோ?" என்று குதிரையுடன் சேட்டை செய்தவனைப் பார்த்துக் கேட்டார்.

உடனே அவன். குதிரைக்காரனைப் பார்த்து.

"என்ன உன் வாயில் கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்? 'இது முரட்டுக் குதிரை, வாலைப் பிடித்து இழுக்காதே; உதைத்தால் பல்லெல்லாம் போய்விடும்' என்று அப்பொழுது கத்தினாயே, இப்பொழுது காது கேளாத ஊமை போல நடித்து ஏமாற்றவா பார்க்கிறாய்?" என்று கோபத்துடன் கத்தினான்.

இதைக் கேட்டதும் நீதிபதிக்கு உண்மை புரிந்தது. குதிரையிடம் சேட்டை செய்தவனைப் பார்த்து,

"நீ குதிரையின் வால் முடியைப்பிடித்து இழுத்தாயா?" என்று கேட்டார்.

அவன் தலை குனிந்து நின்றான்.

குதிரைக்காரன் நீதிபதியிடம்,

"நீதிபதி! அவர்களே! தங்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகவே ஊமைபோல, நடித்தேன். மன்னித்து விடுங்கள்!" என்றான்.

வழக்குத் தொடுத்தவனைக் கடுமையாகக் கண்டித்து அனுப்பிய நீதிபதி, குதிரைக்காரனின் அறிவுக் கூர்மையைப் பாராட்டினார்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



**நிலக்கரி வீடு** செமிடில்ஸ் போரோஃப் என்ற இடத்திலுள்ள அலுவலகக் கட்டடம் ஒன்று 40தொன் நிலக்கரியால் கட்டப்பட்டது.



**அவுஸ்திரேலிய தூக்கணாங் குருவிகள்**

இப்பறவைகள் மரக் கிளைகளின் கீழே ஒன்றோடொன்று தொத்திக் கொண்டு கிடக்கும் தேனிக்கூட்டில் தேனிக்கள் போல மொய்த்திருக்கும்.

**உயர்ந்த வேலி** இங்கிலாந்தில் உள்ள குளூசெஸ்டர் என்ற இடத்தில் அமைந்திருக்கும் சிரன்செஸ்டர் பூங்காவின் வேலி 30 அடி உயரமானது. உலகிலேயே உயரமான இதை வருடமொரு முறை வெட்டித் துப்பரவு செய்ய 10 நாட்கள் பிடிக்கும்.



**மறையும் ஏரி** வட அயர்லாந்தில் அன்ட்ரிம் பகுதியில் உள்ள லோகாரிமா ஏரி சில இடங்களில் பூமியின் உள்ளே கண்ணுக்குத் தெரியாமல் ஓடும். பின்னர் மேலே தோன்றும்.



# வாரம் ஒரு நாடு

## புர்கினா ஃபாஸோ



தலைநகர் - ஒவாகடௌகு
பரப்பு - 2,74, 200 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 1.03 கோடி
மொழி - ஃபிரெஞ்சு மற்றும் சூடான் பழங்குடி மொழிகள்.
எழுத்தறிவு - 18%
சமயம் - பழங்குடி மற்றும் இஸ்லாம்.
நாணயம் - ஃபிராங்க்
தனிநபர் வருமானம் - 310 டொலர்

**அமைவிடம்:**

மேற்கு ஆபிரிக்க நாடு. நிலப்பகுதிகளால் சூழப்பட்டு இருந்தாலும், வோல்டா நதியின் கிளைகளால் கடலுடன் தொடர்பு கொண்டுள்ளது. இதன் வடக்கிலும், மேற்கிலும் மாலியும்; கிழக்கில் நைஜரும்; தெற்கில் பெனின், டொகோ, கானா மற்றும் ஐவரி கோஸ்ட்டும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

ஃபிரான்ஸின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. 1960ல் சுதந்திரம் பெற்றது. முன்பு 'அப்பர் வோல்ட்டா' என அழைக்கப்பட்டது. 1984ல் இந்தப் பெயர் மாற்றம். இராணுவ ஆட்சி நடைபெறுகிறது.

**பொருளாதாரம்:**

விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். சோளம், பருத்தி, சேனைக்கிழங்கு முக்கிய விளை பொருட்கள். கைவினைத் தொழில்கள் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.11.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 218
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 216**

பரிசுக்குரியவர்:
கே. பிரதாப்,
புனித அந்தோனியார் ம.வி. வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ். செந்தூரன், தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. | செல்வி பேரின்பநாயகம் விஜிதா, சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| எஸ். ஸ்டெனோசன், புனித பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு-13. | ஜி. விஜயதாஸ் பெர்னான்டோ, மட்டக்குளி, கொழும்பு-15. |
| எஸ். ஸ.்ப்ரான் மொஹமட், முருதலெல, மாவனெல்லை. | சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| பி. ஹரிசுதன், இ.கி.ச. கோனேஸ்வர இந்துக் கல்லூரி, திருகோணமலை. | புனிதா சாந்தலிங்கம், ம/ விவேகானந்தா பெண்கள் உயர்தர பாடசாலை, கல்லடி, உப்போடை. |
| எம். சதீஷன், தமிழ் வித்தியாலயம், கினிகத்தேனை. | ஐ. இ.ஃப்திகார், க/ ஜமீமுல் அஸ்ஹர் ம.வி., உடதலவின்ன. |

# கண்ணாடிக் கரடி



தென் அமெரிக்காவில் காணப்படும் ஒரே கரடியினம் கண்ணாடிக் கரடி.. இந்தக் கரடியின் கண்கள் அருகே மஞ்சள் நிற வளையம் இருப்பதால் பார்ப்பதற்குக் கண்ணாடி அணிந்திருப்பது மாதிரித் தோன்றும். இதை 'அன்டியன் கரடி' என்றும் சொல்வார்கள்.

6500 அடி உயரமான மலைப்பகுதியில் கூட இவை வசிக்கின்றன. கடுங்குளிரைத் தாங்குவதற்குத் தடித்த தோல்கள் உள்ளன.


5 அடி நீளம் வரை இந்தக் கரடிகள் வளரும். இவற்றிற்குப் பிடித்தமான உணவு தாவரங்கள்தான். பழுப்பு நிறக்கரடியைப் போல் உயிரினங்களைச் சாப்பிடுவதில்லை. இரையே இல்லை என்றால்தான் அபூர்வமாக பிராணிகளைப் பிடித்துச் சாப்பிடும்.

மரம் ஏறுவதில் கெட்டித்தனமான இவை, வசிப்பது மரத்தில்தான். இதன் குரல் பயங்கரமாக இருக்கும். இதனை விட வலிமையான விலங்கு வந்தால், நடுநடுங்க வைக்கும் குரலெழுப்பி எதிரியைப் பின்வாங்க வைத்து விடும்.

# புகை ஏன் வருகிறது?

நெருப்பு எரியும் போது புகை வரும். புகை ஏன் வருகிறது தெரியுமா?

புகை என்பது- நீராவி, காற்றில் உள்ள அசுத்தமான பொருட்கள், சரியாக எரியாத துணுக்குகள் ஆகியவற்றின் கலவை ஆகும்.



பொருட்கள் எரியும் போது காற்றில் உள்ள ஈரப்பதம், மெல்லிய தூசு, சரியாக எரியாத கரித்துகள்கள் எல்லாம் சேர்ந்து புகையாகத் தெரிகின்றது.

ஆனால் சமையல் செய்வதற்குப் பயன்படும் எரிவாயு எரியும்போது அந்த எரிவாயு முழுமையாக எரிகின்றபடியால், சரியாக எரியாத துணுக்குகள் வெளிப்படுவதில்லை. அதனால்தான் அதில் புகை வருவதில்லை.

# ஆதி மனிதனின் ஆயுதம்



ஆதிகால மனிதர்கள் வேட்டையாடுவதற்கு கற்களைக் கொண்டு தயாரித்த ஆயுதங்களையே பயன்படுத்தினார்கள். கற்களின் ஒரு முனையைக் கூராக்கி ஈட்டி போன்ற ஆயுதங்களாக அவற்றைப் பாவித்தனர்.

இந்த ஆயுதம் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பஹ்ரைன் நாட்டின் தென்பகுதி மற்றும் கியூபா போன்ற நாடுகளில் கற்களால் செய்யப்பட்ட பல ஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

இதே போன்ற ஆயுதங்கள் இந்தியா, ஈராக் போன்ற நாடுகளிலும் அதிகளவு கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதிகால மக்கள் விவசாயத்தை அறிந்து கொள்ள ஆரம்பித்த பின்பு, இதே ஆயுதங்களை மண் தோண்டுவதற்குப் பயன்படுத்த ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விடுகதைகளும் விடைகளும்

1. உமி போல் பூப்பூத்து, சிமிழ் போல் காய் காய்க்கும். அது என்ன?
2. வருடத்தில் கட்ட வேண்டிய வரி அல்ல; வருடத்தில் அடுத்தடுத்து வரும் இரண்டு வரி. அது என்ன?
3. உயரப்பறக்கும், ஊன்று கோலில் நிற்கும். அது என்ன?
4. குழந்தைக் குரலுடையவன், புசுபுசு உடம்புக்காரன். அவன் யார்?
5. தலையைச் சீவினால், தடையின்றி எழுதுவான். அவன் யார்?
6. சருகுச் சேலைக்காரி, சமையலுக்கு உதவுவாள். அவள் யார்?
7. மரத்திலும் இருப்பான், மலையிலும் கிடைப்பான், நாவுக்கு இனிமையானவன். அவன் யார்?
8. காட்டுக்குள் இருப்பவன், வீட்டிலும் மணப்பான். அவன் யார்?
9. பரந்து விரிந்தவன், பல வண்ணமும் காட்டுவான். அவன் யார்?
10. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன?

விடைகள்

1. நெல்லிக்காய் 2. ஜனவரி, பெப்ரவரி
3. கொடி 4. பூனை
5. பென்சில் 6. வெங்காயம்
7. தேன் 8. சந்தனம்
9. வானம் 10. அன்னாசிப்பழம்.

தொகுப்பு: செல்வி சஹானா சலீம், புத்தளம்.

# அன்னையும் விருதுகளும்

அண்மையில் காலமான அன்னை தெரேசா அவர்கள், செய்த சேவைக்காக அவருக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டன. அன்னை பெற்ற விருதுகளும், பெறப்பட்ட காலமும் பின்வருமாறு:

| விருது | காலம் |
|---|---|
| 1. பத்மஶ்ரீ (இந்தியா) | ஏப்ரல்-1962 |
| 2. மாக்ஸேஸே விருது | ஆகஸ்ட்-1962 |
| 3. குட் ஸமாரிட்டன் | செப்டெம்பர்-1971 |
| 4. கென்டி சர்வதேச விருது | 1971 |
| 5. டாக்டர் பட்டம்(அமெரிக்கா) | அக்டோபர்-1971 |
| 6. ஜவகர்லால் நேரு விருது | நவம்பர்-1972 |
| 7. டெம்பிள்டன் விருது | 1972 |
| 8. ஶ்ரீமதி இந்திராகாந்தி விருது | - |
| 9. இம்பீரியல் கெமிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் விருது | - |
| 10. பாப்பரசர் அருளப்பர் சமாதானப் பரிசு ஜனவரி | 1971 |
| 11. ஒ.பி.இ.விருது (ஒடர் ஒ.ஃப் பிரிட்டிஷ் எம்பயர்) | ஜூலை-1978 |
| 12. பால்சான் சர்வதேச விருது | மார்ச்-1979 |
| 13. நோபல் பரிசு (சமாதானம்) | ஒக்டோபர்-1979 |
| 14. பாரத ரத்னா (இந்திய உயர் விருது) | 1980 |
| 15. யுனெஸ்கோ சமாதான கல்விப் பரிசு | -1992 |

தொகுப்பு: டி.எஞ்சலின், கொட்டாஞ்சேனை.



படிப்பகம்

www.padippakam.com

# இரவு 24

# உடைந்த இரவு

மைத்ரேயி சொன்னாள்:

"பாஸ்கர்...! யாருக்கும் தெரியாமே இவ்வளவு தூரம் பிரச்சனைகளைக் கடந்து வந்துட்டோம். இனியும் அதே மாதிரி கடந்துட்டா பரவாயில்லை."

"இதோ பார் மைத்ரேயி..! உன்னையும் என்னையும் சந்தேகிக்க யாருக்கும் எந்த முகாந்திரமும் இல்லை. நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காமே ஹாஸ்பிடலுக்குப் போய் இந்த சயனோ–கார்பனை வெச்சு உன் புருஷனோட கதையை முடி. அதுக்கப்புறம் ஆறுமாசமோ ஒரு வருஷமோ கழிச்சு நாம ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்...."

### சென்றவாரம்

மைத்ரேயி கம்பெனியிலிருந்து கிளம்பி காலேஜ்ரோடு பூங்காவிற்கு வந்துசேர்கிறாள். காத்திருந்த பாஸ்கரைக் காருக்குள் ஏற்றுகிறாள். ஆபத்திலிருந்து தப்பிவிட்ட தினேஷைக் கொல்வதற்குத் தன்னிடம் திட்டமிருப்பதாகக் கூறும் பாஸ்கர், பாண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து சயனோ–கார்பன் என்கின்ற மெல்லக் கொல்லும் வஸ்து அடைக்கப்பட்ட கண்ணாடிக் குப்பியை வெளியே எடுக்கிறான்.

தினேஷ் படுத்திருக்கும் கட்டிலுக்குக் கீழே குப்பியைத் திறந்து, நூலால் கட்டித் தொங்கவிட்டால் சயனோ–கார்பன் காற்றில் மெல்லப் பரவி, மூன்று மணிநேரத்தினுள் மூச்சுத்திணறி இருதய அடைப்பு ஏற்பட்டு இறந்துவிடுவான். சயனோ–கார்பனும் தடயமின்றி வியர்வையுடன் வெளியேறிவிடும் என்கிறான் பாஸ்கர்.

மைத்ரேயி சம்மதிக்கிறாள். கம்பெனிக்குப் பொலிஸ் விசாரிக்க வந்த விடயத்தை விபரிக்க; கச்சிதமாக பட்டாபியின் உடலை டிஸ்போஸ் பண்ணிவிட்டதாக பாஸ்கர் கூறுகிறான்.

**இனி...**

மைத்ரேயி தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள்.

"நேரமாச்சு... நான் கிளம்பட்டுமா?"

"மறுபடியும் நாம எப்ப மீட் பண்ணலாம்?"

"நீங்க ஃபோன் பண்ணுங்க பாஸ்கர்... நான் வந்துடறேன்."

"உன்கிட்ட இருக்கிற இந்த சயனோ–கார்பன் பத்திரம். பி கேர்புல்... அதை ஓப்பன் பண்ணிடாமே இருக்கணும்."

"கவலைப்படாதீங்க பாஸ்கர்... ஐ.... வில் டேக் கேர்."

பாஸ்கர் காரினின்றும் இறங்கிக் கொள்ள மைத்ரேயி இக்னீஷியனை உசுப்பி காரை நகர்த்தினாள்.

போக்குவரத்தில் காரை விரட்டி சிக்னல்களில் நின்று நின்று நிமிஷங்களைக் கரைத்து ஹாஸ்பிடல் வந்து சேர்ந்தபோது இரவு எட்டுமணி.

வையாபுரி மாமாவும், அத்தையும் தினேஷுக்குப் பக்கத்தில் இருந்தார்கள். அவளைப் பார்த்ததும் அத்தை கேட்டாள்.

"எங்கேம்மா போயிட்டே...? தினேஷ் உன்னைக் கேட்டுக்கிட்டே இருந்தான்."

"நங்கநல்லூர் அனுமார் கோயிலுக்குப் போய் அவர் பேர்ல ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன்..."

அத்தை மலர்ந்தாள்.

"அப்படியா....! ரொம்ப சந்தோஷம்... கொண்டு வந்த பிரசாதத்தை எடுத்து தினேஷோட நெத்தியில வெச்சுடம்மா... நங்கநல்லூர் ஆஞ்சநேயர் சக்தி வாய்ந்தவர். தினேஷை சீக்கிரமே எழுந்து நடக்க வெச்சிடுவார்."

மைத்ரேயி திகைத்தாள்.

"பிரசாதமா....?"

"ஆமாடியம்மா...! அர்ச்சனை பண்ணியிருந்தா பட்டர் பிரசாதம் கொடுத்திருப்பாரே...?"

"ஆ... ஆமா... கொடுத்தார்...."

"அது எங்கே...?"

"அய்யய்யோ...! அங்கேயே மறந்து வெச்சுட்டு வந்துட்டேன் போலிருக்கே..." போலியாய் கையை உதறிக் கொண்டு புலம்பினாள் மைத்ரேயி...

"என்னடியம்மா நீ கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணியிருக்கே... ஞாபகமா பிரசாதம் கொண்டு வரவேண்டாமா?"

வையாபுரி குறுக்கிட்டார்,

"பிரசாதம் முக்கியமில்லை. மைத்ரேயி கோயிலுக்குப் போய்ட்டு வந்ததே போதும்..."

மைத்ரேயி ஒரு நிம்மதி பெருமூச்சோடு தினேஷுக்கு பக்கத்தில் வந்தாள்.

"என்னங்க...?"

"அவனை எழுப்பாதேம்மா... தூங்கறதுக்காக கொஞ்ச நேரத்துக்கு முந்தி தான் டாக்டர் ஒரு இஞ்செக்ஷன போட்டுட்டு போனார்."

"டாக்டர் வேற ஏதாவது சொன்னாரா மாமா?"

"பயப்பட இனி எதுவும் இல்லைன்னு சொன்னாரம்மா. ஒரு வாரம் பத்து நாள்ல டிஸ்சார்ஜாகி வீட்டுக்கு போயிடலாம்னு சொன்னார்."

"நீங்க சாப்பிட்டீங்களா....?"

"இல்லேம்மா..."

"நீங்களும் அத்தையும் வீட்டுக்கு கிளம்பி போங்க மாமா. வேலைக்காரியை சமையல் பண்ணச் சொல்லியிருக்கிறேன். போய் சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க..."

"நீ...?"

"நான் இங்கே பத்துமணி வரைக்கும் இருந்துட்டு அப்புறமா வீட்டுக்கு வர்றேன்...."

"ராத்திரியில இங்கே யாரும் இருக்க வேண்டாமா?"

"வேண்டாம்னு டாக்டர் சாயந்தரமே சொல்லிட்டார். நர்ஸ் கேர்ல் மட்டும் இருந்தா போதுமாம்."

வையாபுரி மாமாவும் அத்தையும் எழுந்தார்கள். "அப்ப நாங்க கிளம்பறோம்.... நீ பத்து மணி வரைக்கும் இருந்துட்டு வீட்டுக்கு வந்துடறியாம்மா....?"

"ம்...."

மைத்ரேயி தலையாட்ட இருவரும் கிளம்பினார்கள். ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டே மைத்ரேயி தினேஷின் முகத்தைப் பார்த்தாள். அவன் இஞ்செக்ஷனின் உதவியோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது ஸ்பஷ்டமாய் புரிந்தது.

தன் கையில் வைத்திருந்த வானிடி பேக்கை மெல்லத் திறந்து உள்ளே இருந்த சயனோ கார்பன் பாட்டிலைப் பார்த்தாள்.

பத்துமணிக்கு இங்கிருந்து புறப்பட்டு போகும் போது இதை கட்டிலுக்கு கீழே இருக்கும் குறுக்குக் கம்பியில் கட்டி விட்டால் போதும்.

அறைக்கு வெளியே யாரோ வரும் சத்தம் கேட்டு சட்டென்று வானிடி பேக்கை மூடினாள்.

பார்வையை உயர்த்தினாள்.

ஆக்ஸிடெண்ட் சம்பந்தப்பட்ட கேஸை

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

கவனித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன்.

எழுந்தாள்.

"வாங்க... இன்ஸ்பெக்டர்..."

அவர் உள்ளே வந்தார்.

"மிஸஸ் மைத்ரேயி! உங்க கணவர் வந்த டாக்ஸி மேல லாரி மோதி இந்த விபத்து ஏற்பட்டிருக்கு. லாரி ஓனர் மேல நீங்க நஷ்டஈடு கேட்டு கேஸ் போடற எண்ணம் உண்டா?"

"சர்ட்டன்லி..."

"அது சம்பந்தமா லாயரை கலந்து பேசிட்டீங்களா?"

"இல்லை... இனிமேத்தான் பேசணும்."

"அப்படி நீங்க லாயர் கிட்ட பேசும்போது அவரை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க..."

"எதுக்கு..?"

"பொலிஸும் இந்த கேஸை கோர்ட்டுக்கு கொண்டு போய் லாரி ட்ரைவருக்கு தண்டனை வாங்கித் தர விரும்புது. நீங்களும் நஷ்டஈடு கேட்டு கோர்ட்டுக்கு போகப் போறீங்க... ஒரே கேஸ் ரெண்டு பேர் மூலமா கோர்ட்டுக்கு போகும்போது கேஸ் ஹிஸ்டரி ஒரே மாதிரி இருக்கணும். இல்லேன்னா கோர்ட்ல கேஸ் நிக்காது."

"கவலைப்படாதீங்க... நான் என்னோட லாயரை உங்க கிட்ட அனுப்பி வைக்கிறேன். நீங்க டிஸ்கஸ் பண்ணிக்கலாம்..."

"தேங்யூ..! இந்த ஃபாரங்களில் கொஞ்சம் கையெழுத்தைப்போட்டு விடுங்கள்...".

"எதுக்கு...?"

"இதெல்லாம்... ஆக்ஸிடெண்ட் எப்படி நடந்ததுங்கிறதுக்கான ஸ்டேட்மெண்ட்ஸ். நியாயப்படி உங்க கணவர்தான் கையெழுத்துப் போடணும். அவர் இப்போ கையெழுத்துப் போடக் கூடிய நிலைமையில் இல்லாததால அவர் சார்பா நீங்க கையெழுத்தைப் போடறீங்க... தட்ஸ் ஆல்..."

இன்ஸ்பெக்டர் கையில் வைத்திருந்த ஸ்டேட்மெண்ட் காப்பிகளை நீட்ட மைத்ரேயி வாங்கி கையெழுத்துக்களைப் போட்டுக் கொடுத்தாள்.

"தேங்யூ! மிஸஸ் மைத்ரேயி...."

வாங்கிக் கொண்டு நகர்ந்தார் இன்ஸ்பெக்டர்.

***

ராத்திரி ஒன்பதேமுக்கால் மணிக்கு மைத்ரேயி தன் வானிடி பேக்கில் இருந்த சயனோ கார்பன் இருந்த கண்ணாடிக் குப்பியை வெளியே எடுத்து வில்லையின் கழுத்துக்கு ஒரு சிறிய நூலைக் கட்டி கட்டிலுக்குக் கீழே குனிந்து குறுக்குக் கம்பியில் கட்டிவிட்டு பாட்டிலை எடுத்து பைக்குள் போட்டுக் கொண்டாள்.

பின் எழுந்து நர்ஸை அழைப்பதற்கான காலிங் பெல்லைத் தொட்டு அழுத்த அது வீறிட்டது.

சில விநாடிகளில் நர்ஸ் வந்தாள்.

மைத்ரேயி சொன்னாள்.

"நான் வீட்டுக்கு கிளம்பறேன்..."

"நீங்க போங்கம்மா... அவரை இனி யாரும் பார்த்துக்க வேண்டியதில்லை. அவருக்கு இப்போ போட்டிருக்கிற இஞ்செக்ஷன் காலை ஆறு மணிவரைக்கும் அவரைத் தூங்க வைக்கும். நாங்களும் அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை வந்து பார்த்துக்குவோம். நீங்க போய்ட்டு நாளைக்கு காலையில வாங்கம்மா..."

மைத்ரேயி நகர்ந்தாள்.

"டாக்டர் ரூம்ல இருக்காரா...?"

"வீட்டுக்கு போய்ட்டாரும்மா..! அவர்கிட்ட ஏதாவது சொல்லணுமா.....?"

"இல்லை... சும்மாதான் கேட்டேன்..." சொல்லிவிட்டு மைத்ரேயி அறையினின்றும் வெளிப்பட்டு வராந்தாவில் நடந்து போர்டிகோவில் நின்றிருந்த காருக்கு வந்தாள்.

இருதயத்துக்குள் இப்போது ஒரு படபடப்பு அரும்பி கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்பட ஆரம்பித்தது.

'பாஸ்கர் சொன்னபடி அந்த 'சயனோ கார்பன்' செயல்பட்டு கணவரின் மூச்சை நிறுத்துமா...?'

'அப்படி நிறுத்தினாலும் அதி டாக்டர்கள் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு துல்லியமாய் அமையுமா...?'

காரை விரட்டும்போதும் சரி... வீடு வந்து சேர்ந்தபோதும் சரி மனசுக்குள் பயத்தின் கனம்.

கதவைத் திறந்துவிட்ட வையாபுரி மாமா கேட்டார்,

"என்னம்மா முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு...? தினேஷுக்கு மறுபடியும் உடல்நிலை சரியில்லாம போயிடுச்சா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை மாமா. அவர் நல்லாத்தான் இருக்கார்.... எனக்குத்தான் பயம்...."

"எதுக்கும்மா பயப்படறே...? தைரியமா இரு. தினேஷுக்கு ஒண்ணும் ஆகாது..."

மைத்ரேயி சோபாவில் போய் உட்கார்ந்தாள்.

"போய் சாப்பிடும்மா."

"வேண்டாம் மாமா. எனக்குப் பசியில்லை. ஒரு தூக்க மாத்திரையைப் போட்டுக்கிட்டு தூங்கப் போறேன். எனக்கு ஏதாவது ஃபோன் வந்தாலும் எழுப்பாதீங்க...

"சரி... நீ போய் படும்மா."

மைத்ரேயி ஹால் கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி பத்தே முக்கால்.

'இந்நேரம் சயனோ கார்பன் காற்றில் கரைந்து தன்னுடைய வேலையை காட்டிக் கொண்டிருக்கும்!'

**(தொடர்ந்து வரும்)**



## வள்ளுவர் சொல்லாத குறள்

### வறுமையால் வந்த பசி

**உழைப்புதனை அறியான் ஊதியமும் ஏதுமிலான்**
**கோழையாவான் வறுமைப் பசியால்.**

தொழில் செய்து பிழைப்பதிலே சலிப்படைந்து வீராப்புக்காக வேலையை விட்டு நின்றான். எத்தனையோ பேர் வேலைக்கு அழைத்தார்கள் அன்று. ஆனால், இப்பொழுது எவனுமே இவன்மேல் அக்கறை காட்டவில்லை. சம்பாதனை இல்லாதவன் எப்படி சம்சாரத்தை வைத்துக் குடும்பம் நடத்த முடியும்? என மனைவி கண்டித்தாள். மக்கள் அழுதனர், மற்றவர்கள் கேலி செய்தனர். அதிகாரம் செய்து கொண்டிருந்தவன் பல நாள் பட்டினி கிடந்து ஒட்டிய கன்னத்துடன், உணர்ச்சியற்ற சிரிப்பும், பயமும் கலந்தபடி, பலரிடம் உதவி கேட்டான். புத்தி சொல்கிறார்களே தவிர, என்னைப் புரிந்துகொள்ள விரும்பாதவர்களிடம் எதைச் சொல்வேன் என்று வேதனைப்படுவான்.

### கவலைகள் வந்த காரணம்

**சம்பாதனை அற்றவர்க்கு சம்சார வாழ்வில்லை**
**விம்முவன் கண்ணீரே விருந்து.**

குடும்ப பொறுப்பேற்றவன், ஏதொரு வருமானமும் இல்லாமல் இருந்தால், கடன்காரன் தொல்லையும், மனைவி மக்களிடம், உறவினர்கள் ஏசும் கடுஞ் சொல்லையும், கேட்டு கேட்டு தற்கொலை செய்து கொள்ளலாமா? அல்லது தனியாக எல்லோரையும் விட்டு ஓடி விடலாமா? என்று கருதும்போது, பிள்ளைகளின் பாசத்தால் பிழைக்கலாம் என்று விரும்பினாலும், ஏதுமில்லாமல் வேதனைப்பட்டுக் கண்ணீர் சிந்தியது, அவன் உலர்ந்த உதட்டை நனைக்கும். அதன் அர்த்தம் அவனுடைய கண்ணீர் தான் வறண்ட நாவிற்கு, அவனுக்கு தெவிட்டாத தேன் விருந்தாயிருந்தது. இன்னொருவரை நம்பி வாழாதே, என்ற உணர்வு அப்போதுதான் பிறந்திருக்கிறது.



## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ரி. நதீஷன்,
வயது: 25
முகவரி: 412, ஜோர்ஜ் ஆர்.டி. சில்வா மாவத்தை, கொழும்பு -13.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ரி. தர்ஷினி,
வயது: 17
முகவரி: 1238, பாலையூற்று, திருகோணமலை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: ஆர். முரளீதரன்,
வயது: 20
முகவரி: P.O. BOX - 5803, MANAMA, BAHRAIN.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். ஹரிஸ்,
வயது: 26
முகவரி: 175, ஜும்மா மஸ்ஜித் மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு-10.
பொழுது போக்கு: கிரிக்கெட்.



பெயர்: எம். அஹ்ஸன்,
வயது: 22
முகவரி: 68, கண்டி வீதி, மாவத்தகம.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ஐ. மஹ்ஜூட்
வயது: 24
முகவரி: P.O.BOX-64509 AL-RIYADH-11546, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: எம். சதாத்,
வயது: 23
முகவரி: நீரோட்டு முனை, வெள்ளை மணல், சீனக்குடா.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். ஷிஹான்,
வயது: 22
முகவரி: 20, புதிய வீடமைப்புத் திட்டம், தில்லையடி, புத்தளம்.
பொழுதுபோக்கு: உதைபந்து.

பெயர்: ஜி. கிருஷ்ணமூர்த்தி,
வயது: 22
முகவரி: 119 1/8, குமார வீதி, கொழும்பு -11.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: றிஸ்வான்,
வயது: 26
முகவரி: 37, கோபியாவத்தை, சிலாபம்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: கே. மதன்,
வயது: 27
முகவரி: BORNEO STR.14, 6045 VXROERMOND, NETHERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட், பாடல்கள்.

பெயர்: எஸ். மோகன்
வயது: 29
முகவரி: யுலிஃபீல்ட் எஸ்டேட், அட்டன்.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.


படிப்பகம்

www.padippakam.com




"என்ன கேட்டீங்க?" என்றாள். ரிசீவரை வைத்து விட்டு,மதுமிதாவின் கூந்தலை பிரஷ் செய்யத் துவங்கினாள் சுமதி.

முனை பிதுங்கிய பால் பாயிண்ட் பேனாவோடு பாலாஜி அவளைப் பார்த்தான். "ஸ்டார்ட் டஸ்டல..."

"கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு செட்டிலாகப் போறேன்னு சொல்லியிருக்கேன். அதானே?"

"அதைப் பத்தித்தான் கேக்கிறேன். கொஞ்சம் விபரமா சொல்ல முடியுமா, ப்ளீஸ்."

"என்ன விபரம் சொல்லணும்?"

"ஏன் திடீர்னு கல்யாணம் பண்ணிக்கிற ஐடியா?"

"எனக்கு வயசு இருபத்து நாலு. எண்பது படம் முடிச்சாச்சு. திகட்டத் திகட்டப் புகழ் பார்த்தாச்சு. பல அவார்டுகள் வாங்கி என் திறமையை நிரூபிச்சாச்சு. இந்த இன்டஸ்ட்ரில இன்னும் நான் என்ன சாதிக்கணும், சொல்லுங்க?"

"ஆறு மாசம் முன்னாடி நானே எடுத்த ஒரு பேட்டியில் அடுத்து இந்தில முன்னணி நட்சத்திரமா வர்றதுதான் என் லட்சியம்னு நீங்க சொன்னீங்க மதுமிதா?"

"ஆமாம், சொன்னேன்."

"அந்த லட்சியம் இன்னும் நிறைவேறலையே?"

"அதாலே எனக்கு ஏமாற்றம் கிடையாதுங்க."

"சரி, எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?"

"சீக்கிரத்துல."

"சீக்கிரம்னா.... இந்த வருஷத்துக்குள்ளே இருக்குமா?"

"இருக்கலாம்."

"கல்யாணத்துக்கப்புறம் தொடர்ந்து நடிப்பீங்களா?"

"ஒப்புக்கிட்ட படங்கள் எல்லாம் முடியறவரைக்கும் நடிப்பேன்."

"அதுக்கப்புறம்?"

"கண்டிப்பா நடிக்க மாட்டேன்."

"இந்த முடிவுக்கு சினிமா மேலே ஏற்பட்ட சலிப்புத்தான் காரணமா?"

"இல்லை. குடும்ப வாழ்க்கை மேலே ஏற்பட்ட ஆர்வம்தான் காரணம்."

"கல்யாணத்துக்கப்புறம் உங்க திட்டம் என்ன?"

"குழந்தை பெத்துப்பேன். ஒரு பத்திரிகை நடத்தணும்னு திட்டம் இருக்கு."

"சினிமா பத்திரிகையா?"

"இல்லை. கவிதைகளுக்கு முக்கியத்துவம் தர்ற பத்திரிகையா அது இருக்கும்."

"நீங்க சொல்றது வித்தியாசமா இருக்கு. வழக்கமா இந்தக் கேள்விகளுக்கு எல்லாரும்... சினிமா தியேட்டர் வாங்குவேன், ஹோட்டல் கட்டுவேன், பியூட்டி பார்லர் நடத்துவேன்னு இந்த மாதிரித்தான் சொல்வாங்க."

"எனக்கு கவிதைகள் மேல எப்பவும் ஆர்வம் உண்டு."

"நீங்க கவிதை எழுதுவீங்களா?"

"எழுதுவேன்!"

"ஒரு கவிதை தர்றீங்களா, இந்தப் பேட்டியோட பாக்ஸ் மேட்டர்ல போட்டுடலாம்."

"வேணாம்! நான் நடத்தப்போற பத்திரிகைலதான் என் கவிதைகளை வெளியிடறதா இருக்கேன். ஒரு நடிகையோட சிந்தனைகளுக்கு நேர்மையான அங்கீகாரம் கிடைக்காது. 'இவ என்ன சொல்றது'ன்னு அலட்சியப்படுத்துவாங்க."

"சரி. இப்ப முக்கியமான கேள்விக்கு வந்துடறேன். யார் அந்த அதிஷ்டசாலி?"

"நிச்சயமா நான் இரகசிய கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை. இண்டஸ்ட்ரில அத்தனை பேரையும் இன்வைட் பண்ணித்தான் கல்யாணம் பண்ணிக்குவேன். உங்களுக்கும் கண்டிப்பா பத்திரிகை உண்டு. பாலாஜி சார், கொஞ்சம் வெயிட் பண்ணுங்களேன்!"

"எல்லாம் சொல்லிட்டீங்க. அது மட்டும் என்ன இரகசியம்?"

"ஒரு சஸ்பென்ஸ் இருக்கட்டுமே!"

"அவர் இண்டஸ்ட்ரில உள்ளவரா இல்லை யாராச்சும் தொழிலதிபரா?"

மதுமிதா மறுப்பாகத் தலையசைத்துச் சிரித்தாள்.

"ம்கூம்... அதைபபத்தி எதுவும் சொல்றதா இல்லை!"

"உங்கம்மா சம்மதிச்சுட்டாங்களா?"

"சம்மதிச்சுடுவாங்க."

"அப்படீன்னா, இப்போதைக்கு இதை எதிர்க்கிறாங்களா?"

"ரெண்டே ரெண்டு கேள்வின்னு சொல்லிட்டு எத்தனை கேள்வி கேக்கறீங்க பார்த்தீங்களா? நீங்க சொன்ன அஞ்சி நிமிஷம் எப்பவோ முடிஞ்சு போச்சு பாலாஜி."

"சரி, இதோ புறப்படுறேன். இன்னும் ஒரே ஒரு கேள்வி!"

"என்ன?"

"நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறவர் ஏற்கனவே கல்யாணம் ஆனவரா?"

"பார்த்தீங்களா, இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது!"

"சில பேர் அந்த மாதிரி முடிவெடுத்திருக்கிறதாலதான் அந்தக் கேள்வி கேட்டேன்."

"அது அவங்கவங்க சூழ்நிலை. எல்லோருமே அந்த மாதிரித்தான் முடிவெடுத்திருக்காங்களா? சரி, போதும்."

பாலாஜி பேனாவை பாக்கெட்டில் குத்திக் கொண்டு எழுந்தான். "தேங்க் யூ மதுமிதா"

அவன் வெளியேறிய பிறகு சுமதி, "நீங்க ஷாட்ல இருக்கிறப்ப என்னைத் தனியாகக்கூப்பிட்டு விசாரிச்சாருங்க மேட்ம்." என்றாள்.

"என்ன கேட்டாரு?"

"நீங்க யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்கன்னு கேட்டாரு."



"நீ என்ன சொன்னே?"

"அதைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாதுங்க சார்னு சொன்னேன்."

"சரி யார் கேட்டாலும் அப்படியே சொல்லு."

"சரிங்க."

"நிஜமா உனக்கு அதைப்பத்தி ஏதாவது தெரியுமா?"

"தெரியாதுங்க."

கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்த அசிஸ்டெண்ட் டைரக்டர், "மேடம், ஷாட் ரெடி!" என்றதும், மதுமிதா எழுந்தாள்.

●●●

துர்க்கா கொண்டையில் வெள்ளி ஊசிகளைச் செருகிக் கொண்டாள். பூச்சரம் எடுத்து அரை வட்டமாக கொண்டைக்கு மேல் வைத்துக் கொண்டாள்.

லிப்ஸ்டிக் திருகி பிசிறியடிக்காமல் தடவிக்கொண்டாள். பட்டுப்புடவையின் மடிப்புக்களை நீவி விட்டுக்கொண்டாள். செண்ட் எடுத்துப் பீய்ச்சிக் கொண்டு ஒரு வாசனைத் தேராக அசைந்து அசைந்து அறையை விட்டு வெளியே வந்தாள்.

துர்க்கா எழுபதுகளில் தமிழ்த் திரையுலகைக் கலக்கிய கவர்ச்சிப்புயல்! வில்லனால் கற்பழிக்கப்படும் கதாநாயகனின் தங்கையாக அறிமுகம். அந்தக் கற்பழிப்புக் காட்சி மக்களுக்கு இரக்கம் ஏற்படுத்தாமல் கிறக்கம் ஏற்படுத்தும் விதமாக அமைந்து போனதால்... 'அவசர அவசரமாக எல்லாப் படங்களிலும் தலா ஒரு கற்பழிப்புக் காட்சி கதையில் சேர்க்கப்பட்டு "கூப்பிடு காவ்யாவை" என்றார்கள். (காவ்யா துர்க்காவின் சினிமாப் பெயர்.)

ஒரு கட்டத்தில், "என்ன சார் , கற்பழிப்பு காட்சிக்கு மட்டும் என்னைக் கூப்புடறீங்க?" என்று அலுத்துக் கொண்டதில், ஒரு படத்தில் இரண்டாம் கதாநாயகியாக்கி நீச்சல் குளத்தில் இரண்டு பீஸ் உடையுடன் இறக்கி ஒரு பாட்டும் கொடுத்ததில்... காவ்யா கனவுக் கன்னியானாள்.

பிறகு கிளாமர் கதாநாயகி என்றால் காவ்யா தான் என்றானாள். அவள் உடல் கவர்ச்சியை விதவிதமாக வெளிப்படுத்துவது எப்படி என்று நட்சத்திர ஹொட்டல்களில் அறையெடுத்து,மட்டன் சாப்பிட்டுக் கொண்டு மண்டையை உடைத்துக் கொண்டார்கள்.

ஒரு கட்டத்தில் எந்த சினிமா பத்திரிகையை எடுத்தாலும் அதன் மையப் பக்க 'ப்ளோ-அப்'பில் காவ்யாதான். காவ்யாவை புகைப்படம் எடுப்பதென்றால் போட்டோகிராஃபர்களுக்கு குஷி. முகம் சுளிக்காத ஒத்துழைப்பு.

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"அப்படியே லேசா குனிஞ்சா நல்லாயிருக்கும்."

"அந்த முதல் பட்டனை மட்டும் கொஞ்சம்...."

"ஒரு டவல் மட்டும் கட்டிக்கிட்டு வர முடியுமா?"

"இன்னும் கொஞ்சம் லோ-ஹிப்புல"

காவ்யாவின் படம் போட்டு பீடி விற்றார்கள். சாறி விற்றார்கள். குளிர் பானங்கள் விற்றார்கள். காவ்யா விளம்பரத்திற்கு போஸ் கொடுத்ததில், ஒரு மதுக் கம்பனியின் விற்பனைக்கோடு செங்குத்தாய் எகிறியது.

நகைக்கடைகளும், துணிக்கடைகளும் திறந்து வைத்தாள் காவ்யா. நட்சத்திர இரவு நிகழ்ச்சிகளில், காவ்யா மேடைக்கு வந்த போது, கை தட்டல்களும், விசில்களும் அடங்க ஐந்து நிமிடங்களாயின. ஒரு கிரிக்கெட் நிகழ்ச்சியில் காவ்யா உபயோகித்த கிரிக்கெட் பேட்டை ஒரு இலட்சத்துப் பத்தாயிரத்துக்கு ஏலத்தில் விட்டார்கள்.

தமிழகத்தின் தினசரி வாழ்க்கையில் காவ்யா தவிர்க்க முடியாத ஒன்றாக எங்கும் குறுக்கிட்டாள். புத்தகங்களில் கட்-அவுட்களில் விளம்பரங்களில்... போஸ்டர்களில்.... செய்தித்தாள்களில்..... ரேடியோவின் சிறப்புத் தேன் கிண்ணங்களில்... தொலைக்காட்சிப் பேட்டிகளில்...

மஞ்சள் வெளிச்சத்தின் வருடலில் கம்பீரமாகப் பவனி வந்து கொண்டிருந்த காவ்யாவின் புகழ், இரண்டு நிகழ்ச்சிகளில் தொபுக்கடீர் என்று கவிழ்ந்தது.

ஒன்று: காவ்யாவின் தற்கொலை முயற்சி!

செய்தித்தாள்களில் படித்து, இரசிகர்கள் துடித்துப் போனார்கள். சிகிச்சையளிக்கப்பட்ட ஆஸ்பத்திரி வாசலில் ஒரு ராத்திரி முழுக்க ஆயிரக்கணக்கில் கலையாமல் காத்திருந்தார்கள்.

காப்பாற்றப்பட்ட காவ்யா பிரஸ்மீட்டில், "காதலும் இல்லை, அதில் தோல்வியும் இல்லை. ரொம்ப டயர்டா இருந்தா தூக்க மாத்திரை போட்டுக்கிட்டுத் தூங்குவேன். நேத்து நாலு மாத்திரையா போட்டுக்கிட்டேன். வீட்ல இருந்தவங்க காபரா பண்ணிட்டாங்க..." என்றாள்.

ஆனால், அடுத்த வாரமே செய்தித்தாள்களில் 'காவ்யா இரகசிய திருமணம்!' என்ற தலைப்புச் செய்தி, அவள் பேட்டியில் சொன்னதெல்லாம் பொய் என்று விளம்பரப்படுத்தின.

மறுபடி பத்திரிகையாளர்களை அழைத்து விருந்து கொடுத்து, கோட்சூட்டில் இருந்தவனை அறிமுகப்படுத்தினாள் காவ்யா.

"இவர்தான் என் கணவர். ராகேஷ், தேயிலை ஏற்றுமதி பண்றார். இரகசியமா காதலிச்சோம். அவர் வீட்ல எதிர்ப்பு இருந்தது. அதனால யாருக்கும் சொல்லாம இரகசியமா கல்யாணம் செய்துகிட்டோம். இனிமே நான் நடிக்கப்போறதில்லை."

அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காவ்யாவை மறந்து போனார்கள். பத்திரிகைக்காரர்கள் மட்டும் அவ்வப்போது, 'காவ்யா' தாயானார். 'பெண் குழந்தை' என்றும்... 'இதுதான் காவ்யாவின் குழந்தை' என்றும் செய்திகள் எழுதின. காவ்யாவாகிய துர்க்கா- மதுமிதா, இனியா இவர்களின் தாயாகிய அவள், கீழே இறங்கி ஹாலுக்கு வந்தபோது பீடாவை குதப்பிக்கொண்டிருந்த ஈஸ்வர் அவளிடம் ரிஸீவரை நீட்டியபடி,

"சினிமா நிருபர் பாலாஜியாம். உன்கிட்ட பேசணுமாம்." என்றார்.

"ஹலோ துர்க்கா பேசுகிறேன்."

"வணக்கம்மா... மதுமிதா கல்யாணம் பண்ணிக்கப் போறதைப்பத்தி விரிவா எனக்குப் பேட்டி கொடுத்தாங்க. அதைப் பத்தி உங்க கருத்து என்னம்மா?"

"அதெல்லாம் சும்மா விளையாட்டுக்குச் சொல்லிட்டிருக்கா. அவளுக்குக் கல்யாணம் எதுவும் நடக்கப்போறதில்லை. வெச்சிடுங்க." என்றாள், கடுமையாக துர்க்கா.

(தொடரும்)

> "சென்சார் போர்டின் தணிக்கைக் குழு படஅதிபர்களை அழைத்து, எது ஆபாசம் என்று ஒரு பட்டியல் கொடுத்தால் பரவாயில்லை. ஒரு படத்தில் அனுமதிக்கப்படாத காட்சிகள், வேறு ஒரு படத்தில் அனுமதிக்கப்படுவது எவ்விதமென்று புரியாமல் இருக்கிறது."
>
> எஸ்.வி. சகஸ்கரநாமம்- ஒரு பேட்டியில் 'கலை'- மார்ச் 1949 இதழில்.

## எப்படி?

"என்னங்க... உங்களைத் தான்... மணி பதினொன்று ஆயிடுச்சு.. என்ன அதுக்குள்ள தூக்கம்...?"

"என் னடி.. என்னை கொஞ்சம் நிம்மதியா தூங்க விடமாட்டேங்கிற...?"

"பகல்லே நீங்க ஆபிஸ் போயிடுறீங்க... இப்போ குழந்தைகள் முழிச்சிருந்தா உங்களை நான் தொந்தரவு செய்வேன்களா? எதுக்காக எழுப்புகிறேன் என்று ஒன்றும் தெரியாத மாதிரி..."



"ஏண்டி.... என்னை ஒரு நாள் விட்டு ஒருநாள் ராத்திரியிலே பாடாய் படுத்துறே...? நானோ ஆபிசில் ஓவர்டைம் பார்த்துவிட்டு, களைப்பால் முடியாம படுத்திருக்கேன்... அதுலே நீ வேறே..."

"ஏங்க.. நான் சொல்றது உங்களுக்கு புரியலையா...? யாராவது வந்துடப் போறாங்க... இன்னைக்கு விட்டா அப்புறம் ஒருநாள் இதுக்காக சாத்திருக்கணும்."

"இப்போ... தள்ளிபோறியா, இல்லையா...? எப்போ பார்த்தாலும் ராத்திரியிலே உன்கிட்டே இதே வேதனையா போயிடுச்சு..."

"என்னங்க... ப்ளீஸ்- இன்னைக்கு ஒருநாள் மட்டுங்க.. விடிஞ்சா வெள்ளிக்கிழமைங்க... நான் வேறே விரதம்..."

"நான்தான் சொல்லிகிட்டே இருக்கேன் இல்லே. உடம்பு, கை, கால் எல்லாம் வலிக்குதுன்னு.. என்னால இன்னைக்கு முடியாது..."

"நீங்க பேசறது உங்களுக்கே நல்லாயிருக்கா.. ஆம்பிளையா, லட்சணமா கண்ணை திறந்து என்னை பாருங்க...!"

"மத்த வீட்டு ஆம்பிளைங்களை பத்தி என் கிட்டே பேசாதே... அவங்க என்ன வேண்டுமானாலும், எப்போ வேண்டுமானாலும் செய்வாங்க... இத்தனை நாளா நான் மட்டும் செய்யலையா...? இன்னைக்கு என்னால முடியலே... நீயும் தூங்கு..."

**சுந்திரவடிவேல்**

"எப்படிங்க தூங்க மனசு வரும்? தனியா என்னாலே முடியும்னா உங்களை எழுப்புவேன்களா...?"

"சீ.. சீ... நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டே. நீ நினைச்சதை சாதிக்கிற வரைக்கும் உனக்கும் தூக்கம் வராது. என்னையும் தூங்க விடமாட்டே... உன்னைச் சொல்லி குற்றம் இல்லை. நேரம் கெட்ட நேரத்திலே, தண்ணிய கட்பண்ணுறதும் தண்ணி விடறதும் போதும். நீ தண்ணியை அடித்து எடுக்க என் பிராணனை வாங்கறதும் போதும்." என்று சொல்லிக் கொண்டே எழுந்து, லுங்கியை சரி செய்து கொண்டு தெரு குழாயடிக்குச் சென்றான்.

## நைட் ஷிப்ட்

"லட்சுமி நீ என்ன சமாதானம் சொன்னாலும் இனிமே அத நான் நம்பமாட்டேன்... நான் இல்லாதபோது என் தம்பி ரமேஷ் நம்ம வீட்டுக்கு வந்தது முதல் தப்பு. அவனும் நீயும் சேர்ந்து அந்த 'தகாத செயலை' செய்தது இரண்டாவது தப்பு... மூணுநாள் ஆகியும் அத என்கிட்ட சொல்லாமயிருந்தது... மூணாவது தப்பு!" வார்த்தை நெருப்பால் மனைவி மாலதியைச் சுட்டுக் கொண்டிருந்தான் பார்த்தசாரதி.

"தப்புதாங்க... என்னை மன்னிச்சிடுங்க..."காலைப் பிடித்துக் கதறினாள்.

"மாலதி... என்கிட்ட பொய் சொல்லமாட்டே... உன்கிட்ட யாரும் நெருங்க முடியாது... என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையிலே தான் நான் தினந்தோறும் 'நைட் ஷிப்ட்' டூட்டிக்குப் போறேன்... இப்படியொரு தவறை செஞ்சுட்டு. அது நம்ம வேலைக்காரி மூலமா நான் தெரிஞ்சுகிட்டு, கேக்கற அளவுக்கு நம்ம வாழ்க்கை மோசமாயிடுச்சு இல்ல...?"

"இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னிச்சுடுங்க... ஏதோ உணர்ச்சி வசத்துல இப்படி செஞ்சுட்டேன்!"

"என்னது! மன்னிக்கக் கூடிய தப்பா பண்ணி இருக்க...?"

"என்னுடைய தவறுக்கு நீங்களும் ஒரு காரணம்: அது தெரியுமா உங்களுக்கு?" மாலதி இப்படி சொல்லியதைக் கேட்டு திடுக்கிட்டான் பார்த்தசாரதி.



**எல். ரவி**

"நீ செய்த இழிவான செயலுக்கு நான் எந்த விதத்திலே காரணமாவேன்?"

"பின்னே என்னங்க... கல்யாணம் ஆகி நாலு வருஷம் ஆவுது நமக்கு! இன்னும் குழந்தை பிறக்கலையேன்னு உங்க அம்மா என்னை தினமும் திட்டுறாங்க... இதுல 'மலடி'ங்கிற பட்டம் வேற... எத்தனை ராத்திரி கண்ணீர் சிந்தி மவுனமா அழுதிருப்பேன் தெரியுமா உங்களுக்கு? அதெல்லாம் புரிஞ்சுக்கக் கூடிய தன்மையும், ஆண்மையும் உங்கக்கிட்ட ஏதுங்க?" கண்ணீருடன் கணவனை நோக்கினாள் மாலதி.

"குழந்தை இல்லங்கற நிலையை வச்சுக்கிட்டு எந்தத் தப்பும் செய்து விடறதா?"

"இது தப்பு இல்லன்னு எனக்கு தோணிச்சு! அதான்..." மாலதி பேச்சை முடிக்கும் முன், "அதான்... நான் இல்லாத சமயத்திலே அவன் கூட சேர்ந்து இந்த தப்பை செய்திருக்கே போலிருக்கு.." பார்த்தசாரதி மீண்டும் கத்த!...

"உள்ளே வரலாமா?" வெளியில் இருந்து வந்த குரலைக் கேட்டு மாலதியும், பார்த்தசாரதியும் வாசல் பக்கம் திரும்பினர்.

அங்கு, பரிதாபமாக நின்று கொண்டிருந்தான் ரமேஷ்.

"என்னை மன்னிச்சிடுங்க அண்ணா... உங்க வாசலுக்கு வந்தது என்னோட தப்புத் தான்! நமக்குள்ள பாகப்பிரிவினை நடந்து ரெண்டு வருஷம் ஆயிடுச்சு... நான் அடுத்த தெருவிலே குடியிருந்தாலும் என்னோட நினைப்பு எல்லாம் நம்ம வீட்லதான் இருக்குண்ணே! இந்த நாலு வருஷமா குழந்தை இல்லங்கற ஏக்கத்தாலும், அம்மா தினமும் திட்ற திட்டாலும் அண்ணி தற்கொலை முடிவுக்குக் கூட வந்துட்டாங்க... அதனாலதான் போன வாரம் பிறந்த என்னோட ரெட்டைக் குழந்தையிலே, ஒண்ணை எடுத்து வந்து அண்ணிக்கிட்டக் கொடுத்தேன்... நீங்க இவ்வளவு தூரத்துக்கு அண்ணிய திட்டிய பிறகும் குழந்தையை இனிமே நீங்க வச்சுக்க வேண்டாம்... இப்பவே குழந்தையை தூக்கிட்டு வெளியில போயிடறேன்!" ரமேஷ் தன் குழந்தையை தூக்குவதற்குள், குழந்தையை தூக்கி முத்தம் கொடுத்தான் பார்த்தசாரதி.


www.padippakam.com

# தாய்மை

**"அப்போ... இந்தக் குழந்தை.....?" கேள்வியோடு கணவனின் முகம் நோக்கினாள்.**

தனியார் மருத்துவமனைக் கட்டிலில் விஜயா படுத்திருந்தாள். இரவு வயிற்றுவலி கடுமையாக இருந்தபடியால், மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டாள்.

கொஞ்ச நாட்களாகவே அடிக்கடி விஜயாவுக்கு வயிற்றுவலி இருந்து வந்தது. நேற்று கொஞ்சம் கடுமையாகவே இருந்தது. இப்போது வயிற்றுவலியின்றி நீண்ட நேர தூக்கத்தின் பின் கண் விழித்தாள்.



**யாழ். மு. கலை**

அருகில் எவருமில்லை. அவளது கணவன் மூர்த்தியைக் காணாதது அவள் மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. அப்போது தான் உள்ளே வந்த தாதி. "உங்க கணவன் உங்களுக்கு 'லஞ்ச்' எடுத்துவரப் போய் விட்டார்." என குறிப்பறிந்து சொன்னது விஜயாவுக்குச் சிறிது மன அமைதியைக் கொடுத்தது.

அப்போது நேரம் என்ன என்பதை அறிய சுவர்க்கடிகாரத்தைத் தேடியவளது கண்களுக்குள் சுவரில் தொங்கிய மழலை ஒன்றின் படம் சிக்கிக் கொண்டது.

அவளது பார்வை அம்மழலையின் அழகிய தோற்றத்தின் மீது நிலையாகப் பதிந்துவிட்டிருந்தது. பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்க அம்மழலை அவளைத் தூண்டியது.

"அண்ணா...! எங்கை இவ்வளவு நேரமும் போய்ட்டு வாறாய்? அண்ணி உன்னட்ட ஒரு சந்தோசமான செய்தி சொல்ல ஆவலோடை காத்துக்கொண்டிருக்கிறா!" மூர்த்தியின் தங்கை சொன்னாள்.

"என்ன சந்தோசமான செய்தி!?" ஆவலை அடக்க முடியாது கேட்டான்.

"அதை நீங்கள் அண்ணியட்டையே கேட்டுத் தெரிஞ்சுகொள்ளுங்க!" என அவள் சொல்லி முடிப்பதற்கிடையில் தமது அறைக்குள் மூர்த்தி புகுந்துவிட்டான்.

"என்ன விஜயா? சந்தோசமான செய்தி சொல்லக் காத்துக் கொண்டிருக்கிறாயாம்?" ஆவல் ததும்பக் கேட்டான்.

"........"

"என்னுடைய பொறுமையைச் சோதிக்காமல் சொல்லன் விஜயா?" என மீண்டும் கேட்டான்.

எண்ணற்ற சந்தோசக் கீறல்கள் முகத்தில் மின்ன... "நீங்கள் அப்பா ஆகப்போறீங்க," என்று சொல்லிவிட்டுத் தலை குனிந்தாள்.

அப்பா ஆகப்போகிற வேளை எல்லா ஆண்களுக்கும் எழுகின்ற சந்தோசத்தை அவன் முகத்தில் காணவில்லை.

மூர்த்தியிடமிருந்து எதுவித பிரதிபலிப்பும் தோன்றாமையினை உணர்ந்து கொண்ட விஜயா நிமிர்ந்தாள். காரணம் புரியாது விழித்தாள்.

மௌனம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

"என்னங்க! ஒரு மாதிரியா இருக்கிறியள்? நீங்கள் அப்பா ஆகப்போறதிலை உங்களுக்குச் சந்தோசமில்லையா?"

அவனிடமிருந்து பதிலில்லை.

அவனது மௌனம் அவளைப் பயமுறுத்தியது.

"என்னங்க! பேசாமல் இருக்கிறீங்க?" ஆதரவாகக் கேட்டாள்.

"ஒன்றுமில்லை விஜயா," என்ற மூர்த்தி தொடர்ந்தான்.

"நாம என்னுடைய சகோதரிகளுக்கு கல்யாணஞ்செய்து வைத்தபின்தான் கல்யாணஞ் செய்யிறதாக இருந்தம். இல்லையா? ஆனால் விதியின் விளையாட்டால் அவசரமா உன்னை நான் கல்யாணஞ் செய்ய வேண்டி வந்துவிட்டது. தங்கைகளுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கிறதுக்கு இடையிலை எங்களுக்குப் பிள்ளைகள் பிறந்தால் செலவுகள் கூடிவிடும். என்ரை வருமானம் குடும்பத்தைக் கொண்டு செல்லவே போதாம இருக்கும்.குழந்தை ஒன்று நமக்குப் பிறந்தால் இன்னும் கஷ்டமாயிடும். அதனாலை...." வார்த்தை தொண்டைக்குள் சிக்கிக்கொண்டன.

"அப்போ! இந்தக் குழந்தை...?" கேள்வியோடு விஜயா கணவனின் முகம் நோக்கினாள்.

"தங்கச்சியாட்களுக்கு கல்யாணஞ் செய்து வைச்சபின் எத்தனை குழந்தை வேணுமென்றாலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லையா? அதனாலை இப்போதைக்கு குழந்தை பெறுகிற ஆசையை தள்ளிப் போடுவமா?" என மூர்த்தி சொல்லி முடிப்பதற்குள் விஜயாவின் கண்கள் கண்ணீர் மழை பொழிந்தது.

குழந்தைகள் என்றால் உயிரையே கொடுக்கக்கூடிய விஜயாவுக்கு கணவனின் முடிவு பலத்த தாக்கத்தைக் கொடுத்தது.

இருவரின் காதலையும் விஜயா வீட்டார் எதிர்த்தபோது குடும்பக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாது தன்னை மனைவியாக ஏற்ற மூர்த்திக்கு நன்றிக்கடன் செலுத்த ஒரு சந்தர்ப்பங் கிடைத்ததே, என்ற எண்ணத்தில் கணவனின் முடிவுக்கு ஒப்புக் கொண்டாள்.

மூர்த்திக்குக் கீழ் இரு பெண் உடன் பிறப்புக்கள் கல்யாண வயதில் இருந்தனர். அப்பா இறந்துபோக, சகோதரிகளினதும் தாயினதும் பொறுப்பு மூர்த்தியின் தோளுக்கு மாற்றப்பட்டது.

விஜயாவை காதலித்த மூர்த்தி, சகோதரிகளின் திருமணத்தின் பின்தான் தமது திருமணம் என இருவரும் தீர்மானித்து இருந்தனர்.

நினைப்பது நடப்பதில்லையே! அவர்கள் நினைத்ததும் நடக்கவில்லை. விஜயா வீட்டார் பண அந்தஸ்துக் காரணமாக இவர்களது காதலை எதிர்த்து வேறு இடத்தில் விஜயாவை திருமணஞ் செய்ய முடிவு செய்தவேளை, விஜயாவை அவசரமாக திருமணஞ் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

மூர்த்தியும் விஜயாவும் திருமணஞ் செய்து ஆறுவருடங்கள் நகர்ந்து விட்டிருந்தன. நேற்றுத்தான் மூர்த்தியின் கடைசித் தங்கைக்குத் திருமணம் நடந்தது.

"இனியெல்லாம் சுகமே!" என்ற உணர்வு நேற்று அவள் மனதில் எழுந்திருந்தவேளைதான் வயிற்று வலி காரணமாக இங்கு அழைத்து வரப்பட்டாள்.

இப்போது சுவரில் தொங்கிக் கொண்டிருந்த குழந்தையின் அழகையே இரசித்துக் கொண்டிருந்த விஜயாவை உள்ளே வந்த மூர்த்தி அவதானித்தான்.

அருகில் வந்த கணவனை அன்புடன் விஜயா பார்த்தாள்.

"கல்யாணஞ் செய்து இத்தனை வருடங்களும் உன்னுடைய ஆசைகள் எல்லாவற்றையும் எனக்காக துறந்து வாழ்ந்த உனக்கு நான் எப்படி நன்றிக்கடன் செய்யப் போகிறேனோ?" என்ற கணவனின் வாயை தன் கையால் மூடிய விஜயா, "கணவனின் விருப்பத்திற்கு ஒத்துழைச்சு வாழ்கிறத விட, ஒரு பெண்ணுக்கு வேறு என்ன சந்தோசம் இருக்கும்?" எனச் சொன்னாள்.

"மிஸ்டர் மூர்த்தி! உங்களை டொக்டர் கூப்பிடுகிறார்" என தாதி செய்தி சொன்னாள்.

தலைமை வைத்தியரின் அறைக்குள் மூர்த்தி வந்தான்.

"உங்கடை வைஃபுடைய மெடிக்கல் ரிப்போர்ட் வந்திருக்கு. அதைப்பற்றிச் சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன்," என்றவரை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முதல் தடவை அவரைச் சந்தித்தபோது இருந்த பிரகாசத்தை அவர் முகத்தில் இன்று காணவில்லை.

மெடிக்கல் ரிப்போர்ட்டையே சில நிமிடங்கள் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்த வைத்தியர்:

"உங்....க.... மனை...விக்...கு தாய்...மை அடையும் பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. தாய்மை அடைவதைத் தவிர்ப்பதற்கு அவ செய்து கொண்ட நடவடிக்கைகள், ஒரு குழந்தைக்கு தாயாகிற தன்மைக்கான இயலாமையைக் கருப்பைக்கு ஏற்படுத்தி விட்டது." என சொன்னார்.

வைத்தியசாலைக் கட்டடமே இடிந்து அவன் மீது விழுந்தது போலிருந்தது.

தளர்ந்த நடையுடன் மெல்ல மெல்ல மனைவியிடம் வந்து கொண்டிருந்தான்.

# கத்தி

இடுப்பில் சாரம், பழுப்பேறிய சேட், முகத்தில் ஒரு வார வளர்ச்சி.

இரும்பு கடைக்குப் போய் ஒரு நல்ல கத்திவாங்கி வந்திருந்தான். ஒவ்வொரு கடையாக ஏறியும் அவன் எதிர்பார்த்தது மாதிரி இல்லை.

கத்தி சரியாக இருந்தால் கைப்பிடி வலுவாக இல்லை; கைப்பிடி சரியாக இருந்தால் கத்தி வளைந்தது. இரண்டும் சரியாக இருந்தால் நீளம் போதவில்லை.

ஒவ்வொரு கத்தியையும் வாங்கும்போதும் அவனுக்கு அவன்



**பாலாஜி**

மனைவியின் முகம்தான் மனதில் தோன்றியது. அவளுக்கு எது தோது?

உம்.. எப்படி மாறி விட்டாள்? கல்யாணத்தின்போது குனிந்த தலையுடன் அத்தனை சாதுவாக இருந்தவள். இப்போது என்ன பேச்சு பேசுகிறாள்? ஒரு மாதமாக தொணதொணப்பு தாங்கவில்லை. நல்ல கத்தியாக மட்டும் கிடைத்துவிட்டால், அவள் வாயை அடைத்து விடலாம். மூச்சுக் காட்டாமல் செய்து விடலாம்.

கடைசியாக அவன் தேவைக்கு ஏற்றவாறு கத்தி கிடைத்தது. ஆனால், கூர்மை இல்லை. தீட்ட வேண்டும்.

கடைக்காரர் சொன்னார்: "இப்படியே வடக்கே போங்கள், கோயில் மதில் பக்கம் வரிசையாக சாணை தீட்டுபவர்கள் இருப்பார்கள். தீட்டிக் கொண்டால் நன்றாக உழைக்கும்."

கத்தியைத் தீட்டக் கொடுத்தான். கத்தியும் சாணைக் கல்லும் உராய்ந்த போது நெருப்பு சீறியது. இப்படித்தான் அவன் மனைவி பேசுவது எல்லாம் நெருப்புக் கங்குகளாகத்தான் வெளி வருகின்றன.

கத்தி தீட்டப்பட்டது. விரல் நுனியில் லேசாக அழுத்தினாலும் சொட்டு இரத்தம் கொப்பளித்தது.

வீடு திரும்பினான்.

அவள்தான் கதவைத் திறந்தாள்.

"இப்படித்தான் வெளியே போனீங்களா? சே! கொஞ்சமாவது நாகரிகம் தெரிய வேண்டாம்! ஷேவ் பண்ணிக்கிட்டு, நல்ல டிரஸ்சா போட்டுக்கிட்டுப் போனா என்ன? தனக்காவும் தெரியாது, மற்றவங்க சொன்னாலும் பிடிக்காது."

"சரிடி.., எல்லாம் எனக்குத் தெரியும். ஏதாவது பேசினா ஒரே குத்து." கத்தியை உயர்த்தினான்.

கையை அவள் எட்டிப் பிடித்தாள்.

"பசங்க எதிரிலே என்ன விளையாட்டு, கத்தி வாங்கியாச்சு இல்லே. கறிகாய் கூடையிலேருந்து குழம்புக்கும், பொரியலுக்கும் நறுக்கி வையுங்க... நான் போய் குளித்து விட்டு வருகிறேன்!"

அவன் கீழே உட்கார்ந்து வேக வேகமாக நறுக்க ஆரம்பித்தான். இல்லையெனில் குளித்துவிட்டு வந்து மறுபடியும் கத்த ஆரம்பிப்பாள்,

# ஓர் இரவு

**"சரியாக இரவு எட்டு மணியில இருந்து சுபஹ் நாலு மணி வரைக்கும் அடிச்சாங்க...."**

"இப்ப என்னமோ வெடிச்சது தானே.." என்றாள், என்மனைவி. "இந்த சாமத்துல எவன் குண்டு போடப் போறான்.. இது வானம் முழங்குது...!" என்றேன், நான்.

"சரியா... குண்டு வெடிச்ச மாதிரி.. சத்தம்.." 'முரசு'க்குக் கதை எழுதிக் கொண்டிருந்த நான், "இது என்னா சத்தம்... ஒரு நாள் ராவு... எங்கட ஊருக்கு அடிச்சாங்க... அந்த சத்தம் இன்னும் என்ட காதுக்குள்ள கேட்டுக்கிட்டேயிருக்கு..."

ஆரம்பித்தேன்.

கதை கேட்க ஆயத்தமானாள்.

நானும் சொல்லத் தொடங்கினேன்...

"ஒருநாள் இரவு.. ஒரு எட்டு மணி இருக்கும்... நானும், உம்மாவும், தங்கச்சியும் மட்டும்தான் வீட்டுல இருந்தோம்... திடீர்னு கரண்ட் கட்'டாயிடுச்சு... ஊர்முழுக்க ஒரே இருட்டு. எங்க.. எல்லாருக்கும் சரியான பயமா இருந்துச்சு... அப்ப... அந்த நேரத்துல.. வானத்துல ஒரு பெரிய வெளிச்சம்... வந்து.. பெரிசா.. சத்தமா வெடிச்சுது... எங்களுக்கு விளங்கிட்டு... இது அவங்கட வேலைதான்...

ஊருக்குள்ள வந்துட்டாங்க... ஒரு ரெண்டு நிமிஷம்... ஒரே அமைதி... ஒரு சத்தமில்ல... உம்மாவும் தங்கச்சியும் அழுதாங்க.. பயத்துல.. எனக்கும் சரியான பயம்... பள்ளி வாசலுக்குப் போன நானா வரல்லன்னு உம்மா ஒரே ஒப்பாரி...

"நானா எங்க சரி பாதுகாப்பான எடத்துல இருப்பாரு... அவருக்கு ஒண்ணும் நடக்காது. அல்லா இருக்கான்... நாம இப்ப வீட்டுல இருக்கிறது ஆபத்து.. 'செய்லாக் காதர் மாமா' வீட்டு வளவுக்குள்ள



போவம்... 'குஞ்சாக்கா' அன்சார்... எல்லோருமா.. சேர்ந்து அங்க போவம்..." என்றேன்.

"என்ன நித்திரையா... ம்... முழிச்சித்தான் இருக்கியா... சரி- கதையைக் கேளு.. சரியா 'லெபனான்'ல இருந்த மாதிரி இருந்துச்சு... வெடிக்குது... வெடிக்குது... வெடிக்குது... ஒரு கணக்கில்ல...

'குட்டிக்கராச்சி'ல ரவுப் நானா அவங்கட கடை முழுசா... எரிஞ்சிட்டுது... பெரிய கடை... எங்கட 'ஜப்பான் சேரும்' அதுல மௌத்தாகிட்டாரு... இதெல்லாம் அடுத்த நாள் காலையில போய்ப் பார்த்தோம்... சரியா... இரவு எட்டு மணியில இருந்து சுபஹு நாலு மணி வரைக்கும் அடிச்சாங்க... ரோட்டோரமா இருந்த சின்னச் சின்னக் கடைக்கெல்லாம் நெருப்பு வைச்சாங்க... வெளிச்சத்துக்காக... காலையில.. நிறைய மையத்து... நிறைய கடைகள்... எரிஞ்சு போச்சு... நாங்க எல்லாரும் செய்லாக்காதர்ட வளவுக்குள்ளதான் இருந்தோம்... யாரு.. எவரு... ஆளையாள் முகம் தெரியல்ல...

'எல்லோரும் போய் கடல்ல பாய்ங்க'ன்னு நோட்டீஸ் ஒட்டியிருந்தாங்களாம்... சுடச்சுட... வதந்தி... பரவிச்சு... ஒரு மாதிரியா விடிஞ்சுது... ஊராக்கள் எல்லாரும் போய்.. ஊரைப் பார்த்தோம்... நீங்களும் முந்தி டீ.வி.யில பார்த்திருப்பீங்க... எங்கட ஊருக்கு அடிச்ச அடிய.. அந்த வெடிய.. நாங்க எப்படி மறக்க முடியும்? இன்னும் அந்த சத்தம் காதுக்குள்ள தான்...

விடிஞ்சுதான் நானா வந்தாரு.. போஸ்ட் ஒபீஸ் ஒழுங்கைக்குள்ள.. ரபீக்... அவர்... எல்லாரும்.. தரையில... குப்புறப் படுத்துக் கிடந்தாங்களாம்... ம்.. அந்த ராவு முழுக்க நாங்க பட்டபாடு... வைக்காத நேர்த்திக் கடன் இல்ல... 'சேகு நானா'ட வீட்டு ரோட்டுல.. ஜப்பான் சேர்... நல்ல மனுஷன்... சைக்கிள்ல.. இஷாத் தொழுதிட்டுப் போயிருக்காரு.. குடை கீழே விழ... குனிஞ்சு எடுத்திருக்காரு... சுட்டுட்டாங்க... சொல்றாங்க... யாருக்குத் தெரியும்...

**கிண்ணியா அமீரலி – வத்தளை**

முந்தி.. முதன் முதலா.. எங்கட ஊர்ல 'பேங்க்தான்... கொள்ளையடிச்சாங்க... அதுக்குப் பிறகு... தொடங்கின கலவரம் தான்... இப்பவும்... ஒரே பயம்தான்...

ஒருநாள் 'மூதூர்'ல ஒரு சின்னப் பிள்ளை... ஒரு நாலு வயசு இருக்கும்.. ஷெல்லடி பட்டு இடுப்புக்குக் கீழே ரெண்டு காலும்.. இல்லாமப் போயிடுச்சு... ஆசுப்பத்திரியில போட்டிருந்தாங்க... நானும் யூனூஸ் கலீலும் போய்ப் பார்த்தோம்... பெரிய பரிதாபமா இருந்துச்சு.. நான் அழுதுட்டேன்...

அந்தப் பிள்ளை.. அவங்கட உம்மாக் கிட்ட... கேட்குது... "உம்மா... எனக்கு நீங்க நகம் வெட்டி விடுவீங்கதானே... பொறவு.. அது வளர்ந்து வந்துடும்தானே... அது மாதிரி... என்ட காலும் நான் பெரிசா வந்த ஒடனே வளருமாமா...?"

கதையைச் சொல்லி முடித்தேன். மனைவியின் கண்கள் கலங்கி இருந்தன...

# இளம்புயல் சொருபா

புதுசாய் ஃபீல்டுக்கு வந்திருக்கும் சொருபா பதினெட்டு வயது வனப்பில்... செழுமையாக இருந்தாள். முன்னணி ஹீரோயின்களை முதல் ரவுண்டுலேயே ஓரங்கட்டக் கூடிய ஒய்யார அழகு.

பளிங்கு பளிச்.. சிரிப்பு... கேரட் நிற உடல் மினுப்பு. யப்பா... பம்பர் குலுக்கல். வருட முடிவில் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாட இருக்கும் ராஜராஜன் மச்சக்காரர்.



**கிரி**

இந்த வயதிலும் கிழவரிடம் என்ன ஆவல். யப்பா... இளைஞர்களிடம் கூட இந்தக் காலத்தில் இல்லாத இளமைத்துடிப்பு இவரிடம் கொஞ்சம் அதிகமாகவே மிளிர்கிறது. என்ன பாடுபடப் போகிறேனோ?

இந்த வீடு... சின்ன வீடு. ஒரு ஹால்... ஒரு பெட்ரூம்.. அம்மா சமய சந்தர்ப்பம் உணர்ந்து ஒதுங்கிக் கொள்வாள் என்றாலும்...

இந்த பஸ்... ஆட்டோ சப்தமும்.. அக்கம் பக்க ஜனங்களின் சலசலப்பும்... நிம்மதியாய் இருக்க விடுமா? அடிக்கடி நிகழும் 'பவர்கட்' வேறு 'மூட் அவுட்' பண்ணும்...

பொய்ப் பல்லுக்குள் ஜீரா நாக்கு. நேரத்தை விரயம் பண்ணத் தயாரில்லாதவராய், "அப்ப... எப்ப வச்சுக்கலாம்...?" என்றார்.

"உங்க இஷ்டம்..."

"இன்னைக்கே..."

"ம்..."

"இப்போதே..."

"ம்... ம்..." தலை சாய்த்து, ஒயிலாய் சிரிக்க... ஆச்சரியப்பட்டார் ராஜராஜன். தொழிலுக்கு புதுசாய் இருந்தாலும், என்ன துடிப்பாய் இருக்கிறாள்! வேகத்தை பார்த்தால், கண்டிப்பாய் கொஞ்ச நாளில் படு பாப்புலர் ஆகி விடுவாள். இந்த காலத்து இளசுகளுக்கு வயசுக்கு மீறிய வளர்ச்சி.

ஆவி பறக்கும் காபியுடன் சொருபாவின் அம்மா வந்தாள். ஒரு வழியாய் இத் தொழிலில் மகளை புகுத்தி விட்ட நிம்மதி அவளிடம்.

காபி குடித்த ராஜராஜன், "சொரு.. இங்க.. இங்கேயே வச்சுக்கலாமா?" என்றார்.

தயங்கி சொன்னாள்... "இங்க வேணாம் சார்.. லாட்ஜ்ல..."

"ஓ.கே., ஸ்டார் ஓட்டல்ல ரூம் போட்டுப்போம். சீக்கிரம் கிளம்பு...."

என்ன அவசரம். தொந்தி குலுங்க எழுந்தார். ஐந்து நிமிட அலங்காரம் ஒய்யாரம் கூட்டி... யப்பா... தேவதையாய் வந்து நின்றாள் சொருபா.

"உடனே.. அனுப்பணும்னு அவசியம் இல்ல... நீங்க திருப்திப் படுறவரைக்கும் வச்சுக்குங்க..."

அம்மாக்காரி வழி அனுப்பி வைக்க.. கார் காற்றாகி... அந்த மிகப் பெரும் ஓட்டல் முன்பு நின்றது-அறைக்குள் போனதும்-

"உன்கிட்ட ரொம்ப எதிர்பார்க்கிறேன்... சொதப்பிடாதம்மா..."

"டொன்ட் ஓர்ரி... சார்... மசாலாத் தனமே இல்லாத... அற்புதமான கதை பண்ணிடுவோம்... அடுத்த ஆஸ்கார் விருது கண்டிப்பாய் உங்களுக்குத்தான்..."

இளம் கதாசிரியை சொருபா வெகு நம்பிக்கையாய் சொல்ல... கதை டிஸ்கஷனில் நிம்மதியாய் இறங்கினார் முன்னணி சினிமா இயக்குனர் ராஜராஜன்.



படிப்பகம்

www.padippakam.com

# தப்புக்கள் இரண்டு

தருவது ரசிகன்



மன்னனுக்கு ரசனை அதிகம்
மங்கையருடன் சரசமும் அதிகம்!

"முகில் தழுவும் மலைகள்
என்போம், அதுபோல
துகில் தழுவும் மலைகள்
இரண்டு கண் நேரே!"

கண் சிமிட்டினான்
கட்டழகியைச் சீண்டினான்!

"வாரத்தில் ஒரு நாள்தான்
செவ்வாய் உண்டு-உன்
வதனத்தில் தினமும்தான்
செவ்வாய் உண்டு!
நாள்களிலே செவ்வாயும்
சிறந்த நாள்தான்!
நாள் தோறும் உன் செவ்வாய்
சிறந்த தேன்தான்!"

செவ்வாயில்
புன்னகை வழிந்தது!

"நாடாளும் வேந்தருக்கு
நங்கையை ஆளும்
இரகசியமும் தெரிந்திருக்கிறது!"
என்றாள் இளம் மயிலாள்.

"உலகை வெல்வதைவிட
கடினமானது என்ன தெரியுமா?"

"என்ன?" என்றாள்.

"உன்போன்ற அழகியின்
இதயத்தை வெல்வது!"

"ஒஹோ!"

"வெஞ்சமர் களத்திலே
வெற்றிக்கனி பறிப்பது
கொஞ்சமும் கடினமல்ல!"

"வேறென்ன கடினம்?"

"உன் கண் சமர் மத்தியில்
காதல் கனி பறிப்பது!"

"அடடே
புரவலர் எப்போது
புலவர் ஆனீர்கள்?"

"புவியை ஆளும்போது
புரவலன்!
பூவை ஆளும்போது
புலவன்!"

"கற்பனை
மழையெனப் பெய்கிறதே!"

"மோகம் முட்டுகிறது
ஏக்கம் கொட்டுகிறது!"

"பூமிக்குத்தான்
அச்சமாக இருக்கிறது!"

"வெட்டும் மின்னலும்
கொட்டும் இடியும்
பொழியும் மழையும்
பூமிக்கு மகிழ்ச்சிதானே!"

## இலக்கிய நயம்

"இடியால்
பூமி அதிரும்!"

"அதிரும்போது பூமி
அதையும் ரசிக்கும்!"

"மழையால் பூமி
நனையும்!"

"நனைந்தால்தானே
பூமி செழிக்கும்!

"இரவு ஆடையை
மின்னல் விலக்கும்!"

"அப்போது மட்டும்தான்
பூமி வெட்கிச் சிவக்கும்!"

"போதும் உங்கள்
விளக்கம்!" என்றாள்."

"பொருதும் களம் இனி
திறக்கும்!" என்றான்.

வசந்த விழாவின் வாயிலை
மன்னன் தட்டத் தொடங்க
வாயில் கதவு தட்டப்பட்டது!

"எட்டிய கனியை
தட்டிப் பறித்ததுபோல
இந்த நேரத்தில்
கதவைத் தட்டுவது யாரடா?"

"மன்னா!
ஆபத்துக் காலடியில்!"

"என்ன
பாம்போ படையெடுத்திருக்கிறது?"
இகழ்ச்சியாகக் கேட்டான்!

"பாம்பல்ல மன்னா
படைதான் வந்திருக்கிறது!
மக்கள் படை!"

"என்ன கேட்கிறார்கள்?
வழக்கம் போல
வாக்குறுதிகளை வழங்கு!
எலும்புத்துண்டுகளை
எடுத்து வீசு!"

"மன்னிக்க வேண்டும் மன்னா,
இம்முறை
எங்கள் எலும்புகளையே
எண்ணிவிடுவார்கள் போலிருக்கிறது!"

"பணிந்துவாழப் பழகியவர்கள்
எப்படித் துணிந்து வந்தார்கள்?"

மன்னனின் கோபம்
மீசையில் துடித்தது!

கட்டிலில் விருந்து
கொட்டிக் கிடக்கிறது!
பள்ளி கொள்ளும் நேரத்தில்
கொள்ளி போடுகிறார்களே!

சந்தன மேனியில்
சாய்கின்ற நேரத்தில்
சுந்தரப் பொய்கையில்
தோய்கின்ற நேரத்தில்

நந்தியாய் வந்தனரே
மந்திகளாம் மக்கள்!

எரிச்சலோடு
எட்டி நடந்தான்!

"என்ன வேண்டும்
ஏன் வந்தீர்கள்?"

"உண்ண வேண்டும்
உறங்க வேண்டும்-அதற்கு
தொழில் வேண்டும்!
கொட்டிய மழையால்
வீசிய புயலால்
மூழ்கிய எங்கள் வாழ்க்கைக்கு
நிவாரணம் வேண்டும்!"

மன்னனின் மூக்கில் கோபம்
மன்னனின் உதட்டில் சுடுசொல்.

"மந்தைபோல் வந்தீர் என்றால்
நத்தைபோல் சுருண்டோ போவேன்?
நிர்வாணமாய் நின்றால் கூட
நிவாரணம் இல்லைப் போங்கள்!"

மன்னனின் பேச்சுக் கேட்டு
மக்களோ துடித்துப் போயினர்.

"இரும்புதான் நெஞ்சோ
உனக்கு!
ஒழிந்துபோ மன்னா
உன்னை ஏன் எமக்கு?
மக்களை வதைக்கும் மன்னன்
மக்களைப் பகைக்கும் மன்னன்
ஆண்டென்ன, அழிந்தால் என்ன?"

மக்களின் குரல்கள் உயர
மன்னனின் குரலும் உயர்ந்தது.

"வீசுங்கள் தூக்கி வெளியே
மந்தைகள்கூட்டம் சாய
வீசுங்கள் வாளை அங்கே!"

உத்தரவிட்டான் மன்னன்.
அசையாமல் நின்றனர் வீரர்!

"செவிகள் என்ன செவிடோ
சொன்னதைச் செய்க"
முழங்கினான் மன்னன்.

வீரரில் ஒருத்தன் சொன்னான்;
"செவி பழுது உமக்குத்தான்
விழி பழுதும் உமக்குத்தான்!"

மன்னன் திகைத்து நிற்க
மக்கள் படை பாய்ந்தது.
அரண்மனை தகர்ந்தது.
மன்னன் நிறுத்தப்பட்டான்
மக்கள் மன்றத்தில்!

"இரும்பாக நின்றாய் முன்னர்
இன்று தேய்ந்தாயே
ஏன் என்று கேள்!
சுடு சொல்லும்,
கொடும் சட்டமும்
இரும்பான வலிமையை
அரம்போல மாறி தேய்த்தன காண்!
முறை தவறிய ஆட்சியாளர்
நிறை தவறுவர்
மக்கள் போடும் எடையில்!"

மன்னனுக்கு சொன்ன நீதி
திருக்குறளிலும் உள்ளது பாரீர்

"சுடு மொழியும் கையிகந்த தண்டமும்
வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம்"

அதிகாரம்-57 குறள்-567

---

ஸ்போர்ட்ஸ்

## இரசிகர்கள் மோதல்



இந்திய அணியில் விளையாடும் ராகுல் ட்ராவிட், ஜவகல் ஸ்ரீநாத், அனில் கும்ப்ளே, வெங்கடேஷ் பிரசாத், டொட்டா கணேஷ், சுனில் ஜோஷி, டேவிட் ஜோன்சன் ஆகியோர் கர்நாடக அணிக்காக விளையாடி வருகின்றனர்.

அண்மையில் கர்நாடக அணிக்கும் கோவா அணிக்கும் இடையே டெஸ்ட் போட்டி ஒன்று பெங்களூரில் நடைபெற்றது. போட்டியில் இறுதி நாளான ஒக்டோபர் 31ம் திகதி, ஸ்ரீநாத் மீது வெள்ளரிக்காயை வீசிய இரசிகர் ஒருவர், உடனிருந்த இரசிகர்களின் தாக்குதலுக்குள்ளானார்.

20 வயது மதிக்கத்தக்க அந்த இரசிகர், பார்வையாளர் பகுதியில் இருந்து, ஃபீல்டிங் செய்து கொண்டிருந்த ஸ்ரீநாத்தின் கவனத்தைப் பெறுவதற்காக திரும்பத் திரும்ப குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அது பயனற்றுப் போகவே, சாப்பிட்டுக் கொண்டிருந்த வெள்ளரிக்காயை ஸ்ரீநாத்மீது வீசினார். அதனால் எரிச்சலடைந்த ஸ்ரீநாத் அந்த இரசிகரை நோக்கி கோபமாக ஏதோ சொன்னார். இதைக் கவனித்த மற்ற இரசிகர்கள் வெள்ளரிக்காய் வீசிய இரசிகர்மீது பாய்ந்து அவரைத் தாக்கினார்கள்.

அதன்பின் அந்த இரசிகர் ஸ்ரீநாத்திடம் மன்னிப்புக் கோர வைக்கப்பட்டார். ஸ்ரீநாத் அவருக்கு பழச்சாறு கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பினார்.

வெள்ளரிக்காய் வீசிய இரசிகர் தாக்கப்பட்டபோது, அவரது கடிகாரம், சங்கிலி, சப்பாத்துக்கள் ஆகியவற்றையும் பறிகொடுத்தார்.

## மரடோனா விலகல்

உலகின் உதைபந்தாட்ட சூப்பர் ஸ்டார் ஆர்ஜென்டினாவின் டியகோ மரடோனா தனது இரசிகர்களுக்கு வேதனையான செய்தி ஒன்றைக் கொடுத்துள்ளார்.

பலமுறை உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து "ஓய்வு பெறுகிறேன்" என்று அறிவித்திருந்த 37 வயதான மரடோனா, கடந்த ஒக்டோபர் மாதம் 29ம் திகதி தனது உதைபந்து விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அறிவித்துள்ளார்.

"எனது குடும்ப மகிழ்ச்சியைக் கருத்திற்கொண்டே இந்த ஓய்வை அறிவிக்கிறேன்," என்று அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் மரடோனா குறிப்பிட்டார்.

மரடோனா பலமுறை இதுபோன்று ஓய்வு பெறப்போவதாக அறிவித்தபோதிலும், இம்முறை இவரது முடிவு உறுதியாக இருக்கும் என நம்பப்படுகிறது. மரடோனாவின் ஓய்வு இரசிகர்களுக்கு பெரும் கவலை தரக்கூடிய விஷயமே.

இவர் கடைசியாக போகா ஜூனியர் அணிக்காக விளையாடினார். இந்தப் போட்டியில் போகா ஜூனியர் அணி, தனது பரம வைரியான ரிவர் பிளேட் அணியை 2-1 என்ற கணக்கில் தோற்கடித்தது.

## விபத்தில் டைசன்

கடந்த ஒக்டோபர் 31ம் திகதி பிரபல குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கினார்.

இந்த விபத்தினால் டைசனின் விலா எலும்பு முறிவடைந்ததுடன், வலது நுரையீரலில் துளை ஏற்பட்டுள்ளதாகவும் அவரது மருத்துவரான இரா ட்ராக்கி தெரிவித்துள்ளார்.

நண்பர்களுடன் வீதியில் வேகமாகச் சென்றபோது டைசனின் சைக்கிள் சறுக்கியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

டைசன் முழுமையாகக் குணமடைய ஆறு வார காலம் ஆகலாம் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

## இவர்கள்தான் அவர்கள்



எலிசபெத் மகாராணி



சோ



கஸ்தூரி

---

* தமிழர் கூட்டணியின் மட்டக்களப்புக் கிளையினர் வடக்கு-கிழக்கில் ஒரு துண்டு நிலம்கூட பிரிக்கப்படக் கூடாது என்று தீர்மானம் போட்டுள்ளார்களே?

சி. தம்பிரத்னம், மட்டக்களப்பு.

தாங்கள் தப்பிக்கொள்ள மட்டக்களப்பு பிரதிநிதிகள் சிலர் போட்ட அருமையான நாடகம்! "நாங்கள் உடன்பாடில்லை, எங்கள் மேல் கோபப்படாதீர்கள்" என்று தம்பிமாருக்கு காண்பிக்கிறார்களாம்! உண்மையானவர்கள் என்றால், தலைமை தங்கள் தீர்மானத்தை செவிமடுக்காவிட்டால் கிளர்ந்தெழ வேண்டுமே! கோபம் வந்திருக்க வேண்டுமே! ம்ஹூம்.. ஒன்றையும் காணோம்! தலைவர் சிவசிதம்பரம் ரூபவாகினித் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டிக்குப் பின்னருமா- அரசை எதிர்ப்பதுபோல பேசும் கூட்டணிப் பிரமுகர்களை நம்பப்போகிறீர்கள்? உலக மகா முட்டாள்தனம்!

—●—●—

* சிந்தியா! அரசின் தீர்வு யோசனை விடயங்களை ஆதரிப்பதில் கூட்டணிக்குள் தீவிரமாக உள்ளவர்கள் யார்?

பி. மத்தியூ, கொழும்பு-09.

மும்மூர்த்திகள். சிவா, நீலன், சம்பந்தன்.

—●—●—

* "எட்டப்பனை தனக்குத் தெரியாது அதனால் எட்டப்பன் என்று திட்டாதீர்கள்" என்கிறாரே சிவசிதம்பரம்?

ஜி. சிவதர்ஷன், கொழும்பு-13.

'கல்யாணப் பரிசு' படத்தில் என்று நினைக்கிறேன். மன்னார் அன்ட் கம்பனியில் வேலை செய்வதாக எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருப்பார் தங்கவேலு. ஒருநாள் அவரது குட்டு உடைந்துவிடும். உடனே சமாளித்துக் கொண்டு "நீங்கள் எந்த மன்னார் அன்ட் கம்பனியைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்பார்.

அப்படித்தான் தங்கள் எதிரிகளையெல்லாம் எட்டப்பர்கள் என்று மேடைக்கு மேடை முழங்கியவர்கள் கூட்டணியினர். இப்போது அவர்களுக்கே அப்பட்டம் வந்து சேர்ந்துவிட்டது. இவர்கள் சொன்னதெல்லாம் பொய் என்று தெரிந்துவிட்டது. இப்போது முழிக்கிறார்கள். தங்கவேலு ஸ்டைலில் சிவசிதம்பரம் கேட்கிறார், "நீங்கள் எந்த எட்டப்பனைச் சொல்கிறீர்கள்?" பாவம் முன்னாள் தலைவர் இந்நாள் ஜோக்கராகி விட்டாரே!

—●—●—

* கேணல் கடாபியை சந்திக்கவேண்டாமென்று அமெரிக்கா தடுத்தும்கூட நெல்சன் மண்டேலா சென்று சந்தித்துள்ளாரே?

வி. ஜெயக்குமார், கண்டி.

கறுப்பின மக்களின் போராட்டத்தை நசுக்க முற்பட்ட முன்னாள் எதிரி அமெரிக்கா. கறுப்பின மக்களுக்காக துணிந்து குரல் கொடுத்த தலைவர் கேணல் கடாபி! நண்பனைச் சந்திக்கச்செல்ல முன்னாள் எதிரி தடுப்பதா, என்ற கோபத்தில் கடாபிக்கு விருது கொடுத்தது மூலம் அமெரிக்காவின் முகத்தில் அறைந்துவிட்டார் மண்டேலா. மண்டேலா கொள்கையில் ஊறியவர். நம் நாட்டிலும் உள்ளார்களே முன்னாள் போராளிக்கட்சிக்காரர்கள்: இவர்களுக்கு கொள்கை ஊறுகாய்தான்! சும்மா சுவைக்காக இடைக்கிடையே தொட்டுக் கொள்வார்கள்!

—●—●—

* பாகிஸ்தான் சுதந்திரக் கிண்ணப் போட்டியில் வெற்றி யார் பக்கம்?

எம். உதுமான், புத்தளம்.

கிரிக்கெட் ஒரு சூதாட்டம் மாதிரி உதுமான். கணிப்பு சொன்னால் என் மூக்குத்தான் உடையும். மேற்கிந்திய அணியைத் தவிர ஏனைய அணிகளுக்கு சான்ஸ். முதல் போட்டியில் பாகிஸ்தானை வென்றது தென்னாபிரிக்கா. ஆனால் மனதில் நின்றது கடைசிவரை பாகிஸ்தான் போராடிய உறுதிதான்! மளமளவென்று சரிந்த மூன்று விக்கெட்டுடன் பாகிஸ்தான் காலி என்று நினைத்தால், மளமளவென்று ரன்களை மலைபோல குவித்துவிட்டார்களே!

—●—●—

* பல்கலைக்கழக மாணவர் வரப்பிரகாஷ் மரணம் தொடர்பாக என்ன நினைக்கிறீர்?

செல்வி க. தமயந்தி, பேராதனை.

அது மரணம் அல்ல, படுகொலை! கண்டிக்கப்பட வேண்டிய காட்டுமிராண்டித் தனம்! வடபகுதி இளைஞர்கள்தான் காரணம், காரணம் என்று திரும்பத் திரும்ப தொலைக்காட்சியிலும், வானொலியிலும் கூறினார்கள். வடபகுதி இளைஞர்கள் என்றால் அரக்கர்கள் என்று காண்பிக்க துணை போய்விட்ட 'ராக்கிங்' கொடூரர்களை மன்னிக்கவே முடியாது. அதுசரி- தமிழ் பேசுவோர் தவிர்ந்த வேறு பகுதி மாணவர்கள் 'ராக்கிங்'கில் ஈடுபட்டிருந்தாலும், இப்படித்தான் பிராந்திய பெயர் குறிப்பிட்டு சொல்லிக் கொண்டே இருந்திருப்பார்களா?!

—●—●—

* தீபாவளிப் படங்களில் பிரமாண்டம் எது?

இ. முரளிதரன், நீர்கொழும்பு.

பார்க்கக்கிடைக்கவில்லை! அறிந்த வரை 'ரட்சகன்'.

—●—●—

* சிந்தியா! படைத்தரப்பினர் கூறிய கணக்குகளின்படி பார்த்தால், புலிகள் இயக்கத்தவரில் வன்னியில் இப்போது பிரபாகரன் மட்டும்தான் இருக்கவேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கே. மதியாபரணம், வவுனியா.

புள்ளி விபரம் சொல்பவர்கள் கணக்கில் எலிகள் என்று!

—●—●—

* ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டலாமா?

த. நிஷாந்தன், திருமலை.

அறைவது எதிரியாக இருந்தால், கூடாது!வேண்டுமானால் சமாளிக்கலாம்.

இரண்டு பேர் கடுமையாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவர் முரட்டு ஆசாமி. மற்றவர் நோஞ்சானாக இருந்தார். முரட்டு ஆசாமி கோபத்தில் மற்றவரை அறைந்துவிட்டார்.

"என்னைக் கோபத்தில் அறைந்தாயா? கேலியாக அறைந்தாயா?" என்று கேட்டார் அறைவாங்கியவர்.

"கோபத்தில் தான்!" என்று உறுமினார் முரட்டு ஆசாமி.

உடனே அறைவாங்கியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"அப்படியானால் சரி. என்னை கேலி செய்வதை நான் விரும்புவதில்லை!"

—●—●—

* ஐ.தே.கட்சியினர் மறுபடியும் உசாராக களத்தில் இறங்கிவிட்டார்கள் போலுள்ளதே?

எல். முஸம்மில், மருதானை.

இந்த ஜோக் எப்படி இருக்கிறது பாருங்கள்:

எதிர்க்கட்சித் தலைவர் தேர்தல் கூட்டத்தில் பேசும்போது கூறினார்: "சகோதரர்களே! சகோதரிகளே! இத் தடவை நீங்கள் எங்களை ஆதரிக்க வேண்டும். ஆளும் கட்சி உங்களை பல ஆண்டுகளாக ஏமாற்றி வருகிறது. இப்போது எனக்கும் ஒரு வாய்ப்புத் தாருங்கள்!"

—●—●—

* டியர் சிந்தியா! பதில் சொல்ல முடியாத கேள்வி எப்படியிருக்கும்?

ஏ. பிரகாஷ், கொழும்பு-06.

சமாளிப்புக்கேஷன் தெரிந்தால் பதில் சொல்ல முடியாத கேள்வியே கிடையாது தெரியுமா!

தம்முடைய நான்கு வயது மகனை பூங்காவில் உலாவுவதற்கு அழைத்துச் சென்றார் ஒருவர். பெரிய தொந்தி கொண்ட குண்டு மனிதர் ஒருவர் எதிர்ப்பட்டார்.

"அப்பா! அது யார்?" என்று கேட்டான் மகன்.

"பெரிய தொழில் அதிபர்!"

சிறிது தூரம் சென்றதும் கர்ப்பிணிப் பெண் ஒருவர் எதிர்ப்பட்டார். சிறுவன் கேட்டான்; "இவங்களும் தொழில் செய்பவங்கதானா?"

தந்தை சொன்னார்: "இல்லை கண்ணா! இது அவங்க கணவன் செய்த தொழில்!"

—●—●—

* அப்பாசின் திருமணத்தால் சாதகம் யாருக்கு?

கி. திரவியநாதன், திருமலை.

கைப்பிடித்த முறைப்பெண்ணுக்கு!

—●—●—

## சிந்தியா பதில்கள்



* சிம்ரானுக்கு போட்டியாக அடுத்தது யாரோ?

பி. திருமாவளவன், பண்டாரவளை.

'காதலர் தின'த்தில் கலக்க வருகிறார் சோனாலி. 'பம்பாய்' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியவர், இப்போது படம் முழுக்க ஆட்டம் போடப்போகிறார். ஹம்மா...ஹம்மா..!

—●—●—

* அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல் இராணுவ ரீதியாகவும் புலிகளை எதிர்க்கத் துணை செய்கிறார்களே முன்னாள் தலைவர்கள், அதில் என்ன 'ஆனந்த'ம்?

பா. சேகரன், வவுனியா.

நாற்காலியில் நிம்மதியாக அமர்ந்து கொள்ள முடியாமல் 'உறுமல்' சத்தம் தடுக்கிறதாம்! இன்னொருத்தருக்கு முன்னர் போல 'ஆனந்த'மாக சண்டித்தனம் செய்து பிரிய வயதான பின்னரும் ஆசையாம். சங்கதி அதுதான்!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 107

## சிதைந்தது நிகும்பலை யாகம்

இராமபிரான் தன் கண்களை மூடிச்சிந்தனையிலாழ்ந்திருந்தார். அவ்வேளை விபீடணர் அங்குவந்து சேர்ந்தார். விபீடணரின் பாதங்களின் ஒலி கேட்டதும் கண்களைத் திறந்து கொண்ட இராமபிரான் தன் அருகில் அவரை அழைத்தார். ஏதோ ஒரு தகவலைச் சொல்லத்தான் விபீடணர் அப்போது வந்திருக்கிறார் என்பதை உணர்ந்த இராமபிரான் அத்தகவலை அறிய ஆயத்தமானார். இலக்குவன், ஆஞ்சநேயர் முதலானோரும் அவ்விடம் வந்து சேர்ந்தனர்.

"இந்திரஜித்து நிகும்பலை யாகம் செய்யப் புறப்பட்டுச் செல்கிறான். இந்த யாகம் மிகக் கடுமையானது. இந்த யாகம் எக்குறையுமின்றி பூரணமாக நிறைவேறுமானால் அரக்கர் படையணியினர் யுத்தத்தில் வெற்றி பெறுவதை எவராலும் தடுக்க முடியாது. ஆகவே, ஐயனே! நிகும்பலை யாகம் நடைபெறாமல் உடன் தடுத்தாக வேண்டும். இந்த யாகம் நடைபெறாமல் தடுப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களுடன் இளைய பெருமாள் இலக்குவனை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்!"

விபீடணர் இவ்வாறு கூறியதும் இருக்கையிலிருந்து எழுந்த இராமபிரான் விபீடணரை ஆரத்தழுவிக்கொண்டார். உரிய வேளையில் ஒப்பற்ற தகவலைத் தந்தமைக்காக நன்றியறிதலுடன் விபீடணரைப் பாராட்டினார்.

இலக்குவனை அருகழைத்து, நிகும்பலை யாகத்தின் தன்மையை இராமபிரான் விளக்கினார். அந்த யாகம் முற்றுப்பெறாமல் அழித்தொழிக்கும் முறைகளையும் எடுத்துக் கூறினார். "இந்திரஜித்துவிடம் சிவபிரானும், விஷ்ணுவும், பிரம்மாவும் கொடுத்த பல கொடிய அஸ்திரங்கள் உள்ளன. இவற்றைப் பிரயோகிக்கவே நிகும்பலை யாகத்தை அவன் செய்ய முற்பட்டுள்ளான். யாகம் பூரணத்துவம் பெறாமல் தடுப்பாயாக! ஆஞ்சநேயர், விபீடணர் முதலானோரையும் உடன் அழைத்துச் செல்க!" என்று இலக்குவனிடம் இராமபிரான் கூறினார்.



### இலக்குவன் போர்க் கோலம்

இந்திரஜித்து ஒரு சுத்த வீரன் மட்டுமல்ல, பல மாய விளையாட்டுகளிலும் வல்லவன் என்பதை இராமபிரான் அறிவார். தேவேந்திரனையே அடிமை கொண்டமையினால், மேகநாதன் என்ற பெயரையுடைய அவன், இந்திரஜித்து என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். பல அரிய தவங்களைப் புரிந்து தெய்வீக அஸ்திரங்களைப் பெற்றவன். ஆகவே, தனது தம்பியாகிய இலக்குவனுக்கு பல அரிய யோசனைகளைத் தெரிவித்தார். அத்துடன் பிரம்மதேவன் யாகம் செய்து திருமாலிடமிருந்து பெற்ற வில்லினையும் இலக்குவனிடம் கொடுத்தார். தமது கவசத்தையும் அம்பறாத் தூணியையும் தன் தம்பியிடம் தந்தார். பயபக்தியுடன் இவற்றைப் பெற்ற இலக்குவன், இராமபிரானின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். பெரும் வானரப்படை பெரும்புயல்போல் நிகும்பலை நோக்கி அணியணியாகப் புறப்பட்டது.

நிகும்பலை யாகம் நடைபெறும் இடத்தை அரக்கர் பெரும் சைனியத்தின் யானைப் படை, தேர்ப்படை, குதிரைப் படையுடன் காலாட்படையும் சக்கர வியூகம் அமைத்துக் காத்து நின்றன. அப்படைகளை நோக்கி பெரு மழைபோல் அம்புகளைப் பொழிந்தார் இலக்குமணன். ஒருபெரும் தாக்குதலை இந்திரஜித்து எதிர்பார்த்துத்தான் இருந்தான்; எனினும் இவ்வளவு சீக்கிரம் தாக்குதல் நடைபெறும் என்று கருதவில்லை. வானரப் படை அணியினர் எழுப்பிய பேரொலியினால், நிகும்பலை யாகத்துக்கான ஓமகுண்டத்தை வளைத்திருந்த அரக்க வேதியர்கள் ஓதிய மந்திரங்கள் ஒலி மங்கி மழுங்கிவிட்டன. வேதியர்களால் ஐம்புலனையும் அடக்கி, கவனத்துடன் கிரியைகளைச் செய்ய முடியாமற் போயிற்று. இந்திரஜித்துவினாலும் தன் சிந்தையை ஒரு நிலைப்படுத்தி யாகத்தில் புலன் செலுத்த முடியவில்லை. இதனால் கோப உணர்ச்சியால் பொங்கி எழுந்தான். தன் கண் முன்னே-இலக்குவனின் சரமாரியான அம்பு வீச்சாலும் வானர வீரர்களின் பாறைகள், மரங்கள் போன்றவற்றை வீசுவதனாலும் பெருவாரியான அரக்கர் படை சரிந்தது. யாக குண்டங்கள் அமைந்திருந்த புனிதப் பிரதேசமெங்கும் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது. யானைகள்; குதிரைகள் முதலானவற்றின் சடலங்களும் அரக்க வீரர்களின் சின்னாபின்னமாக்கப்பட்ட உடல்களும் இரத்த வெள்ளத்தில் உருட்டிச் செல்லப் பட்டன.

இலக்குவனின் போராற்றலை கம்பர் பெருமான் இவ்வாறு வர்ணிக்கிறார்:

**மா வாளிகள் மா மழைபோல் வரலால்**
**மா ஆளிகள் போர் தெறு மா மறவோர்**
**மா ஆளிகள் வன் தலையின் தலை வாம்**
**மா ஆளிகளோடு மறிந்தனரால்.**

(யுத்த காண்டம்-2915)

**பொருள்:**

*இலக்குவன் கையிலிருந்த வில் பெரு மழையைப் போன்று கணைகளைச் சொரிந்தது. இதனால் சிங்கங்களையே கொன்றுவிடக்கூடிய ஆற்றலுள்ள அரக்க வீரர்கள் மாண்டனர். குதிரைகளில் ஏறி வந்த வீரர்கள் மற்றும் யானைகளில் அமர்ந்து போர் புரிந்த வீரர்கள் ஆகியோரும் இறந்தனர். காலாட் படையைச் சேர்ந்த வீரர்கள் மலர் மாலைகளை அணிந்திருந்தனர். அம்மாலைகளில் வண்டுகள் மொய்த்துக் கிடந்தன. அந்த வீரர்களும் இலக்குவன் எய்த அம்புகளால் வீழ்ந்து மாண்டனர்.*

### அரக்கர் படை பலம்

நிகும்பலை யாகம் எதுவித இடையூறுமின்றி வெற்றிகரமாக நடைபெற்று முடிய வேண்டும் என்பதற்காக அரக்கர்படை மிகப் பெரிய அளவில் குவிக்கப்பட்டிருந்தது. இப்படையினை எதிர்த்து இலக்குவன் தாக்கி அழித்தது போக, ஆக ஈர் ஐந்து- (அதாவது- பத்து) அக்குரோணிகளே மிஞ்சியதாம். அதுவும் அழியும் நிலையினை அடைந்து விட்டமையினால், யாகத்தைக் கைவிட்டு போரில் இந்திரஜித்துக் குதித்தான்.

முன்னாளில் தமிழ் நாட்டில் இருந்த படைகளின் கணக்குப்படி ஓர் அக்குரோணியில் பின்வரும் கணக்கில் நால்வகைப் படைகளும் இருந்துள்ளன:

தேர்- 21870
யானை- 21870
குதிரை- 65610
காலாள்- 109350

நிகும்பலைப் போரில் இவ்வாறு 10 அக்குரோணிகள் மட்டுமே எஞ்சியிருந்தன என்றால் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

-●●●-

இந்திரஜித்து யாகத்துக்காக அணிந்திருந்த உடைகளைக் களைந்துவிட்டு போர்க்கோலம் பூண்டான். ஏமாற்றத்தால் அவன் உள்ளம் எரிமலை போலாயிற்று. தேரிலேறி போர் முனைக்கு வந்தபோது அவன் முன் ஆஞ்சநேயரே நின்றார். அவர் மீது இந்திரஜித்து சரமாரியாகக் கணைகளை எய்தான். அவற்றைத் தன் இரு கைகளாலும் பிடித்து சாதாரண குச்சிகளை முறித்தெறிவது போல் ஆஞ்சநேயர் முறித்து எறிந்தார். இருப்பினும் நஞ்சு தோய்ந்த பல கணைகளைப் பொறுக்கி, அவற்றை ஆஞ்சநேயரின் மார்பு, கழுத்து, தொடைகள் போன்ற இடங்களில் தைக்குமாறு இந்திரஜித்து எய்தான். இதனால் ஆஞ்சநேயர் சற்றுத் தளர்ச்சியடைந்தார்.

ஆஞ்சநேயரின் நிலைகண்டு அங்கதனும் ஏனைய வானரப்படைத் தளபதிகளும் இந்திரஜித்துடன் பொருத முன்னேறினர். ஆனால் அவர்களுடன் போரிடுவது தனது நிலைக்கு ஏற்புடையதல்ல என்று மறுத்துவிட்டான். "சிங்கம் யானையுடன் போரிடுமேயன்றி குரங்குகளிடம் போரிடப் போவதில்லை; நீங்கள் தப்பிச் செல்லுங்கள். இலக்குவன் எங்கோடி ஒளிந்து கொண்டான்? அவனை என்னுடன் போரிட அழைத்து வாருங்கள். அவன் தான் என்னுடன் போரிடத் தகுதி பெற்றவன்!" என்று அறை கூவினான்.

விபீடணர் இலக்குவனை அணுகி, "இந்திரஜித்து தொடக்கிய யாகம் சீர்குலைந்து போய்விட்டமையினால் இனிமேல் அவனால் எதுவும் செய்ய முடியாது. அவனை வீழ்த்த இதுதான் தக்க தருணம். ஆகவே உடனடியாகப் புறப்படுங்கள்!" என்று கூறினார்.

சோர்வு நீங்கிய ஆஞ்சநேயர், இலக்குவனை அணுகி, "ஐயனே! இந்திரஜித்து மாபெரும் இரதத்தின் மேலேறிப் போர் முரசறைந்து கொண்டிருக்கும்போது தாங்கள் நடந்து சென்று போரிடுவது பொருந்தாது. ஆகவே என் தோள் மீது ஏறிக்கொள்ளுங்கள்!" என்றார். இலக்குவனும் அவ்வாறே ஏறிக் கொண்டதும் வானரப் படை ஆரவாரித்து எழுந்து முன்னேறியது.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

**இராமாயணப் போட்டி: 104-105**

**சரியானவிடை:- திரிசடை**

1. ச.தமிழரசு, திரேசியா தோட்டம், பொகவந்தலாவ.
2. ரி.தமயந்தி பொன்மலர், மோதர வீதி, கொழும்பு.
3. எம்.மஃபூல், நெய்தல் நகர், மூதூர்-01.
4. க.பரமானந்தராஜா, விஷ்ணு ஆலய வீதி, கல்குடா.
5. ச.லதா, பெரிய நொச்சிக்குளம், நேரியகுளம், வவுனியா.

**போட்டி இல. 107** கேள்வி:- **நால்வகைப் படைகளின் பெயர்களைத் தருக?**

**நவம்பர் 15 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**இராமாயணப் போட்டி – இல.107, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# தீ வந்து பாயுது காதினிலே

## காதிலை பூ கந்தசாமி

**இந்தவாரம் அரசியலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு, சினிமா பார்க்கலாமா.... சேச்சே.... சினிமா வசனம் கேட்கலாமா? காலத்தால் அழியாத கதை வசனம் பல எழுதியவர் கலைஞர் மு. கருணாநிதி. கலைஞர் வசனத்தை சிவாஜி பேசி நடித்தால் கேட்கவும் வேண்டுமோ? 'மனோகரா' படத்தில் இடம்பெற்ற தீ க்கும் வசனங்களை பாருங்கள். முடிந்தால் மூச்சுவிடாமல் பேசிப் பாருங்கள்.**

**மன்னர் புருஷோத்தமன்:** ஆத்திரத்தைக் கிளப்பாதே! நிறைவேற்று! அரசன் உத்தரவு!

**மனோகரன்:** அரசன் உத்தரவென்ன? ஆண்டவன் உத்தரவுக்கே காரணம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்; அரசே! சிறைச்சாலைக்கு செல்லவேண்டும் தாய் என்று கேள்விப்பட்ட பின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை!

**மபுரு:** தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமை தெரியாத மூடனே! தந்தையின் ஆணை கேட்டு தாயாரின் தலையை வெட்டி எறிந்த பரசுராமனைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறாயா நீ?

**மனோ:** பரசுராமன்- அவதாரம்! மனோகரன்- மனிதன்!

**மபுரு:** என் உத்தரவை நிறைவேற்றப் போகிறாயா இல்லையா?

**மனோ:** நிறைவேற்றுகிறேன், மன்னிப்புக் கேட்கவேண்டும் மனோகரன்....

**மபுரு:** ஆமாம்! அதுவும் அரை நொடியில்!

**மனோ:** அரை நொடியென்ன? அதற்குள்ளாகவே! ஆனால் யாரிடம் கேட்க வேண்டும் தெரியுமா? கோமளவல்லி, கோமேதகச் சிலை, கூவும் குயில், குதிக்கும் மான் என்றெல்லாம் உம்மால் புகழப்படும் இந்தக் கோணல்புத்திக்காரியின் கொள்ளிக் கண்களை, கொடிய நாக்கை என் கூர்வாளுக்கு இரையாகத் தந்துவிட்டு, அதை எதிர்த்தால் உம்மையும், உமக்கு பக்கத்துணை வந்தால் அந்தப் பட்டாளத்தையும் பிணமாக்கிவிட்டு, சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றியவர்களை சுடுகாட்டுக்கு அனுப்பிவிட்டேன் என்று, கழலும் வாளுடன், சூழும் புகழுடன், என் அன்னையிடம் ஓடி மன்னிப்புக் கேட்க வேண்டும்! நிறைவேற்றட்டுமா அந்த உத்தரவை? தயார்தானா? ஏன் நடுங்க வேண்டும் ஹஹ்ஹா! புருஷோத்தமர் போரிலே புலி! வாள் எடுத்தால் வையம் கலங்கும்! அவரா இப்படிப் பயப்படுகிறார்? பாவம், வேலின் கூர்மையைச் சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா இரசித்துக் கொண்டிருக்கின்றன! பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்த பாம்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன! கோட்டை கொத்தளங்களை நினைத்துக் கிடந்த நெஞ்சம் இந்தக் குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர்ச்சி காணுகிறது!

(புருஷோத்தமர் தன் மகனை வேசிமகன் என்று இகழ்கிறார். பிணைத்த சங்கிலி அறுபடப் பாய்கிறான் மனோகரன்)

புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும் விழியில் உலகைக் காண்பவரே! மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே! மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக் கொள்ளிக் கட்டையெனக் கூறிய குருடரே! என் தாய் அன்பின் பிறப்பிடம், அறநெறியின் இருப்பிடம், மாசற்ற மாணிக்கம், மாற்றுக் குறையாத தங்கம், அவர்களை அவதூறு கூறிய அங்கங்களைப் பிளந்தெறிவேன். இந்தத் துரோகப் பேச்சுக்கு உம்மை தூண்டிவிட்ட துர்க்கையின் உடலை துண்டாடுவேன். துணிவிருந்தால், தோளில் வலுவிருந்தால் எடுத்துக்கொள்ளும் உமது வாளை, தடுத்துக் கொள்ளும் உமது சாவை! தைரியமில்லாவிட்டால், தளுக்குக்காரியின் குலுக்குச் சிரிப்பிலே நீர் கோழையாகி விட்டிருந்தால் ஓடிவிடும் இடத்தை விட்டு! புறநானூற்றின் பெருமையை மூடவந்த புழுதிக்காற்றே புற முதுகு காட்டி ஓடும்! கலிங்கத்துப் பரணியை மறைக்க வந்த காரிருளே கால் பிடரியால் இடிபட ஓடும்... ஓடும்.. ஓலமிட்டு ஓடும்... ஓங்காரக் கூச்சலிட்டு ஓடும்! ஏன்? அவமானமாக இருக்கிறதா? என் அன்னையை தூஷித்த சின்னம் சிறு புழுவே! ஏன் சிலையாக மாறிவிட்டீர்! ஏ! ராஜ விக்கிரகமே! பழிவாங்கும் பக்தன் பூஜை செய்ய வந்திருக்கிறான்! அப்படியே நில்லும்! அசையாமல் நில்லும்!

இந்த சித்து வேலைக்காரியின் இரத்தத்தைக் கொண்டு உமக்கு அபிஷேகம் செய்கிறேன்! இந்த நாசகாரியின் நரம்புகளால் உமக்கு மாலை சூட்டுகிறேன்! முல்லைச் சிரிப்பென புகழ்வீரே மோக போதையிலே, அந்தப் பல்லை எடுத்து உம்மை அர்ச்சனை செய்கிறேன்!

பாவி! பார்! பத்தினியை இழந்த படுபாவி, பார், நீயும் உன் பஞ்சணை ராணியும் படும் பாட்டைப் பார்!

* * *

'ராஜா ராணி' படத்தில் சேரன் செங்குட்டுவன் ஓரங்க நாடகம். கலைஞர் வசனம். சிவாஜிதான் சேரன் செங்குட்டுவன்.

கனகன், விஜயன் ஆகியோரை எதிர்த்து போர்முரசு கொட்டுகிறான் சேரன் செங்குட்டுவன்.

அப்போது அரண்மனைப் புரோகிதர் குறுக்கிடுகிறார்.

**அரண்மனை புரோகிதர்:** மன்னா! சோழனுக்கும், பாண்டியனுக்கும் இல்லாத ஆத்திரம் தங்களுக்கு மட்டும் ஏன்?

**செங்குட்டுவன்:** தமிழன் என்பதால்! தன்மான உணர்ச்சி குன்றாததால்! சோழனோ, பாண்டியனோ என்னுடைய பகைவனாக இருக்கலாம், அதற்காக வடநாட்டு மன்னர்கள் வாலாட்ட விடமாட்டேன்.

என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள் தறுக்கர்கள்! ஆகா, குறள் தந்த கோமானே வள்ளுவனே, உன்னை இகழ்ந்தார்கள் வடநாட்டார்! அத்தாணி மண்டபத்தில் சத்தான கருத்துரைக்கும் சாத்தனாரே உம்மை இகழ்ந்தார்கள்! பாவணரே, ஐந்தாம் பத்துப் பாடிய அன்புப் பாணரே! அரங்கின் அண்ணலே உம்மை இகழ்ந்தார்கள்! முத்துக் கடலே முல்லைக் கொடியே உன்னை இகழ்ந்தார்கள்! எட்டுத் திக்கும் முரசு கொட்டி வாழும் சிங்கத் திருவிடமே உன்னை இகழ்ந்தார்கள்!

...அந்தப்புரத்திலே உலவிக் கிடக்க வேண்டிய சிலதுகள், ஆவேசக் கூச்சலிட்டதாம்! வீரர்களே பார்ப்போம் ஒரு கை, நாகாக்கத் தெரியாத நாடோடிகளை!... காளையரே! காதலியருக்கு கடைசி முத்தம் இதுவாக இருக்கலாம் என்று கூறிவிட்டுப் புறப்படுங்கள்! நாமென்ன சாகப் பயப்படும் சமுதாயமா? சமருக்கஞ்சும் இனத்தவரா, அந்த சாமரம் ஏந்திகளிடம் சரணடைய? களத்திலே உங்கள் தலைகள் பறிபோகலாம். தசைகள் கிழித்தெறியப்படலாம். ஆனால் சுயமரியாதை இரத்தத்தின் சூடு தணியாமல் அவை கிழிக்கப்படட்டும்! முரசு தட்டுங்கள்! இமயத்தை முட்டுங்கள்!



* * *

'இல்லறஜோதி' படத்தில் ஓரங்க நாடகம். சிவாஜி சலீமாக நடித்தார். அனார்கலி பேசும் வசனத்தை வடித்திருந்தார் கலைஞர்.

**அனார்கலி:** கேட்டேனே பலமுறை: கேடயமும் ஈட்டியும் தாங்கிப் போர் முனை செல்லும் பட்டாளத்து வீரனடி நான் என்று கூறிய போலிப் பேச்சைக் கேட்டேனே பலமுறை! அப்போதெல்லாம் தெரியாதே எனக்கு அந்தஸ்த்து பேதத்தின் அளவு! தெரிந்திருந்தால் ஆகாயத்து சூரியனுக்காக இந்த தடாகத்து தாமரை மலர்ந்திருக்காதே! பிறைக்கொடி காக்கும் பெம்மானின் பிள்ளையே! டெல்லி ஏகாதிபத்திய எதிர்காலக் காவலரே! என்ன விழிக்கிறீர்? திரைமறைவில் அனுபவித்த தேன் விருந்து, தெவிட்டிய பின் வீசி எறிய வேண்டிய காதல் அமுதம், அந்த தேவை தீருவதற்கு முன் தடைபோட்டு நிற்கிறதே என்று எண்ணுகிறீரா? படை போட்டு வாழும் பாதுஷாவின் மைந்தரே! சிப்பாய் நடைபோட்டு வந்து என்னை ஏமாற்றியது போதும்!"



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

www.padippakam.com





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# சின்ன சின்ன காதல்







SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


← வித்தியாசமான வர்ணப் பறவை இது. பல வர்ணங்களில் ஜொலிக்கிறது அல்லவா.

ஆபிரிக்க நாடுகளில் பரவலாகக் காணப்படும் இப்பறவை 'ருறாக்கொஸ்' இனத்தைச் சேர்ந்தது. இவற்றின் கன்னங்கள் இரு புறமும் தனி வெள்ளைத் தடங்களைக் கொண்டுள்ளன. உடலில் பெரும்பாலும் பச்சை நிறமே பரந்து காணப்பட்ட போதிலும் சிறகை விரித்துப் பறக்கும்போது, இறக்கைகளில் பல வர்ணங்கள் தென்படும்.

சில பறவை இனங்கள் இணை சேரும் காலங்களில் தனது வர்ணங்களை மாற்றிக் கொள்வதுண்டு. ஆனால் இப்பறவைகள் அவ்வாறு நிறம் மாறுவதில்லை. தனக்குரிய பெண் துணையைத் தேடிக் கொண்டதும் ஆண் பறவை, பழங்களின் சதைகளைக் கோதி தன் வாயினுள் எடுத்துவந்து- தன் காதலிக்குக் காதல் பரிசாகக் கொடுத்து மகிழ்விக்கும். மகிழ்ந்துபோன காதலி நெகிழ்ந்துபோய்விடுமாம்.

↓ வெளியே நீலத்திரை. அதை விலக்கி உள்ளே செல்லச் செல்ல அதிசயக் காட்சிகள். அதுதான் கடல் இரகசியம்.

தரையில் தாவரங்கள் வளர்வதுபோல் சமுத்திரங்களின் தரையிலும் அழகழகான தாவரங்கள் வளர்கின்றன. தரையில் வளரும் தாவரங்களில் பூச்சி புழுக்கள் போன்ற உயிரினங்கள் ஒட்டி வாழ்வது போல் கடற்கரைத் தாவரங்களில் கடல் வாழ் உயிரினங்கள் சார்ந்து வாழ்கின்றன.

நுண்ணுயிரிகளினாலும் வேறு கிருமிகளினாலும் தாவரங்கள் நோய் வாய்ப்பட்டு அழிந்து போகின்றன. கடற்தரைத் தாவரங்களும் பவளப் பாறைகளும் கூட நுண்ணுயிரிகளால் நோயுற்று மடிகின்றன.

கடலில் பவளப் பாறைகளும் இத்தகைய நுண்ணுயிரிகளால் பாதிப்புக்குள்ளாகிச் சிதைந்து அழிந்து போகின்றன. அமெரிக்க-ஃப்புளோரிடா கடலில் முட்டை வடிவமான பவளப்பாறைகள் காணப் படுகின்றன. இவற்றையும் இனந்தெரியாத நுண்ணுயிரிகள் தாக்கி அவற்றில் ஒரு வகை வெள்ளைப் பூச்சைப் பூசி விடுகின்றனவாம். இவ்வெள்ளை வர்ணம் படிப்படியாகப் படர்ந்து நாளடைவில் பவளப்பாறை அப்படியே உருக்குலைந்து போய்விடுகிறதாம். அப்படியான பாறை ஒன்றைத்தான் பார்வையிடுகிறார்.

## நலமறிய ஆவல்



வீட்டுத் தொட்டிகளில் அலங்காரமான சிறுரக மீன்களைப் பற்றிய ஆய்வுகளை நடத்தும் ஸ்ரிவன் மில்லர் இந்நோய் வேகமாகப் படர்வதை அவதானித்து உடனடியாக பரிகாரம் தேட வேண்டியதன் அவசரத்தை கடல்வள பரிபாலன அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார். கடலுக்குள் புகுந்து அவர் ஆராய்ச்சி நடத்தும் காட்சிதான் இது.

கடலுக்குள் உள்ள மீன்களுக்கு நோய் வராமல் தடுக்க எத்தனை தீவிரமான முயற்சி பாத்தீர்களா? நம் நாட்டில் வன்னி உட்பட பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு பரவாத நோய்கள் கிடையாது. யார் கவனிக்கிறார்கள். மருந்தும் இல்லை. சிகிச்சையும் இல்லை.

நாகரீக உலகில் மீன்களுக்கும் நோய்க் காப்பு. நமது போர் உலகில் மனிதர்களுக்கும் இல்லை காப்பு!

## பழசு

↓ 'ஜுராசிக் பார்க்' திரைப்படம் டைனோசர்கள் பற்றிய பிரமிப்புக்களை உருவாக்கியது. அதனால் டைனோசர்கள் பற்றிய ஆச்சரியத் தகவல்களைத் திரட்டும் ஆர்வம் ஆராய்ச்சியாளர்களிடம் தோன்றியுள்ளது.

ஆபிரிக்காவின் வடமேற்கே அமைந்துள்ள மொறாக்கோ நாட்டின் கிழக்கே சகாரா பாலைவனத்தை அண்மித்ததாகவுள்ள குன்று ஒன்றில் புதிய தகவல்களைத் தந்துள்ள அகழ்வாராய்ச்சி இடம்பெற்றுள்ளது.

உலகின் பல பாகங்களில் பலகோடி வருடங்களுக்கு முன்னர், மிகப் பெரிய உயிரினங்களான டைனோசர்கள் வாழ்ந்து வந்துள்ளன. என்பதற்கான சான்றுகள் கிடைத்து வருகின்றன.

இப்போது ஆபிரிக்காவிலும் டைனோசர்கள் வாழ்ந்துள்ளன என்பது புதிய அகழ்வாராய்ச்சியின்போது தெரிய வந்துள்ளது.

சகாரா பாலைவனத்தில் 9 கோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் டைனோசரின் எலும்புக்கூடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

"கார்ச்சரோடொனோ ரொசோர்" என்று நீளமான பெயரை இம்மிருகத்துக்குக் கொடுத்துள்ளனர். இதனுடைய மண்டை ஓடு 5 அடி 4 அங்குல உயரமுடையது. இதில் காணப்பட்ட அதன் ஒரு பல்லின் படமே இங்கு காணப்படுகிறது. இப்பல்லின் உயரம் மட்டும் 5 அங்குலமாகும்.

'ஜுராசிக் பார்க்' படத்தில் காண்பித்தது கம்யூட்டர் டைனோசர். அதனை எல்லாம் தூக்கிச் சாப்பிடக்கூடிய உண்மையான டைனோசர்கள் வாழ்ந்த தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.





## 2வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி செல்வநாயகம் சாரங்கா

25.10.1997

சங்கானை கிழக்கு பிரான்பற்றைச் சேர்ந்த செல்வநாயகம் தவமலர் தம்பதியினரின் செல்வப் புதல்வி சாரங்கா தனது 2வது பிறந்தநாளை 25.10.97 அன்று இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா இலங்கையில் உள்ள பூட்டி, பேரன், பேத்தி, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தை, மாமா, சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள், மருமக்கள், இத்தாலிச் சித்தப்பா, ஜேர்மன் பெரியப்பா,பெரியம்மா, தம்பி, கனடாச் சித்தி, சித்தப்பா, சுவிஸ் மச்சான், மச்சாள், மருமகள் மற்றும் உற்றார் உறவினர்கள், இத்தாலி வாழ் நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு பல்லாண்டு பெறுவாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: த. பவனராஜா(சித்தப்பா)

## அதிரடி

இஜாஸ் அஹமட்-வயது 28. பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரம்.

1986-87ல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் புகுந்தார். இது வரை 184 ஒருநாள் போட்டிகளில் ஆடி 4 ஆயிரத்தி 500 ஓட்டங்களை குவித்திருக்கிறார்.

இதில் ஆறு சதங்களும், 26 அரைச் சதங்களும் அடங்கும். முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? ஆரம்பத்தில் ஆடிய 101 ஒருநாள் போட்டிகளில் மந்தமான ஆட்டம்தான். மொத்தம் ஆயிரத்தி 750 ஓட்டங்களைதான் பெற்று இருந்தார்.

அணியில் இருந்து தூக்கி விடலாமா என்றுகூட நினைத்தார்களாம். அதன்பின்னர் 83 போட்டிகளில்தான் பின்னி கட்டினார். இக்கட்டான நேரங்களில் அணிக்கு கைகொடுத்தார்.

கடந்த மாதம் அக்டோபர் 2ல் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் விளாசியதுதான் கண்ணுக்குள் நிற்கிறது. 68 பந்துகளில் சதம் அடித்தார். 84 பந்துகளை சந்தித்து 139 ஓட்டங்களைக் குவித்து அவுட்டாகாமல் திரும்பியது அசத்தல். பத்து பவுண்டரிகள், ஒன்பது சிக்ஸர்களும் அதில் அடக்கம். பத்து விசிறிகளுக்கு வாழ்க்கை வெறுத்தது.

இந்தியாவுக்கு எதிராக குறைந்த பந்துகளில் சதம் போட்ட பாகிஸ்தான் வீரர் என்ற பெருமை முன்னர் மியாண்டாட்டுக்குச் சொந்தம். 73 பந்துகளில் சதம் போட்டிருந்தார். அதனை உடைத்து விட்டார் இஜாஸ் அஹமட்.




## உயிர்ப்பூ

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் 91 இலட்சம் ஏக்கர் பாலைவனப் பாதுகாப்பு தேசிய வனம் உள்ளது. இதனுள்ள இயற்கை வளத்தைப் பாதுகாக்க மாநில அரசாங்கம் 1994ல் ஒரு சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனுள்ள ஜோசுவா தேசிய வனத்தில் இயற்கை அழிவுகளால் பாதிப்படையாமல் இருப்பதற்காக [illegible] பிராந்தியத்திலிருந்து சில பூண்டுகள் கொண்டுவரப்பட்டு நடப்பட்டன. இவை கடும் சிவப்பு வர்ணம் உடையவை.

இச்செடியின் மலர்கள் (படத்தில்) மிக அழகானவை. ஆனால் இச்செடிகள் மிக வேகமாக அழியத் தொடங்கியிருக்கின்றன. [illegible]



வாரமலர் தினமுரசு
நவ.09–15,1997

படிப்பகம்